

கல்கி

KALKI 14.6.92 ரூ. 3.00
பொன்விழா ஆண்டு



திரையுலகுக்கு ஒரு டிக்கெட்?



முட்டை— அன்றாடம் உணவிலே அத்தியாவசியமான வைட்டமின்களைப் பெற அபாரமான வழி.

இதிலே, நோய் எதிர்ப்புச் சக்தியை தரவல்ல வைட்டமின் 'ஏ' நல்ல ஜீரண சக்திக்கு அவசியமான வைட்டமின் 'பி' சத்துக்களின் அனைத்து வகைகள் மற்றும் வலுவான எலும்புகளுக்கு வைட்டமின் 'டி' செறிந்துள்ளன.

உங்கள தேய்ந்துபோன திசுக்களைப் புதுப்பிக்கவும், உங்கள் கண்மணி சிசுவ வளர்வதற்கும் அவசியமான புரதச் சத்து



அவித்த முட்டை : [illegible] E-13/14, [illegible] S. No. 559/AB [illegible] புனே-411 037.

முட்டையிலே செறிந்துள்ளது.

தவிர ஆரோக்கியமான இரத்தத் திற்கும், சுறுசுறுப்பாக செயல்படவும் அவசியமான இரும்புச்சத்தும், ஃபாஸ் ஃபரஸும் நிறைந்துள்ளது.

அன்றாடம் ஒரு முட்டை உண்பீர், இந்த மல்ட்டி விட்டமின் காப்ஸ்யூல் செய்யும் அற்புதத்தை அறிந்து கொள்வீர்.

**எந்த நாளும் சிறந்தது.
முட்டை உண்ண உகந்தது.**

NECC

நேஷனல் எக்
கோ-ஆர்டினேஷன் கமிட்டி


Enterprise/NECC/90 Tm



ஆர். எம். வீ.

ஜானகியின் ஆதரவாளர்களான ராசாராம், வீரப்பன் ஆகியோர் மந்திரி பதவியிலிருந்து கழற்றி விடப்பட்டதைத் தொடர்ந்து, அடுத்து முத்துசாமியா அல்லது கே. ஏ. கேயா என்று அ. தி. மு. க. வட்டாரத்தில் பட்டிமன்றம் நடந்தது. ஆனால், தாற்காலிகமாக, இவர்கள் தலையில் கைவைக்காமல் வீரப்பனின் ஆதரவாளர் சைதை துரைசாமியைக் கட்சியை விட்டு நீக்கியிருக்கிறார் ஜெ. ''சைதையார் ஒரு காலத்தில் வீரப்பனின் தீவிர ஆதரவாளர். கடந்த சில மாதங்களாக வீரப்பன் வீட்டருகில் கூட இவரைக் காண முடியவில்லை'' என்றார் தி.நகர் பகுதி கழகப் பிரமுகர் ஒருவர். சைதையாருடன், மடுவை ராமச்சந்திரன் கோவைத்தம்பி ஆகியோரும் நீக்கப்பட்டிருக்கிறார்கள். இதில் மடுவங்கரை ராமச்சந்திரன் தொடர்ந்து ஜெ. அணியில் இருப்பவர். சைதாப்பேட்டை, கிண்டி பக்கம் ஜெ. போகிறார் என்றால் அறுபது அடி உயர கட்அவுட்களை வைத்து அசத்துகிறவர். கோவைத் தம்பி விஷயம் சற்று பரிதாபகரமானதுதான். மவிதர், அரங்க நாயகத்துக்கு வேண்டியவராக ஒரு காலகட்டத்தில் இருந்தவராம். சமீப காலங்களில் அமைச்சர் செங்கோட்டையனுடன் நெருங்கிப் பழகிக் கொண்டிருந்தவர். புரட்சித் தலைவி எங்கு எந்த விழாவுக்குப் போனாலும் பிரபல பத்திரிகைகளில் விளம்பரங்களை வெளியிட்டவர்.

''மந்திரி லெவலிலிருந்து இறங்கி ஜானகி அணியில் இருந்த இடைநிலைத் தலைவர்கள் மீதும் ஜெ. கை வைக்க ஆரம்பித்து விட்டாரே'' என்று கழகப் பிரமுகர் ஒருவரைக் கேட்ட போது, ''சைதை துரைசாமி, மடுவை ராமச்சந்திரன் நீக்கங்களுக்குக் காரணம், அவர்கள் (சசிகலா) நடராஜனுக்கு நெருங்கியவர்களாகச் செயல்பட்டதுதான். கட்சி விஷயங்களிலோ, அரசு விஷயங்களிலோ, யாரும் நடராஜனை அணுக வேண்டாம் என்று முதல்வர் பல முறை சொல்லியும் கேட்காமல் இவர்கள் தொடர்ந்து நடராஜனோடு தொடர்பு கொண்டிருக்கிறார்கள். 'அவர்கள் கதி இது தான்' என்று காண்பித்திருக்கிறார் அம்மா'' என்றார் அவர்.



நடராஜன்



சைதை துரைசாமி

'தராசு' பத்திரிகையின் மீது நடராஜன் கேஸ் போட்டிருக்கிறார். கோர்ட்டுக்கு வந்த ஆசிரியர் ஷ்யாமுடன் நடராஜன்

தொடர்கிறது கல்தா நாடகம்

கோஷ்டியினரான சைதையாரும், மடுவையாரும் சர்ச்சையில் இறங்கியிருக்கிறார்கள். இதைக் காரணமாக வைத்துக் கொண்டு, கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதாக அவர்கள் வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள்.

''மொத்த விஷயத்தையும் பூதக் கண்ணாடி வைத்துப் பார்த்தால், நடராஜன் தமக்கு வேண்டியவராக இல்லை என்று வெளியுலகுக்குக் காண்பித்துக் கொள்வதற்காக, ஜெ. இந்த விஷயத்தைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார் என்பது புரியவரும். விவரம் தெரியாமல் இதில் தலையைக் கொடுத்தவர்கள், தூக்கியெறியப்பட்டிருக்கிறார்கள். நடராஜன் செல்வாக்கு அப்படி ஒன்றும் குறைந்து போய் விடவில்லை'' என்று சொன்னார் கட்சிப் பிரமுகர் ஒருவர்.

மதுரையில் நடைபெற இருக்கின்ற மாநாட்டுக் கமிட்டிகளில் கூட ராசாராம், வீரப்பனுக்கு இடம் இல்லை. பாவம் ஆர். எம். வீ. தம் வீட்டிற்கு முன்னால் போலீஸ்காரர்கள் தங்குவதற்குப் புதியதாக ஓர் அறை கட்டினார். அறை கட்டிய அதிர்ஷ்டம், பதவி பறிபோய்க் காவலும் இல்லாமல் போய்விட்டது!

அடுத்ததாக நால்வர் அணி என்றமைத்து ஜெயைக் கடுமையாக விமர்சித்து வந்தவர்கள் மீதும் நடவடிக்கை வர இருக்கிறதாம்! நால்வரில் இருவர் எதிர்க்கட்சியில் இருக்கிறார்கள். நெடுஞ்செழியனும், அரங்கநாயகமும் கழகத்தில் இருக்கிறார்கள். ராஜ்ய சபைத் தேர்தல், அ. தி. மு. க. மாநாடு, ஜனாதிபதி தேர்தல் எல்லாம் முடிந்த பிறகு பல பரபரப்பான காட்சிகளை எ தி ர் பா ர் க் க லா ம் என்று அ. தி. மு. க. வட்டாரத்தில் பேசப்படுகிறது.

- ப்ரியன்

சென்னைவாசிகளுக்கு ஒரு குவிஸ்:



❑ சென்னையில் லஸ் எங்கிருக்கிறதென்பது தெரியும். ஆனால்... 'லஸ் சர்ச்' என்பது எது? அது எங்கே இருக்கிறது?

'லேடி ஆஃப் தி லஸ்' என்ற பெயரால் அழைக்கப்படும் அன்னை மரியாளுக்கான சர்ச் இஸபெல்லா மருத்துவமனைக்கருகே உள்ளது.

- கைலாஸ்

❑ பிரெஞ்சுப் புரட்சி, முதல், இரண்டாம் உலக மகாயுத்தங்கள், மனிதன் நிலவில் இறங்குதல் இவை நிகழப் போகும் ஆண்டுகளை நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பே நா ஸ் ட் ரா ம ஸ் என்ற பிரெஞ்சுக்காரர் ஜோதிட முறைப்படி துல்லியமாகக் க ண க் கிட்டு ஒரு நூ லி ல் எழுதியுள்ளாராம். அதனால் என்ன என்கிறீர்களா? 1995-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ந் தேதி மூன்றாவது உலக மகாயுத்தம் வெடிக்கும் என்றும் இவர் எழுதி வைத்துள்ளாராம்!



- அ. ஷண்முகசுந்தரம்



''மு த் து ம் துறந்துட்டு... சாமியாரா போறேன்னே! அப்புறம்... ஏன் கவலையா உட்கார்ந்து இருக்கே?''

''ரெண்டு செட் காவி டிரஸ் வாங்க காசில்லே எ ன் று தான்!''

- ஜீ. வி.

''உங்க படம் என்னாச்சு?''

''ஆறு பாட்டு, மூணு ஃபைட் எடுத்தாச்சு...''

''பேஷ்! அப்ப, சீக்கிரம் ரிலீசாயிடும்னு சொல்லுங்க!''

''ஊகூம். அதைச் சேர்க்க இன்னாறும் கதை கிடைக்கலையே!''

- ஆர். வசந்தகுமார்



மேலை நாடுகளில் எல்லாம் பேராசிரியர்கள் கருத்துச் சொல்ல வேண்டும். கட்டுரைகள் தயார் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அந்த வேலைக்கே அவர்கள் பொருத்தமில்லாதவர்கள் என்று கருதப்படுகிறார்கள்.



நா. மகாலிங்கம்

சிந்தனை: முன்னேற்றத்தின் அடிப்படை

நாட்டிலுள்ள பல்வேறு பிரச்னைகளைப் பற்றியெல்லாம் சிந்திக்க வேண்டியவர்கள் அரசியல்வாதிகள் மட்டுமல்ல. பொருளாதார அறிஞர்கள், பொறி இயல் வல்லுனர்கள் போன்றவர்கள் தான் வழிகாட்ட வேண்டும்.

ஆட்சிப் பொறுப்பிலுள்ள அரசியல் தலைவர்களும் அதிகாரிகளும் கலந்தாலோசித்து முடிவுகள் எடுக்கிறார்கள் என்பது சரி. ஆனால் அவர்களுக்கு வழிகாட்ட வேண்டிய கடமை அறிஞர்களுக்கு உண்டு. அறிஞர்கள் சொல்வதைச் செவிமடுத்துக் கேட்டுச் சாதக பாதகங்களை எடை போட்டுச் செயல்பட வேண்டிய பொறுப்பு, அதிகாரிகளுக்கும் ஆட்சியில் அமர்ந்திருக்கும் அரசியல்வாதிகளுக்கும் உண்டு. பொருளியல் துறைக் கல்வி நிறுவனத்தில் முதல்வராக இருந்த பேராசிரியர் மகாலானாபிஸ்தான் நம்முடைய ஐந்தாண்டுத் திட்டங்களுக்கெல்லாம் வடிவமைத்துத் தந்தவர். நம்மிடையே டாக்டர் நாராயணசாமி, சுந்தரராஜன், டாக்டர் அப்பாதுரை போன்றவர்கள் இருந்தார்கள். குமரப்பா போன்றவர்கள் காந்தியச் சிந்தனைகளில் வழிகாட்டினார்கள். இப்போதெல்லாம் அப்படிப்பட்டவர்கள் இல்லை.

கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள் நிறைய ஏற்பட்டு விட்டனவே தவிர, பேராசிரியர்களின் கருத்துக்கள் வெளிவர மறுக்கின்றன. இதற்குக் காரணம், பல்கலைக் கழகங்களில் சுயச்சார்பு ''ஆட்டானமி'' இல்லை.

அமெரிக்காவில் பல்கலைக் கழகத் தலைவர் நிரந்தரமானவர். பேராசிரியர்கள் தாற்காலிகமானவர்கள். ஒன்பது மாதம் தான் அவர்கள் ஊதியம் பெறுகிறார்கள். கோடை விடுமுறையில் ஊதியம் கிடையாது. துணைவேந்தர் உட்பட மிகவும் திறமை வாய்ந்த பேராசிரியர்கள் மட்டும் - மூன்றில் ஒரு பங்கு - நிரந்தரமானவர்களாக இருக்கலாம். மீதமுள்ள இரண்டு பங்கு தாற்காலிக நியமனம்தான்.

இங்கே அப்படி இல்லை. துணைவேந்தர் தாற்காலிகம். மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அரசு பார்த்து நியமனம் செய்கிறது. விரும்பினால் மேலும் ஒரு மூன்றாண்டுக் காலம் பதவி நீட்டிப்பு வழங்கலாம். ஆனால் கடைநிலை ஊழியர் முதல் பேராசிரியர்கள் வரை எல்லோரும் நிரந்தரமானவர்கள். ஆறு மாதம் ஒரு வருஷம் வேலை பார்த்தால் போதும்... அப்புறம் எல்லோரும் நிரந்தரம். இப்படியொரு முறை இருப்பதால் ''வைஸ் சான்ஸலர்தானே... இன்று இருப்பார், நாளை போய் விடுகிறார்'' என்கிற மாதிரி ஓர் அலட்சியம் வந்து விடுகிறது. துணைவேந்தர்களால் தீவிரமாக ஏதும் செய்ய முடிவதில்லை.


மேலை நாடுகளில் எல்லாம் பேராசிரியர்கள் கருத்துச் சொல்ல வேண்டும். கட்டுரைகள் தயார் செய்ய வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் அந்த வேலைக்கே அவர்கள் பொருத்தமில்லாதவர்கள் என்று கருதப்படுகிறார்கள். நம் நாட்டில் அந்தகைய சூழ்நிலை இல்லை. ஆகவே சிந்திக்க வேண்டியவர்கள் சிந்திப்ப தில்லை. செல்வாக்குமிக்க வயதானவர்கள், ஓய்வு பெற்றவர்கள் சிந்திக்கலாம். அவர்களும் கூடக் கருத்துக்களைச் சொல்லத் தயங்குகிறார்கள். கவர்னர் வேலை, அல்லது வேறு பதவி ஏதாவது கிடைக்குமா என்று நினைக்கிற போது எதையாவது அரசுக்கு எதிராகப் பேசிக் கிடைக்கக் கூடியதைக் கோட்டை விடுவானேன் என்று பார்க்கிறார்கள்.

பத்திரிகைகளும் (ஒரு சில தவிர) இது மாதிரிப் பிரச்னைகளை அணுகுவதில்லை. அவர்களும் அரசுத் துறை நிறுவன விளம்பரங்கள், அரசின் விளம்பரங்கள் என்று கிடைக்கும் விளம்பர வருவாயைப் பார்க்கிறார்கள். இப்படி அரசைச் சார்ந்து இருப்பதால் அவர்களுக்கு விரோதமாக எழுத அதிகம் யோசிக்க வேண்டியிருக்கிறது.

எதிர்காலத்தைப் பற்றித் தொலை நோக்கோடு ஆக்கபூர்வமான முறையில் சிந்திப்பதும் எழுதுவதும் அவசியம். அதைவிட முக்கியம் இவ்விதம் எழுதப்படுவதையும் பேசப்படுவதையும் ஆட்சியில் இருப்பவர்களும் அதிகார வர்க்கத்தில் இருப்பவர்களும் படித்தும், கேட்டும் பயன் பெற வேண்டும். கோபப்படுவதைத் தவிர்த்து, நல்ல அம்சங்களை ஏற்றுச் செயல்படுகிற மனப்பக்குவத்தைப் பெற வேண்டும். இந்த மனப்பான்மை வெளிப்படுத்தப்பட்டால் மேலும் பல சிரிய சிந்தனைகள் பிறந்து நாடு துரிதமாக முன்னேறும்.


ஒரு திருத்தம்

கல்கி 3.5.92 இதழில் எனது கட்டுரையின் முதல் பாரா 11வது வரியில் மூன்று லட்சம் என்று அச்சாகியுள்ளது தவறு. மகாநதி - காவேரி இணைப்பு ஏற்பட்டால் தஞ்சையில் முப்பது லட்சம் ஏக்கரில் இருபோகம் விளைய நீர் கொண்டுவர முடியும். மூன்று லட்சமல்ல.



Glacto®

இப்போது இரண்டு ஃபார்முலாக்களில்!



500 கிராம்
ரூ. 51/-



க்ளாக்டோ 1 - பிறந்த குழந்தைக்கான ஃபார்முலா, பிறந்ததிலிருந்து 6-மாதம் வரை

க்ளாக்டோ 2- தொடர் ஃபார்முலா, 6-ம் மாதம் முதல்

முக்கிய அறிவிப்பு

தாய்ப்பால் உங்கள் குழந்தைக்குச் சிறந்தது.

நுகர்வோர் நலனைக் கருதி வெளியிடப்பட்டது.

Gx.652.92.Tm

திரையுலகுக்கு ஒரு டிக்கெட்?

சினிமாவுக்கென்று தனி டான்ஸ் உண்டு. அது தெரியாமல் சினிமாவுக்குள் நுழைய முடியாது. அதற்கான டான்ஸ் மாஸ்டர்கள் முன்பு தனித்தனியாக எங்கெங்கோ கற்றுக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்போது மிகவும் வசதியாக நடிகர் சங்கக் கட்டடத்திலேயே கற்றுத் தருகிறார்கள். இங்கே கற்றுக் கொள்பவர்கள் அனைவருக்குமே சினிமா சான்ஸ் கிடைத்து விடுகிறதா? அல்லது அந்தக் கனவுலகத்துக்குள் நுழையும் கனவுகள் வெறும் கனவுகளாகவே போய் விடுகின்றனவா? அலசுகிறது இக் கட்டுரை...

''என் நடன வகுப்புக்கு வருபவர்களில் பெரும்பாலும் சினிமா ஆர்வத்தில்தான் வந்து சேர்கிறார்கள். அல்லது சினிமா வாய்ப்புக் கிடைத்த பிறகு, அதைக் காப்பாற்றிக் கொள்ள நடனம் கற்றுக் கொள்ள வருகிறார்கள். அவர்களைத் தயார் செய்து அனுப்புவதுதான் என் வேலை!'' - என்று பேச்சைத் துவக்குகிறார் டான்ஸ் மாஸ்டர் கலா.

''ஸ்டுடியோக்களின் கான்க்ரீட் சுவர்களுக்குள் ரகசியமாய் இருந்த படப்பிடிப்பு என்றைக்குச் சித்தூர்த் திண்ணைகளுக்கும், கிராமத்து வேலிப் படல்களுக்கும் இடம்பெயர்ந்ததோ அன்றைக்கே இந்த மாற்றம் துவங்கிற்று. கனவுத் தொழிற்சாலையாய் இருந்த சினிமா, திறமையிருந்தால் யாருக்கும் கைவரும் என்று நம்பிக்கையை விதைத்தது. பலன்? சாரிசாரியாய்ச் சினிமாவை நோக்கி இளைஞர்கள்!


''சினிமாக் கனவுகளுடன் மட்டுமே வரும் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் இந்தத் துறையின் சிரமங்கள் தெரியாது. அதனால் முதலில், என் மாணவர்களுக்கு யதார்த்தம் புரிய வைப்பேன். நடன இயக்குனர் ஆக வேண்டுமானாலும் சரி, நடிக்க வேண்டுமானாலும் சரி ஆர்வம் இருந்தால் மட்டும் போதாது: திறமை இருக்க வேண்டும். உழைக்கச் சலியாத மனது இருக்க வேண்டும். காமிரா பற்றின அறிவும், உடன் பணியாற்றும் குழுவுடன் இணைந்து செயலாற்றும் மனப்பான்மையும் இருக்க வேண்டும்...'' என்றவர், சிறிது நிறுத்தி விட்டுத் தொடர்கிறார்: ''எல்லாத் துறைகளிலும் போல இங்கேயும் போட்டிகள் உண்டு. நான் சொல்வேன்! உன் லட்சியம் நடிப்பதோ, நடன இயக்குனராவதோ எதுவானாலும் சரி. ஓடிக் கொண்டே இரு. அப்போதுதான் குறைந்தபட்சம் இப்போது நிற்கும் இடத்திலாவது நின்று கொண்டே இருப்பாய்!''

''மீட் மிஸஸ் ஜெயந்தி. கிளாஸிக்கிலிருந்து ராக் அண்டு ரோல் வரை அத்தனையும் அத்துப்படி. ஓயாத படப்பிடிப்புகளால் என்னால் நடிகர் சங்கத்திற்குத் தொடர்ந்து வர முடிவதில்லை. அதனால் இந்த நடன வகுப்பின் மற்றொரு காப்டன் இவர்தான்!'' என்று தமது சகோதரியை அறிமுகப்படுத்துகிறார் கலா.

அப்போது 'வண்ண வண்ணப் பூக்கள்' வினோதினி வந்து, நின்று முத்திரை பிடித்து, குரு நமஸ்காரம் செய்கிறார். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் என்று அங்கே நூறு பேருக்கு மேல் குழுமி இருக்கிறார்கள். எதிர் இருக்கைகளில் பெற்றோர்கள். பாடல் துவங்குகிறது. முதலில் பெண்கள் குழு. முதல் நாள் ஸ்டெப்ஸ்களை திரும்பச் செய்யச் சொல்லி விட்டு புது அசைவுகளைச் சொல்லித் தருகிறார்.

''வேகம் இருக்கணும். முகத்துல சிரிப்பு இருந்துக்கிட்டே இருக்கணும் பய்யா. நளினம் தெரியலையே?'' - ஒவ்

☛ தேவேந்திரன்





☛ நடன குரூப்

வொருவரையும் அனுகித் திருத்துகிறார். ''கமான் ஒன், டு... ஒன் டு த்ரி'' - கைதட்டி ஆணை பிறப்பிக்க, ஒட்டுமொத்தக் குழுவும் கறுகறுப்பாய் இயங்குகிறது. ''போதும். கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கங்க... ரெடியா, அடுத்த பாட்ச் வாங்க!''

''**எ**ன் முதல் பாட்ச்சில் கற்றுக் கொண்டவர்களில் ராம்கி, அருண்பாண்டியன் இவர்கள் இருவரைச் சொல்லலாம். அப்புறம் செண்பகம், நந்தினி, 'பவுனு பவுனுதான்' ரோகிணி, டிஸ்கோ சாந்தி, ஹரி, விக்ரம், சின்னத்தாயி விக்னேஷ், வசந்த மலர்கள் ரத்தீஷ் குமார்...'' - பட்டியல் நீளுகிறது!

தினமும் இங்கே தயாரிப்பாளர்கள் நான்கைந்து பேராவது வந்து அமர்ந்து பார்ப்பதுண்டாம். ''நடனத்தின் போது பார்த்து நானே பல மாணவிகளை, டைரக்டர்களுக்கும், தயாரிப்பாளர்களுக்கும் சிபாரிசு செய்திருக்கிறேன். அவர்களில் பலர் பிரமாதமாய் ஜெயித்துக் காட்டியும் இருக்கிறார்கள்!'' - என்று சொன்னவர், ''நீங்களே, இங்குள்ள சிலரிடம் பேசிப் பாருங்களேன்!'' என்கிறார்.

பேசுகிறோம்.

''பரதம் போன்ற கிளாஸிக்ஸ் கற்றுக் கொண்டவள்தான் நான். இந்த வகை நடனம் - இங்கே இத்தனை பேருடன் இணைந்து கற்றுக் கொள்ளும் போது நிறைய பயன்கள் கிடைக்கின்றன. முதலில் தன்னம்பிக்கை. அடுத்தது சினிமாவிலுள்ள நிகழ்கால ட்ரெண்டையும் புரிந்து கொள்ள முடிகிறது. புதுப்புது உத்திகளை அறிந்து வைத்துக் கொள்ளலாம். உடம்பு சொன்னபடியெல்லாம் நெளியும் பயிற்சி கிடைக்கிறது. இவை படப்பிடிப்பில் பெரிதும் உதவி புரிகின்றன'' என்கிறார் ரோகிணி.

''இங்க வர்றப்ப மகா குண்டு நான். இப்போ பத்துப் பதினைந்து கிலோ எடை குறைந்து விட்டேன். இனிமேல் எங்க அப்பாவே என்னைக் கதாநாயகனாக நடிக்கச் சொல்லிக் கேட்கலாம்!'' என்கிறார் இங்கே நடனம் கற்கும்போதே கஸ்தூரி ராஜாவின் மவுனமொழி படத்தில் வில்லனாக வேடம் கிடைத்து ஒத்துக் கொண்டிருக்கும் தெலுங்குப் படத் தயாரிப்பாளரின் மகனான ஸ்ரீமன்.

மற்றொருவர் ரத்தீஷ் குமார். இவருக்கும் இதே ரீதி அனுபவம்தான். நடன வகுப்பில் பார்க்கப்பட்டு வஸந்த மலர்கள் படத்தில் வில்லன் வேடம் வாய்த்திருக்கிறது! ''ஆரம்பத்தில மாஸ்டர் சொல்லிச் சில விளம்பரப் படங்களில் வாய்ப்பு வந்தது. ஒத்துக் கொண்டேன். நடனம். அடுத்து வில்லன் வேடம். நடனம். ஃபுட் வொர்க், கண்ணசைவு, ரிதம், வேகம் என்று பல அடிப்படையான விஷயங்களுக்கு நடனம் முக்கியமில்லையா? எனக்கு நம்பிக்கை இருக்கிறது. கதாநாயக சந்தர்ப்பம் நிச்சயம் கதவைத் தட்டும்'' என்கிறார் அவர்.

'**சி**ன்னத்தாயி' விக்னேஷ், சொல்கிறார் : ''நான் ஈரோட்டுக் காரனுங்க. ப்ளஸ் டூ பாஸிலேயே நடிக்கணும்னு ஊரை விட்டு ஓடி வந்திட்டேன்! இங்கே அங்கே இருந்து கடைசியில் பாலுமகேந்திரா சாரிடம் அறிமுகம். அவர் என்னைத் தமது 'வண்ண வண்ணப் பூக்களு'க்காகத் தேர்வு செய்து மூன்று வருடம் பயிற்சி கொடுத்தார். அவர் சொற்படி இயல்புதான் நடிப்பு. எனக்கு ஏராளமாகக் கத்துக்



☛ கலா



☛ ஜாந்தி

கொடுத்த வந்தனத்திற்குரிய புரொபலர் அவர்.''

நாம் வியப்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

''ஆனால் கடைசி நிமிடத்தில் எனக்கு உடல்நிலை சரியில்லாமல் போய்... வாய்ப்பு நழுவி விட்டது. அப்புறம் சின்னத்தாயி மூலமாக அறிமுகம். மேலும் படங்கள். அதற்கு உதவியாக நடன வகுப்பு. வெளிப்புறப் படப்பிடிப்புகளில், தயக்கமில்லாமல், கூச்சமில்லாமல் நடனமாட என்னால் முடிகிறதென்றால், காரணம் இந்த நடன வகுப்புத்தான்'' என்று விக்னேஷ் முடிக்கும் போது, 'மீரா' பட கதாநாயகன் விக்ரம் வியர்வை வழிய வந்து நம்மைச் சந்திக்கிறார்.

''அப்பா விமான நிலையத்தில் கான்டிராக்டர். நிறைய வேடங்களைச் செய்த நடிகர். இப்போது தமது கனவு, விருப்பம், லட்சியங்களை என் மீது ஏற்றியிருக்கிறார். நடனம், சிலம்பம் என்று நிறையக் கற்றுக் கொள்ள முனைந்திருக்கிறேன். இப்போது ஃபீல்டில் போட்டி அதிகம். அதைச் சந்திக்க, வெற்றி கொள்ள நம்மை மேலும் இப்படித் தயார் செய்து கொள்ள வேண்டி இருக்கிறது. நேரம் கிடைக்கையிலெல்லாம் வந்து பயிற்சி செய்வேன்!''

குழு மொத்தத்திலும் நட்பும் சகோதர உணர்வும் பல்வேறு ரூபங்களில் பரவித் தெரிகிறது. வருடம் ஒருமுறை இவர்கள் பிக்னிக் போவதுண்டு. கராத்தே மாஸ்டர் ஹுசைன்தான் (இங்கே நடனம் கற்றுக் கொள்பவர்) இந்தக் குழுவின் தலைவர்.

இந்தியா முழுக்கக் சுமார் நூற்று எண்பத்தாறு கிளைகள் வைத்துக் கராத்தே கற்றுத் தரும் ஹுசைன் ஏன் இந்த நடனம் கற்றுக் கொள்ள வேண்டும்?

பதில் : ''கராத்தே பயிற்சியில் என் மனம் கடினமாகி விடுகிறது. ஆனால் நடனம் என்னை இளகச் செய்கிறது. ஒரு பள்ளியில் படிக்கிற உணர்வும், உன்னதமான கற்றுப்புறமும், நட்பும் என்னை மேலும் இளமையாக உணர வைக்கின்றன. எனக்கு அது தேவை!''

''இங்கே பலரும் கற்றுத் தேறிச் சிறப்பாய் வெளிவந்தாலும் ஓரிருவருக்குத் தட்டிப் போய் விடுவதும் உண்டு. உதாரணமாய் முரளி. பின்னணிப் பாடகி எஸ். ஜானகியம்மாவின் மகன். எத்தனை திறமை? எவ்வளவு ஹான்ட்ஸம்? பிரமாதமாய் வருவார் என்று எதிர்பார்த்தேன். முதல் வாய்ப்பே சரியாய் அமையவில்லை!'' என்று பெருமூச்சு விடுகிறார் கலா.

அதற்குப் பதிலளிப்பது போல், 'தங்கத்தின் தங்கம்' படத்தில் ராமராஜனின் ஜோடியாக நடித்த ராகசுதா, ''நான் என்றும் மனம் தளர்ந்ததில்லை. வாய்ப்பின்மையைச் சகஜமாய் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். மற்றொரு வாய்ப்பு சிறப்பாய்த் தேடி வரும்!'' என்கிறார்!

உடன் வந்திருந்த ஒரு பெற்றோர் சொன்னது : ''வெளியில் கார், கட்டடங்கள், மனிதர்கள் என்று நாம் பார்க்கும் உலகத்திலிருந்து இது மாறுபட்ட உலகம். இந்த இளைஞர்களின் முயற்சியை, ஆர்வத்தை, பயிற்சியைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தால் நம்மையும் அந்த உற்சாகம் தொற்றிக் கொள்கிறது. நாள் முழுதும் அது உடன் வருகிறது!''

தேவேந்திரன் (நடன) மாஸ்டர் சொன்ன பல தகவல்கள் புதியவை. மாறுபாடானவை. ''சினிமா உலகில் கிரீடமும் கிடைக்கும். தோல்வியும், சோதனைகளும், அவமானங்களும் கூட வாய்க்கும்'' - என்கிறார்.



''பாட்டி இறந்து விட்டதாக லீவு லெட்டர் எழுதிக் கொடுத்தது தப்பாப் போச்சு.''


''ஏன்?''

''துக்கம் விசாரிக்க மானேஜர் மாலையோடு வீட்டுக்கு வந்துட்டார்!''

- எஸ். சந்திரசேகர்

●● பெங்களூர், ஸ்ரீராஜேஸ்வரி நகரில், அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில், தரிசனம் செய்யும் யாருமே, எங்கும் கற்பூரம் ஏற்றி வணங்கக் கூடாது.

- கே. என். பாலகிருஷ்ணன்


காம்ப்ளான் கமாண்டோஸ்
அதிரடிப்படை இதோ!
வந்துவிட்டனர்
இதோ! ஐந்து வீராதி
வீரர்கள் – காம்ப்ளான்
கமாண்டோஸ்.
எதற்கும் அஞ்சாதவர்கள்,
பலசாலிகள், தீரச்
Complan
இலவசம்!
ஒரு காம்ப்ளான் கமாண்டோ
(பொம்மை) ஒவ்வொரு
1 கிலோ சாக்லேட் பேக்குடனும்
23
மூலாதார
சத்துணவுகள்
திட்டமிட்ட
விகிதங்களில்
காம்ப்ளான்®
திட்டமிட்ட பரிபூரண உணவு



''பிளஸ் டூவிலே நான் பாஸ் பண்ணினாலும் பண்ணாட்டாலும் ஏதாவது ஒரு பரிசு கொடுக்கறேனுட்டார் அப்பா!''

''பெயிலாயிட்டாலும் பரிசா?''

''ஆமான்டா! 'பாஸாயிட்டா ஒரு சைக்கிள் வாங்கித் தரேன்; பெயிலாயிட்டா ஒரு சைக்கிள் ரிக்ஷா வாங்கித் தரேன்'னுட்டார்.

- ஆர். ஆர். பூபதி



''உன்னை ஏட்டு திட்டினாரா, ஏம்பா?''

'' 'நாலஞ்சு பஸ்கல ஏறி, இறங்கியும் எதுவும் போணியாகலை'ன்னு சொன்னேன்; அவர் கடுப்பாகி, 'உனக்கெல்லாம் பிளேடு ஒரு கேடா...?'ன்னு திட்டினார் தைனா!''

-சீர்காழி வி. ரேவதி

''ஹூம்... ஒரு அருமையான கேஸ் கிடைச்சும் ஒரு சின்ன விஷயத்தால் அந்தக் கேஸை நான் எடுத்துக்க முடியாமல் போயிடுச்சு!''

''ஏன்?''

''என் கருப்புக் கோட்டை பெண்டாட்டி பாத்திரக்காரன்கிட்டே போட்டுட்டாளே!''

- வேடுபரி எஸ். ரமேஷ்



''நடிக்கப் பாத்திரம் தேடி வந்தேன். துலக்கத்தான் பாத்திரம் கிடைத்தது. ஹோட்டலில் வேலைக்குச் சேருவதை விட ஊருக்குப் போய் விடப் போகிறேன்!'' - என்று விரக்தியுடன் பேசிய நடிகர் வெற்றியைச் சமாதானப்படுத்தி, நடனம் கற்றுத் தந்து, கார்டு வாங்கித் தந்து... இன்று அவருக்கும் ஒரு வெற்றி கிடைத்திருக்கிறது.

சிலர் நடிப்பார்வத்தில் வந்து, முட்டி மோதி, அது கிடைக்காமல் போக, நடனக் குழுவில் இருந்தால் கூடப் போதும் என்ற முடிவுக்கு வந்து விடுகிறார்கள். அப்படி நடனக் குழுவில் இடம்பெற உறுப்பினர் கார்டு முக்கியம். அதை எப்படிப் பெறுவது?

கமிட்டி உறுப்பினர்கள் இருப்பார்கள். அவர்கள் முன் சாஸ்த்ரீய, மேற்கத்திய மற்றும் கிராமிய நடனங்கள் ஆடிக் காட்ட வேண்டும். தேர்வு பெற்றால்தான் கார்டும், நடன வாய்ப்புகளும்!

கையில் காசில்லாமல், வெளியூரிலிருந்து ஓடி வந்து விட்ட சிலருக்குப் புத்தி மதி சொல்லி, தங்க வைத்து, ஊருக்குத் தந்தி கொடுத்துப் பெற்றோருடன் திருப்பி அனுப்புவதும் உண்டு. மதுரையில் மூர்த்தி என்று ஒருவர் அப்படி திரும்பிப் போய் இன்று இன்ஸ்பெக்டராகப் பணிபுரிகிறாராம்.

தஞ்சாவூரிலிருந்து நடனம் கற்க வந்தவர் பிரபு என்கிற ஒருவர். பயிற்சியின் போது சைலஜா என்கிற சக மாணவியுடன் காதல் வயப்பட்டு, அது கல்யாணத்தில் முடிந்து, சினிமா பற்றி மறந்து விட்டு ஊர் போய்க் குடித்தனம் செய்ய ஆரம்பித்து விட்டார்! இப்படியும் சிலர்.

''எல்லோராலுமா அவமானங்களைத் தாங்கி பாக்யராஜாகவோ, ரஜினி சாராகவோ ஆக முடியும்?'' என்றவர், மாணவி நந்தாவை அழைத்து அறிமுகப்படுத்துகிறார்.


''எனக்குச் சொந்த ஊர் பெங்களூர். சினிமா மீது ஏராள ஆசை. எஸ். எஸ். எல். சி. படிப்புக்கு மேல் ஓடவில்லை. இங்கே வந்து விட்டேன். உறவினர் வீட்டில் தங்கி, நடனம் கற்று, கார்டு வாங்கி, கிடைக்கிற வருமானத்தில் மேலும் நடனம் கற்றுக் கொள்கிறேன். எனக்கு நம்பிக்கை இருக் கிறது. ஸார்!'' என்கிறார் நந்தா.

இந்த நம்பிக்கை அடிப்படையில்தான் எத்தனையோ பேரைத் தினம் தினமும் தனது மாயவலையில் விழ வைத்துக் கொண்டிருக்கிறது, சினிமா உலகம்!

- சாருப்பிரபாகசுந்தர்

மேலட்டை வண்ணப்படமும் படங்களும் : யோகா



இறைவனின் எண்ணற்ற  தோற்றங்கள்

தெய்வங்கள் : சிவன் தவத்தின் மூர்த்தி, அவனுடைய விசேஷசக்தி தவசக்தி.


தேவி : இறைவனுடைய சக்தி அவளே இறைவனது உணர்வும் ஆற்றலும். உலகங்களின் அன்னையும் சக்தியும் ஆவாள். எல்லா சக்திகளும் அவளுடையவையே.

பிரம்மா, விஷ்ணு, சிவன் இவர்கள் விஸ்வேஸ் வரனின் மூன்று சக்திகளும் மூர்த்திகளும் ஆவார்.

ஞானத்தின் . ஆற்றலால் தடைகளையெல்லாம் நீக்கிடும் சக்தியே கணேசன். கார்திகேயன் பகைச் சக்திகள் மீது பெறும் வெற்றியைக்குறிக்கிறான். தெய்வங்களுக்கு இந்தப் பெயர்களை யெல்லாம் வைத்தது மனிதன்தான். என்றாலும் இறைவன் இருப்பது உண்மை.

ஆதாரம் வைகறை 1988 - 2





பங்கு மார்க்கெட் 600 கோடி ஏற்றம்...
இந்த உலுக்கலுக்கெல்லாம் பயப்பட மாட்டேன்... நம்மை அசைக்க முடியாது!
இதைவிட... உன் ஜம்பம் சாயாது!
பங்கு மார்க்கெட் ஏற்றம் 1000 கோடியாக உயர்வு
பங்கு மார்க்கெட் ஏற்றம் 3000 கோடியாக உயர்வு
உன்னை - யானதைப் பார்த்துக்க பதவியை விட மாட்டேன்!
ஸ்டாலின்
வைகோ.
புரட்சித் தலைவியே வருக... வருக...
ஏனுங்கோ, இங்கன மீனாட்சி அம்மன் கோவிலு இருந்திச்சே... எங்கேங்க? காணலியே...



கல்கி

1992
ஜூன் 14
மலர் : 50
இதழ் : 46
ஆங்கீரச
வைகாசி 32

கலைஞர் மீண்டும் தலைவர்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக மீண்டும் ஒருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் கருணாநிதி. வழக்கம் போல் அன்பழகன், சாதிக்பாட்சா, நாஞ்சில் மனோகரன் அவரவர் இடத்தில். எங்கு பார்த்தாலும் எதேச்சாதிகாரப் போக்கே தலைதூக்கி வரும் சூழலில், உட்கட்சித் தேர்தல்கள் என்று நடத்து, ஜனநாயக மரபுகளை அனுசரிக்கிற கட்சி என்ற அளவில் தி. மு. க. வும் அதன் தலைமையும் வாழ்த்தையும், பாராட்டையும் பெறுகின்றன. என்றாலும், "ஆறாவது முறையாகத் தலைமைப் பீடத்தைக் கலைஞர் அலங்கரிக்கும் தருணத்தில் ஆறு உயிர்கள் பலியாகி இருக்கின்றனவே" என்று அந்தக் கட்சி விசுவாசிகளே கூறி விசனப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதும் கவனத்துக்குரியது.

"உட்கட்சித் தேர்தல் என்று நடத்தாலும் கூடவே உட்கட்சிப் பூசலும் செயல்பட்டுக் கொண்டிருப்பதைத் தானே இது உணர்த்துகிறது? வை. கோபாலசுவாமிக்கும், ஸ்டாலினுக்கும் இடையில் உள்ள மோதல்தானே காரணம்?" என்று நிருபர்கள் கேட்டதற்குக் கருணாநிதியின் பதில் விசித்திரமானது.

"வன்முறை இருந்திருக்கிறது என்பது உண்மை; அது கண்டனத்துக்குரியது என்பதையும் மறுக்க முடியாது" என்ற கலைஞர், அத்துடன் நின்றிருந்தால் பரவாயில்லை. கூடவே, "இந்த வன்முறை, தொண்டர்களிடையே உள்ள உற்சாகத்தை உணர்த்துவதாகும்" என்று சொன்னபோது, குட்டை குழம்பி விட்டார்.

தி. மு. க. தொண்டர்களுக்கு உற்சாகம் வந்தால் கொலை விழும் என்பது அதி விசித்திரமான ஒரு விளக்கம்தான். இந்த விளக்கம், தி.மு.க. தலைமையானது தனது தொண்டர்களைக் கட்டுப்படுத்தும், நல்வழிப்படுத்தும் சக்தியை இழந்து வருகிறது என்பதற்கான ஒப்புதல் வாக்குமூலம். அமைதியான முறையில் உட்கட்சித் தேர்தல்கள் நடத்த முடியாத அளவில், உட்கட்சிப் பூசல்கள் இடையூறு செய்கின்றன என்பதை மறைக்கக் கலைஞர் ரொம்ப சிரமப்பட்டு மத்திய அரசின் உளவுத் துறையை வேறு வம்புக்கிழுத்திருக்கிறார். தி.மு.க. வில் பிளவை ஏற்படுத்த மத்திய அரசு சி.பி.ஐ., ரா. போன்ற உளவுத் துறைகளைப் பயன்படுத்துவதாகக் குற்றம்சாட்டியிருக்கிறார்.

தி. மு. க. வுக்குள் உளவுத் துறை எவ்விதம் பிளவை ஏற்படுத்த இயலும்? ஏதாவது பத்திரிகைகளுக்குப் பொய்யான செய்தி தந்து பகை வளர்க்கப் பார்க்கலாம். அவ்வளவுதான். ஆனால் தி. மு. க. வுக்குள் பர்சனாலிடி மோதல் இல்லையெனில் விரிசலும் இல்லை; விரிசலே இல்லாத இடத்தில் உளவுத் துறை பிளவை உண்டுபண்ண முடியாது. எனவே, கலைஞரின் பேச்சு வெறும் திசை திருப்பும் முயற்சியே. இதனால் கட்சிக்குள் நிலவும் பிரச்னைக்குத் தீர்வு உண்டாகாது. கட்சியைக் குடும்பச் சொத்தாகப் பாவிக்கும் எண்ணம் நீங்கினால்தான் நல்வழி பிறக்கும்.

கருணாநிதியின் வழிகாட்டல் இன்று தி.மு.க.வுக்கு மட்டுமல்ல தமிழகத்திற்கே தேவைப்படுகிறது. (தேசிய முன்னணியில் தி.மு.க. அங்கம் வகிப்பதால் நாட்டுக்கே தேவைப்படுகிறது என்று கூடச் சொல்லலாம்) அபரிமிதமான மெஜாரிடியுடன் ஒரு கட்சி ஆட்சியில் இருக்க, எதிர்க்கட்சியாகச் செயல்படக்கூடிய காங்கிரஸ், ஆளும் கட்சிக்குக் கைகட்டி நிற்க, பாட்டாளி மக்கள் கட்சி மக்களை ஆபத்தான வன்முறைப் போக்குக்கு அழைத்துப் போக, இடையில் மக்களுக்கு ஜனநாயக மரபுப்படி மாற்றுக் கருத்துக்களைக் கூறி சிந்திக்கச் செய்யக்கூடியது இன்று தி.மு.க. மட்டுமே. ஆக, இன்று கருணாநிதிக்கு மிகப் பெரிய பொறுப்பு இருக்கிறது. அதையும் சட்டசபைக்கு வெளியே செய்ய வேண்டிய கஷ்டமான சூழ்நிலை. இதனை அவர் உணர்ந்து நடந்து கொள்ளட்டும். விடுதலைப் புலிகளுக்குத் தடை பற்றிக் கேட்டால், "ஏற்கெனவே சொல்லியாகி விட்டது; எங்கள் நிலை எல்லாருக்கும் தெரிந்ததுதான்" என்றெல்லாம் பேசாமல், நாளுக்கு நாள் மாறி வரும் சூழ்நிலைகளை உணர்ந்து, அதற்கேற்ப நாட்டு நலனைச் சிந்தித்துப் பேச வேண்டும்.

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. - பாரதியார்.

ரியோவில் Earth Summit :

பூமி என்னும் கப்பலில் பயணம் செய்து கொண்டிருக்கும் மானுடம், தனது சுயநலத்துக்காக இயற்கை வளங்களை அழித்தும் மாசுபடுத்தியும் வருவதால் அக் கப்பலே மூழ்கி விடும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. இதனை உணர்ந்து, உலகத் தலைவர்கள் ஜூன் இரண்டாம் வாரத்தில் ரியோ டீ ஜெனீரோ (பிரேஸில்) வில் ஒன்றுகூடுகிறார்கள். Earth Summit என்று அழைக்கப்படும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு குறித்த உச்சி மாநாடு இங்கே நடைபெறும்.

ரியோ மாநாட்டில் முன்வைக்கப்பட இருக்கும் சில திட்டங்கள் :

- நச்சு வாயு வெளியேற்றத்தைக் கட்டுப்படுத்த (குறிப்பாகக் கரியமில வாயு) உலக நாடுகளிடையே ஓர் ஒப்பந்தம்.
- தொழில் அபிவிருத்தி அடைந்த நாடுகள், ஏழை நாடுகளின் சுற்றுச் சூழல் மாசுபடாமல் (அதன் மூலம் உலகச் சுற்றுச் சூழலும் பாதிக்கப்படாமல்) தங்கள் பொருளாதாரத்தை வளப்படுத்திக் கொள்ள உதவும் ஒரு திட்டம். இத் திட்டத்திற்கு ஆண்டுதோறும் 125 பில்லியன் டாலர் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- விரைவில் ஒட்டுமொத்தமாக அழிந்து விடக்கூடியவை என இனங் காணப்பட்ட உயிரினங்களைக் காப்பாற்ற உலக அளவிலான ஒப்பந்தம். இதன் ஓர் அங்கமாக, அத்தகைய உயிரினங்களையும் தாவரங்களையும் உபயோகித்துத் தயாரிக்கப்படும் மருந்துகள், இதர பொருள்களுக்கு ராயல்டி தொகை வசூலித்து, அத் தொகையை அவ்வுயிரினங்களின் பாதுகாப்புக்காகப் பயன்படுத்துவது என ஒரு திட்டம்.

இவ்வாறு உலகளாவிய ஒரு விழிப்புணர்வையும் போர்க்கால அடிப்படையிலான நடவடிக்கைகளையும் கோரும் அளவுக்கு இயற்கையின் சமச்சீர் நிலை பாதிக்கப்பட்டுள்ளதை எண்ணிப் பார்த்தால் 'பகீர்' என்றிருக்கிறது.

- கி. பி. 1500 ஆம் ஆண்டு வரை 500 மில்லியன் என்ற எண்ணிக்கையில் நிலையாக இருந்த உலக மக்கள் தொகை எண்ணிக்கை, 1850 முதல் 1950க்குள் இரட்டிப்பாகியது. 1950 முதல் 1990க்குள் மீண்டும் இரட்டிப்பாகியது. ஐ. நா. சபையின் கணக்கெடுப்புப்படி 2050 ஆண்டுக்குள் அது மீண்டும் பன்மடங்கு உயர்ந்து 10 பில்லியனை எட்டும்!


ஆஃப்ரிகாவின் பல பகுதிகளில் இன்னமும் சராசரியாக எழுக்கும் அதிகமான குழந்தைகள் பெறும் பெண்கள் இருக்கிறார்கள்!

உடனடியாக இந்த மக்கட் தொகைப் பெருக்கத்தை நாம் கட்டுப்படுத்தாவிடில் நோயும் பட்டினியும் நமக்குப் பதிலாக அதைச் சாதித்து விடும்!

அசுரவேக அழிவைத் தடுக்க முடியுமா?

விஞ்ஞானிகளால் அடையாளம் காணப்பட்ட உலக உயிரினங்களின் எண்ணிக்கை 1.4 மில்லியன். இவை தவிர பத்து முதல் எண்பது மில்லியன் வகை உயிரினங்கள் அடையாளம் காணப்படாமலே அடர்ந்த காட்டுப் பகுதிகளில் வாழ்ந்து வருகின்றன என்று விஞ்ஞானிகளால் கணிக்கப்பட்டுள்ளது. ஆனால் இவையெல்லாம் விஞ்ஞானிகளால் அடையாளம் காணப் பட்டுப் பட்டியலிடப்படும் முன்னரே பூண்டோடு அழிந்து விடும் அபாயம் உள்ளது. காரணம், இத்தகைய உயிரினங்கள் வாழும் காட்டுப் பகுதிகள் ஒரு வினாடிக்கு ஒரு ஏக்கர் என்ற அளவில் அழிக்கப்பட்டு வருவதுதான். ஒவ்வொரு ஏக்கரிலும் ஐம்பது முதல் நூறு வகை உயிரினங்கள் அழிகின்றன. ஆண்டொன்றில் அழிக்கப்படும் காடுகளின் அளவோ நான்கு மில்லியன் ஏக்கர்கள்.

காடுகள் அழிக்கப்படுவதால் மழை குன்றி வறட்சி ஏற்படுவது ஒருபுறமிருக்க, அவற்றுடன் அழியும் உயிரினங்களால்



☛ உலகின் வசதி படைத்தவர்களுக்கு உள்ள அதிகப்படி டயர்கள் சுற்றுச் சூழலைப் பாழடிக்குமாறு வீணில் எரியூட்டப்படுகின்றன; அதே நேரத்தில் உலகின் ஏழைகளுள் ஏராள மக்கள் பசியோடு படுக்கச் செல்கின்றனர். இவர்கள் அதிகமானவர்கள் ஏழு பிள்ளைகளைப் பெற்றுக் கொள்கின்றனர். இதற்கெல்லாம் விடிவு காலம் எப்போது?

இயற்கையின் சமச்சீர் நிலை பெரிதும் பாதிக்கப்படுகிறது. ஒன்றுக்கும் பயன் படாதவையென நாம் கருதும் உயிரினங்கள் கூட சமச்சீர் நிலையைப் பாதுகாப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன என்பது மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ள உண்மை.

பூமியிலுள்ள ஜீவராசிகளுக்கு இயற்கையே வழங்கியுள்ள பாதுகாப்புக் கவசங்களையும் நாம் அழித்து வருகிறோம். ஏராளமான மாக வெளியேறி, கான்ஸர் உண்டாக்கும் சூரியனின் புற ஊதாக் கதிர்களைத் தடுக்கும் சக்தி பெற்ற ஓஸோன் வாயுத் திரையைப் பாழ்படுத்தி விட்டது. அண்டார்டிகா பகுதியில் ஓஸோன் திரையில் ஆண்டுதோறும் ஓட்டை விழுகிறது.

வளம் கொழித்த பூமிகளை அளவுக் கதிகமாகப் பயிரிட்டும், ஆடு மாடுகள் மேய்த்தும் பாலைவனங்களாக மாற்றி விட்டோம். ஆண்டுதோறும் 15 மில்லியன் ஏக்கர் நிலம் இப்படித் தரிசாகிப் போகிறது. காடுகளை அசுர வேகத்தில் அழிப்பதால் பூமியில் மண் அரிக்கப்பட்டு கடலோரப் பகுதியிலுள்ள பவழப் பாறைகளில் போய் அப்பிக் கொள்கிறது. இதனால் இந்தப் பாறைப் பகுதிகளில் வாழும் உலகின் மூன்றில் ஒரு பங்கு மீனினங்கள், அழிவை எதிர்நோக்குகின்றன. போதாக்குறைக்கு மீன் பிடி தொழிலில் முன்னேற்றம் என்று கூறிக் கொண்டு மீன்களைப் பிடிப்பதற்குப் பதிலாகக் கூட்டம் கூட்டமாக (மந்தை) வாரிக் குவிக்கிறோம். இதனால் கணக்கற்ற மீனினங்கள் அழிவை நெருங்கிக் கொண்டிருக்கின்றன.

இப்படி நிலம், நீர், வானம் என்று உலகின் எல்லாப் பகுதிகளையும் முன்னேற்றம் என்ற பெயரில் சூறையாடி அழித்து விட்ட மனிதகுலம் இப்போதாவது விழித்துக் கொண்டுள்ளதே என்று ஆறுதல் கொள்ளலாம்.

ஆனால் இந்த விழிப்புணர்வு காலா காலத்தில் ஏற்பட்டதா அல்லது காலந் தாழ்ந்த ஞானோதயமா என்பதை நமது எதிர்காலச் சந்ததியினர்தான் முடிவு செய்து தீர்ப்பளிப்பார்கள்.

நன்றி: நியூஸ்வீக்

பொன் விழா ஆண்டு : : தங்க நகை பரிசுத் திட்டம் - 24

லோக்கல் ஒலிம்பிக்ஸ்!



பார்ஸிலோனா ஒலிம்பிக்ஸுக்கு இன்னும் 47 நாள் பாக்கி, 45 நாள் பாக்கி என்று எண்ணிக் கொண்டிருக்கிற இன்றைய நிலையில், சமீபத்திலோ அல்லது உங்கள் இளமைப் பிராயத்திலோ நீங்கள் பங்கேற்ற ஒரு ஸ்போர்ட்ஸ் நிகழ்ச்சியில் உங்களுக்கு ஏற்பட்ட (அல்லது உங்கள் நண்பருக்கு) சுவையான ஓர் அனுபவத்தை எழுதி அனுப்பலாமே? அந்த சம்பவத்தைப் படிக்கும் போது சிரிப்பு வரலாம்; கண்களைப் பனிக்கச் செய்யலாம்; அல்லது இதமாக இதயத்தை வருடிக் கொடுக்கலாம். மிக ரசமான விதத்தில் தபால் கார்டில் மட்டுமே எழுதி அனுப்பப்படும் துணுக்குக்கு பாலு ஜுவல்லர்ஸ் வழங்கும் ஒரு சவரன் பெறுமானமுள்ள பொன் நகை பரிசு. பிரசுரமாகும் இதர அனுபவங்களுக்கு வழக்கமான சன்மானம். முடிவு தேதி : ஜூன் 22. ''கல்கி காரியாலயம், சென்னை - 600032'' என்ற விலாசத்துக்கு மட்டுமே எழுதவும். ''லோக்கல் ஒலிம்பிக்ஸ்'' என்று தலைப்புத் தரலாம்.



உனக்காகப் பிறந்தேன்

எடுத்த எடுப்பில் சற்று நிமிர்ந்து உட்காரச் செய்கிறார் இயக்குனர் பாலு ஆனந்த். (கதை, வசனத்துக்கும் அவரே பொறுப்பு.)

முகத்தில் சேணம் கட்டிக் கொண்டு, அப்படி இப்படித் திரும்பிப் பார்க்காமல், அதே ஒற்றையடிப் பாதையில் பலரும் போய்க் கொண்டிருக்கும் நேரத்தில், வேறு திசையில் பார்வையைத் திருப்பியிருப்பது இதம்.

இலங்கைத் தமிழ்ப் பகுதிகளில் தொடர்ந்து இடம் பெற்றுவரும் ஆயுதப் போராட்டங்களின் விளைவாகப் படகுகளில் பயணப்பட்டுத் தமிழ் நாட்டில் தஞ்சம் புகும் அகதிகள் - அவர்களுடைய அகதி முகாம் வாழ்க்கை - சூழ்நிலை காரணமாக அந்த முகாமிலிருந்து பேத்தி மோகினியுடன் வெளியேறும் தாத்தா ஜனகராஜ் - அவர்களுக்கு அடைக்கலம் தரும் அனாதை இளைஞன் பிரசாந்த்...

நிகழ்ச்சிகளின் விரிவுக்குச் சிறப்பாக வடிவம் கொடுத்திருப்பவர் ஒளிப்பதிவாளர் ஜெயனன் வின்சென்ட்.

அனுபவம் நிறைந்தவர் ஜனகராஜ் மட்டுமே. எனவே அத்தனை பளுவும் அவர் தோள்களில். சிரமமின்றிச் சுமக்கிறார். அடுத்தவர்களின் கழுகுப் பார்வையிலிருந்து பேத்தியைக் காப்பாற்ற அவர் படும் அவஸ்தைகளும், அதற்காக ஆணுடை அணிவித்து அவளை உலவ விடுவதும், இந்த உண்மை தெரியாத பிரசாந்த் மோகினியை ஒரு பையன் என்றே நினைத்து நெருக்கமாக உறவாடுவதும், அதனைத் தடுத்து அவர்களைப் பிரிக்க ஜனகராஜ் படும் பாடுகளும் சுவாரஸ்யம்.

உண்மை வெளிப்பட, இயற்கை தன் பணியைச் செய்து விட, பிரசாந்த் - மோகினி காதல் வளர - ஜனகராஜ் தவிக்க... சுவாரஸ்யம் கூடுகிறது.

அதன் பின் -

மலை முகட்டிலிருந்து தலைகுப்புறக் கீழே விழுந்து விடுகிறது கதை.

சொந்த நாட்டுக்குத் திரும்பிச் சென்று விடும் மோகினியைத் தேடிப் பிடிக்க முடிவு செய்யும் பிரசாந்த் கடலைக் கடக்கப் படகு கிடைக்காமல் போகவே, நீந்திச் சென்றே இலங்கையை அடைந்து, அந்நாட்டு ராணுவத்தினரிடம் சிக்கிச் சிறைப்பட்டு, சாகசங்கள் புரிந்து அவர்களிடமிருந்து தப்பிச் சென்று மோகினியைத் தேடி.....

பிற்பகுதியில் சுற்றப்பட்டிருப்பது படச்சுருள் அல்ல - பூ.

- சி. ஆர். கே.

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வோம்

போலீஸ், நீதிமன்றம், சிறைச் சாலை போன்ற துயரங்களை வாழ்வில் சந்திக்க நேரவில்லை என்றால் நாம் குற்ற வாளிகள் இல்லை என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். சில சந்தர்ப்பங்களில் நாம் போலீஸை ஏமாற்றியிருப்போம். நீதி மன்றத்தின் தீர்ப்பை விட நம்மைப்பற்றிய நமது தீர்ப்பு முக்கியமானது. நமது யோக்யதை நமக்குத் தெரியும். தவறுகளை ஒத்துக் கொள்ளாதவன் திருந்தவே முடியாது.

செத்தபிறகு தவறுகளைத் திருத்திக் கொள்ள முடியாது. அடுத்தபிறவியில் அதற் கான தண்டனைதான் கிடைக்குமே ஒழிய, தவறைத் திருத்திக் கொள்ள வழி கிடையாது. எனவே, இந்தப் பிறவியின் தவறை இந்தப் பிறவியிலேயே திருத்துவது அவசியம். சுவாசம் உடம்பில் ஓடிக் கொண்டிருக்கும்போதே தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டும். இது குறித்தே ''காற்றுள்ள போதே தூற்றிக் கொள்'' என்றனர். விவசாயிகள் காற்றடிக்கும் போதே நெல் மணிகளை மேலிருந்து கீழே கொட்ட, தூசு தும்பு போன்ற குப்பைகளைக் காற்று அடித்துச் செல்லும். அது வெளிப் பொருள். 'உன் மூச்சுக்காற்று உள்ள போதே உன் தவறுகளைத் தூற்று' என்பது உட்பொருள். 'பதவியில் இருக்கும் போதே பணம் பண்ணக் கற்றுக் கொள்' என்ற கலியுக அர்த்தமல்ல.

இப்படி பல பழமொழிகளைப் பாழாக்கிய பெருமை நமக்கு உண்டு. 'மோதிரக் கையால் குட்டுப்படு' என்று ஒரு பழமொழி. மோதிரம் போட்ட கை குட்டினால் வலிக்காதா? அவமானப்பட்டாலும் பணக்காரன் மூலம் அவமானப்படுவது பெருமையா? அதன் பொருளே வேறு. எளியவரிடம் - வலிமை அற்றவரிடம் வெற்றி பெறுவந்த விட - வலிமையானவரிடம் தோற்பது புகழ்தான். மோதிரக் கை என்றால் மோதிரம் அணிந்த கை என்ற பொருள் தவறு. 'மோதுகிற கை' அதாவது வலிமையான கை. மோதுகிற கையில் குட்டுப் பட்டால் அவமானம் இல்லை. மோதுகிற பலம் இல்லாத கையோடு மோதாதே என்பது அதன் பொருள்.

இன்னும் பல பழமொழிகள் விபரீத மாகவே ஆகிவிட்டன. சோழியன் குடுமி சும்மா ஆடுமா? என்பர். இது தவறு. தலையில் பாரம் சுமப்பவர்கள் தலையில் துணியை வட்டமாகச் சுற்றி வைப்பார்கள். அது சும்மாடு எனப்படும். அதைத் தலையில் வைத்துப் பாரத்தை மேலே வைத்தால் பாரம் தெரியாது. அந்தச் சும்மாடு இல்லாமல் குடுமியையே சுருட்டி வைத்தாலும் பாரம் உறுத்தவே செய்யும். அதனால் 'சோழியன் குடுமி சும்மாடு ஆகுமா?'' என்பதுதான் உண்மைப் பழமொழி.

அவசரமாகப் பேசும் சிலர் ''மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே'' என்று பழமொழி அறிவுரை சொல்வார்கள். மண்குதிரைக்குப் பதிலாக மண்யானை செய்து ஆற்றில் இறங்கினாலும் ஆபத்து ஆபத்துதான். அதன் உண்மைவடிவம் 'மண் குதிரையை' என்பதல்ல. 'மண் குதிர்' என்பது. குவித்து வைப்பது குதிர் எனப் படும். நெற்குதிர் உதாரணம். ஆற்றில் சில இடங்களில் மண் குவிந்து மேடு போல இருக்கும். மேடு என்று அதில் கால் வைத்தால் அவ்வளவுதான். கரைந்து உள்ளே கொண்டு விடும். மரணம் நிச்சயம். இப் படித்தான்... 'குறிவைக்கத் தைக்கும் ராம சரம்' என்பதைக் குருவிக்குத் தக்க ராமேஸ் வரம் என்று ஜன சமூகம் மாற்றியே விட்டது.

பழமொழிகளை வேகம் வேகமாக மாற்றும் ஜனசமூகம் பழைய வாழ்க்கையை மாற்றாமல் விட்டதுதான் சோக சமுத்திரம். சந்தர்ப்பம் கிடைக்கும் போது தன்னைத் திருத்திக் கொள்ளாமல் விட்டுவிட்டு, மறுபடி மறுபடி பிறந்து மேலும் மேலும் பாவங் களைச் செய்து எப்படித்தான் கரையேறுவது. நல்ல மாட்டுக்கு ஒரு சூடு என்பது போல், நல்ல மனிதர்கள் ஒரு வார்த்தையில் திருந்தியது உண்டு.

அவர் ஒரு முரடர். அவரைத் திருத்துவதற்காகவே அரண்மனையில் வேலை



வாங்கிக் கொடுத்துத் திருமணமும் செய்து வைத்தார் அவர் தந்தை. அரண்மனையில் இருக்கப் பிடிக்காமல் மனைவியைத் தேடி ஓடி வந்தார் அவர். வழியெல்லாம் மழை. கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. மன்னைவி மீது அவ்வளவு ஆசை. அவள் தாய் வீடு சென்றிருந்தாள். இருளில் தடுமாறி ஆற்றைக் கடந்து அவள் வீட்டுக்கு அருகிலிருந்த மரத்தில் ஏறி மாடியை அடைந்து கதவைத் தட்டினார் அந்த முரடர். திருடர் என்றே வீட்டில் எல்லோரும் பயந்தனர். விளக்கை நீட்டிப் பார்த்த அவர் மனைவிக்குப் பகீர் என்றது.

''இந்த மழையில் ஆற்றை எப்படிக் கடந்தீர்கள்?'' பதறினாள். ''ஒரு கட்டையைப் பிடித்துக் கொண்டு...'' பதில். விளக்கை நீட்டினாள். அது கட்டையல்ல.. பிணம். ''மாடிக்கு எப்படி வந்தீர்கள்?'' கேள்வி பாய்ந்தது. ''ஆலமரத்தில் தொங்கிய விழுதைப் பிடித்தபடி...'' பதில் தவழ்ந்தது. ''ஆலமரமா?... விழுதா...'' பதறியபடி விளக்கை நீட்டினாள். மரத்தில் மலைப்பாம்பு தொங்கியது. ''அப்படி என்ன அவசரம்?'' மனைவியின் கேள்வி. ''உன் மேல் எனக்கு அவ்வளவு ஆசை....'' முரடரின் பதில். ''ஈஸ்வரா! அழிந்து போகும் இந்த உடம்பின் மீது இவ்வளவு ஆசையா? இந்த மூர்க்கத்தனத்தை ராமநாமத்தின் மீது செலுத்தக் கூடாதா?''

ஒரே நேரத்தில் வானத்திலும் அவர் இதயத்திலும் மின்னல் வெட்டியது! துளசி தாஸ் என்ற அமரகவி - ராமபக்தர் ஜனனம். காற்றுள்ள போதே தூற்றிக் கொண்டார்.

சுகிசிவம்

காதல்... மாறுபடும் தகுதிகள்

ஊரிலிருந்து மாமா இறந்த செய்தியைத் தாங்கி வந்த கடிதத்தைப் பார்த்ததிலிருந்து ஜனார்த்தனனுக்கு மீராவின் நினைவுதான் முதலில் வந்தது. கிட்டத்தட்ட ஏழு வருடமாக ஊரைப் பற்றிய சிந்தனையே எழாத அளவிற்கு வீடு, மனைவி, குழந்தைகள் என்று வாழ்க்கை அமைந்து விட்டது. ஊரின் பழமைச் சின்னமான அம்மாவும் இவன் இங்கே கால் ஊன்றிய பின்பு ஜனாவுடனேயே வந்து, அவள் காலம் முடியும் வரையில் இருந்து விட்டதாலும், அம்மாவின் தம்பி குருமூர்த்தி மாமாவும் பூனா, டெல்லி என்று வடநாடுகளில் அலைந்து சொந்த ஊருக்கு வந்து இரண்டு மாதம்தான் ஆகிறது என்பதால், ஜனார்த்தனனுக்கு ஊருக்குப் போக வேண்டும் என்ற நினைவு எழவே இல்லை. இன்னும் ஒரு காரணமும் உண்டு. மீராவின் நினைப்பு முன்னைப் போல குத்திக் கொண்டே இருந்தது.

''உன்னால் என்னோட வரமுடியுமா?'' என்றான் ஜனார்த்தனன் வைதேகியிடம்.

''உங்களை மாதிரி என்னால அவ்வோ சட்டுன்னு லீவு எடுக்க முடியாது. ஹரீஷுக்கு மேலும் நாளைக்கு பேரன்ட்ஸ் டே. வரணும்னு கட்டாயப் படுத்தறான். நீங்க போயிட்டு வாங்க. நான் பதினாறா நாள் விசேஷத்துக்கு வர்ரேன்'' என்று சொல்லி விட்டாள்.

ஜனார்த்தனன் அதிகமாக மனைவியை வற்புறுத்தவில்லை. மாமாவுக்குப் பெண் டாட்டி கிடையாது; பிள்ளை கிடையாது. இருந்தும் ஊர் ஜனம் கேட்கும். வைதேகியை ஏன் அழைத்து வரவில்லை? சமாளித்துக் கொள்ளலாம். மீராவைத் தனியாகப் பார்ப்பது அதை விட முக்கியம்.

''பணம் வேணுங்கற மட்டும் ட்ரா பண்ணிட்டீங்க இல்ல?'' என்றாள் வைதேகி.

''உம்.''

''எவ்ளோ?''

''ஐயாயிரம்.''

''மாமா மணி வீட்ல தான் போன ரெண்டு மாசமாத் தங்கியிருக்காரு. மணிதான் எழவு காரியமெல்லாம் பார்ப்பான். உங்க கஞ்சத்தனத்தைக் காட்டி ஊர் சிரிப்பது மாதிரி பண்ணாம, கூட ஆனாலும் பரவாயில்லை.... மூவாயிரம் ரூபாயை அவன் கையில் கொடுங்க. வடக்கே வியாபாரம் பண்ணினாலும் உங்க மாமா பண வரவு செலவை உங்க ஊர் பாங்கிலதான் வெச்சிட்டிருந்தாரு. போன உடனே அவரு பாஸ்புக், செக்புக் எதுனாச்சும் இருந்தா கையகப் படுத்துங்க. எத்தனை நாள் லீவு போடப் போறீங்க?''

''ரெண்டு நாள்.''

''நாளைக்குப் போனத்தை எடுத்தாலும், நாளை மறுநாள் கம்மாதான் இருக்கணும். பாங்கில் போய் அவர் பெயரில் எவ்ளோ டெபாசிட் இருக்கு. அதை உங்க பேரில் மாத்த லெட்டர் எழுதிக் கொடுக்கணும்னா கொடுத்து, லீகல் ஹெயர் ஸர்டிஃபிகேட் கேட்டா அதை வாங்கிக் கொடுத்து, டெத் ஸர்டிஃபிகேட் வாங்கிக் கொடுத்து, திரும்பியும் பதினாறா நாள் விசேஷத்துக்குப் போகும் பொழுது பணம் உங்க பேருக்கு வரா மாதிரி பண்ணிட்டு வாங்க.''

''செத்துப் போனது என் மாமாடி.''

''அதுக்காக மோட்டு வளையைப் பார்த்துக்கிட்டிருந்தா செத்தவரு உயிரோடயா வரப் போறாரு?''

வைதேகி யதார்த்தமாகப் பேசினாள்.

ஜனார்த்தனன் இரண்டு நாட்களுக்குத் தேவையான உருப்படிகளை ஒரு ப்ரீஃப் கேஸில் எடுத்துக் கொண்டு கிளம்பினான், மீராவின் நினைவையும் சேர்த்துக் கொண்டு.


மண்டபப் படித்துறையில் அவர்கள் இரண்டு பேரும் நெல்லை ரத்னா ஸ்டுடியோவில் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படத்தின் பிரதியை எட்டுத் துண்டுகளாகக் கிழித்து அவன் கையில் கொடுத்த பொழுது பார்த்ததுதான். அதன் பிறகு மீராவைப் பார்க்கும் சந்தர்ப்பமே அமையாமல் போனது. பாங்கில் வேலை கிடைத்துச் சேலம் வந்து, வைதேகியைக் கல்யாணம் செய்து கொண்டு, இரண்டு குழந்தை

சத்தியப்ரியன்

களுக்குத் தகப்பனாகி, சென்னைத் திருப்பதியில் நிலம் வாங்கி, வீடு கட்டிக் கொண்டு அமைந்து போன வாழ்க்கையில் மீராவுக்கு இடமில்லாமல் போனது. மீராவைப் பற்றிய செய்திகள் கேசவன் மூலமாகவும், எப்பொழுதாவது சேலம் வரும் மணி மூலமாகவும் தெரிய வரும். அவை ஒன்று கூட நல்லதாக இருக்காது.

முதலில் மீராவின் கல்யாணச் செய்தி தான் கிடைத்தது. ஜனார்த்தனனுக்கு அதைக் கேட்க முதலில் ஆறுதலாக இருந்தது. ஏன் எனில் அவர்கள் காதல் விவகாரம் ஊர் முழுவதும் தெரியும். எனவே மீராவுக்கு உள்ளூரில் மாப்பிள்ளை அமைவது நினைத்துப் பார்க்க முடியாத விஷயம். விக்கிரம சிங்கபுரத்தில் மில்லில் வேலை பார்க்கும் குணசீலன் என்பவன்தான் அவள் புருஷனாவான் என்பது தெரிய வந்தது. அதன் பிறகு கேட்ட எதுவுமே நல்ல செய்தியாக இல்லை. குணசீலனுக்கு மீராவின் காதல் விவகாரம் முழுவதும் மிகைப்படுத்தப் பட்ட நிலையில் தெரிய வர, அவன் அவளைச் சித்திரவதை செய்ய நல்ல காரணம் கிடைத்து விட்ட மகிழ்ச்சியில் கொடுமைப் படுத்த, மீராவின் இன்னல்கள் ஊர்க்காரர்கள் கண்ணீர் உகுத்துக் கேட்கும் தொடர் கதையின் அத்தியாயங்களாயின. மீரா அதன் பிறகு நிரந்தரமாகக் கைக் குழந்தையுடன் ஊருக்கே திரும்பி வந்ததும், ஊரில் உள்ள பஞ்சாயத்துப் பள்ளிக் கூடத்தில் சத்துணவு ஆயாவாக இருப்பதும், அன்றாடம் வயிற்றைக் கழுவிக் கொள்வதற்கே கஷ்டப்படுவதும் இவன் செய்த காதல் துரோகத்துக்குச் சாட்சிகளாயின.

கிளம்பும் பொழுது கூடுதலாக ஆயிரம் ரூபாய் எடுத்து வைத்து கொண்டான். தங்கப் போகும் இரண்டு நாட்களில் மீராவைச் சந்திக்க நேரிடும் சந்தர்ப்பத்தில் அவள் நிலைமைக்காக அவளுடன் சேர்ந்து



தானும் அழாமல் இந்தச் சிறிய தொகையை அவளிடம் கொடுக்க வேண்டும்.

என்னவென்று சொல்லிக் கொடுப்பது? காதல் இழப்பு என்றா?

அம்மாவின் பிடிவாதம் நினைவுக்கு வந்தது. வயலுக்குப் போட இருந்த டெமக்ரான் பூச்சிக் கொல்லி மருந்தைக் கையில் எடுத்தபடி ''உனக்கு உன்னைப் பெத்த அம்மா பெரிசில்ல, நேத்துப்பார்த்த சிறுக்கிதான் பெரிசுன்னு தோணிச்சினா சொல்லிடு. இப்பமே இதைக் குடிச்சுப் போயிடுறேன்'' என்று அலறிய அலறல் நினைவுக்கு வந்தது.

அம்மாவுக்கு மீராவை ஏனோ கட்டோடு பிடிக்காமல் போனது. மீராவின் வெளிப்படையான நடவடிக்கை, முகதாட்சண்யம் பாராது அனைவரிடமும் போய்ப் பேசும் தன்மை, பொங்கிப் பொங்கிச் சிரிக்கும் சிரிப்பு... இது எதுவுமே பிடிக்காமல் போனது. நாணமில்லாதவள். இது மீராவுக்கு அம்மா வைத்த பெயர்.

இத்தனைக்கும் மீரா ஒழுக்கத்தின் நெறிகளை அதன் வரம்பு மீறிக் கடந்ததே இல்லை. திருநெல்வேலியில் சென்ட்ரலிலும், ரத்னாவிலும் சினிமா பார்க்கத் திருட்டுத்தனமாகப் போனாலும் அத்துமீறி அவன் கைகள் அவள் உடலில் படர்வதை அனுமதிக்கச் சம்மதியாள்.

'உடல் தேவை என்பது ஒருபுறமிருந்தாலும் கன்னியம் காப்பது காதலின் கௌரவம் ஜனா. ஒன்றுக்காக ஒன்று என்ற அடிப்படையில் இல்லாமல் சுயம்புவாய் எழும் உணர்வு இருக்கு பாருங்க, அதுதான் காதல். பொண்ணு ஷோக்கா இருக்கு கூப்ட்டாப் படிஞ்சிடும்னு நீங்களும், ஆளு பெரிய சொத்துக்காரர், வளைச்சுப் போட்டா ஆயுசு பூரா உட்கார்ந்து சாப்பிடலாம்னு நானும் நினைக்க, காதலிக்கிறோம்னு பேர் பண்ணினா அதுக்குப் பேர் காதலில்லை. விபசாரம்.'

மீரா சொன்னதை அப்படியே அம்மாவிடம் சொல்லி அவள் நல்ல சிந்தனையுள்ள பெண் என்று நிரூபிக்க முடியாமல் போனது. அம்மாவின் பிடிவாதம் ஜெயித்து, வைதேகியைக் கைப் பிடிக்க வைத்தது.

வைதேகி நிறம் கொஞ்சம் கம்மி என்றாலும் அழகானவள். ஜனா அளவுக்கு உயரம்; புத்திசாலி; இத்தனைக்கும் மேலாக நான்கு இலக்கச் சம்பளத்துடன் பொது உடைமை வங்கியில் வேலை பார்ப்பவள்.

கல்யாணமான முதல் வாரத்திலேயே ஜனார்த்தனன் வைதேகியிடம் மீராவைப் பற்றிய எல்லா விஷயங்களையும் சொல்லி விட்டான். வைதேகி அதை ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை.

மாமா எவ்வளவோ முயன்று அம்மாவைச் சம்மதிக்க வைக்க முயற்சி செய்து முடியாமல் போக, தான் மட்டும் இருந்து மீராவின் அவலங்களைக் கண்ணால் பார்க்க வேண்டாம் என்று கருதி, மளிகைக் கடையை ஒரு முதலியாரிடம் விற்று விட்டு, பூனாவில் பழைய நண்பர் அழைத்ததன் பேரில் வியாபாரம் செய்யப் போய் விட்டார். அம்மா இறந்த சமயம் சேலம் வந்தவர்தான். கடிதத் தொடர்புடன் சரி.

விடிகாலை ஆறுமணிக்கு பஸ் ஊர் போய்ச் சேர்ந்தது.

மணி வீட்டில் ஜனார்த்தனனுக்காகக் காத்துக் கிடந்தார்கள். ''முதலாளி! மொதப்



''என்ன சார்... தலைவர் எப்பப் பாரு டெலஸ்கோப்பும் கையுமாகவே இருக்கார்? ஏதாவது ஆராய்ச்சியிலே ஈடுபட்டிருக்காரா?''


''ஊகூம்... ரொம்பத் தொலைநோக்குப் பார்வையுள்ளவர்னு பேர் வாங்கறதுதான் அவர் லட்சியமாம், அதான்!''

- காக

முதலிரவில் கணவன் : தாலி கட்டறதுக்கு முந்தி ஏதோ ஒரு ஃபாரத்துல கையெழுத்து வாங்கினியே, அது என்ன?

நடிகை மனைவி : வேற ஒண்ணுமில்லே, 'விவாகரத்துக்குப் பிறகு ஜீவனாம்சம் கேட்க மாட்டேன்'னு கையெழுத்துப் போட்டிருக்கீங்க, அவ்வளவுதான்!

- சீர்காழி வி. ரேவதி



போணியை உன் கையால் தொடங்கு வா'' என்று அடிக் குரலில் பேசும் மாமாவின் வாயைத் துணி சுற்றி மூடியிருந்ததைப் பார்க்க, வயிற்றைப் பிசைந்தது. தடாலென்று பிணத்தின் காலடியில் விழுந்து அரற்றினாள்.

மாரடைப்பு என்று காரணம் சொன்னார்கள். அப்படி, இப்படி என்று பிணத்தைச் சுடுகாடு கொண்டு செல்லும் பொழுது மணி பதினொன்றாகி விட்டது. மரியாதை கருதி, மீராவின் மூத்த சகோதரன் சரவணன் துக்கம் கேட்க வந்திருந்தான். அவனைப் பார்க்கவே சங்கடமாக இருந்தது.

வைதேகி பயமுறுத்திய அளவுக்கு இல்லாமல் மணி மிகவும் நாணயமான முறையில் மாமாவின் நவரத்ன மோதிரம், மைனர் செயின், அது தவிர ஏழாயிரம் ரொக்கம் இவைகள் அடங்கிய துணிமுடிச்சு ஒன்றையும், வங்கியில் அவர் வைத்திருந்த வைப்பு நிதிப் பத்திரம், வரவு செலவுப் புஸ்தகம் எல்லாவற்றையும் கொடுத்துச் சரிபார்த்துக் கொள்ளச் சொன்னான்.

இழப்புகளும், ஏக்கங்களும் எழாத தனிச்சாவு என்பதால் மாமாவின் மறைவு மறுநாள் இயல்பாக ஏற்றுக் கொள்ளப் பட்டது. மறுநாள்தான் ஜனா மணியிடம் மீராவைப் பற்றிக் கேட்டான்.

''மீரா எப்படி மணி இருக்கா?''

''கொடுமை ஜனா. எதுவும் என்கிட்ட கேட்கண்டா. வரப்புலயும், ரோட்லயும் துள்ளலும், சிரிப்புமா இருந்த பொண்ணான்னு இருக்கு. கன்னமெல்லாம் ஒட்டிப் போய், கறுத்துப் போய் விகாரமா ஆயிட்டா. வாக்கப்பட்ட ஊர்ல புருஷன் அந்தச் சித்திரவதை பண்ணியிருக்கானாம். சினிமாலயும், கதையிலுந்தானே ஆம்பளத் தடியங்க பொண்டாட்டியைச் சிகரட்டால சுடுவாங்கன்னு கேள்விப் பட்டிருக்கோம். இவ உடம்புல நெசமாவே பண்ணிப் பிட்டான் ஒரு தடா. அவன் நல்லாக் குடிச்சிட்டு ஓங்கி உதைக்க, அவ வாசல் நிலையில் மோதி உதடு துண்டாப் போயி தையப் போட்டு... என்ன அழகு வாய்டா அவளது? போய்ப்பாரு.. அவளுக்குப் பொறந்த புள்ளை அவனுக்குப் பொறந்தது இல்லியாம். உனக்குப் பொறந்ததுன்னு புருஷங் காரன் அவளை இந்த ஊரில் கொண்டு விட்டு மூணு வருஷமாவுது. பாவம் இது வயித்துப் பாட்டுக்கு நாயாப்படுது. போன ரெண்டு மாசமாத்தான் நாடார் ஸ்கூலில் சத்துணவு ஆயாவா வேலை கிடைச்சிருக்கு. வேணுன்னா அங்கே போய்ப் பாரு'' என்றான்.

பன்னிரெண்டு மணி சுமாருக்குச் சாப்பிட்டு விட்டு மாமாவின் சைக்கிளை எடுத்துக் கொண்டு ஆறுமுகநாடார் ப்ரைமரி ஸ்கூல் நோக்கிக் கிளம்பினான்.

சைக்கிளை ஹெட்மாஸ்டர் அறையின் முன்னால் நிறுத்தி விட்டு, வகுப்பறைகளைக் கடந்து, பிரார்த்தனை வெளியை ஒட்டியிருந்த சத்துணவுக்கூடத்தை நோக்கிப் போனான்.

ஜனார்த்தனன் சத்துணவுக் கூட வாயிலை நெருங்கவும், மீரா கையில் ஒரு நோட்டுப் புஸ்தகத்துடன் வெளியில் வரவும் சரியாக இருந்தது.

மணி சொன்னது எதுவுமே மிகையில்லை என்பது போல மீரா வெயிலில் கருண்ட செடியினைப் போல வதங்கிப் போயிருந்தாள். கண்களில் பழைய ஒளி இல்லை. நாள் பட்டுப்போன ஓவியம் போல சாயல் இருந்தாலும் பொலிவு இல்லாமல் இருந்தாள்.

''வாங்க'' என்று சிரித்தபடி வரவேற்றாள்.

அவன் பேசாமல் அவள் முகத்தைப் பார்த்தான்.

''மாமா செத்துப் போனதாத் தகவல் கிடைச்சது. எப்படியும் நீங்க வருவீங்கன்னு தெரியும். திடீர்னு கொஞ்ச நேரத்துக்கு முன்னால அசோக வனத்துல அனுமான் வரதுக்கு முன்னால சீதைக்குத் துடிச்சா மாதிரி இடது தோளும், இடது புருவமும் துடிச்சது. ஆனா என்ன துடிச்சு என்ன பிரயோஜனம்? இங்கே ராவணன் சீதையைக் கட்டிக்கிட்டான். சீதை காணாமப் போனதுக்கு ராமனும் அதிகமா அலட்டிக்கலை... ம்.... மரத்து நிழலில் நின்னு பேசுவோம்.....''

தூங்கு மூஞ்சி மர நிழலில் ஒதுங்கினார்கள்.

''வைதேகி சௌக்யமா? புள்ளைங்கள்ளாம் எப்படி இருக்கு? வீடு கட்டி கிரகப் பிரவேசம் பண்ணினீங்களாமே. அப்பப்பத் தகவல் வரும்.''

''நீ எப்படி இருக்க?''

''கல்லாப் போன்னு சாபம் கொடுத்தாக் கூடப் பரவாயில்லை. பிரக்ஞை இல்லாம போயிருக்கும். சிகரெட்டால கட்டுக் காட்டறப்ப உடம்பு தாங்கலை.''

ஜனார்த்தனன் பதில் எதுவும் சொல்லவில்லை.

''உங்க கிட்ட ஒன்னே ஒன்னு கேட்கணும் ஜனா. கேட்கலாமா?''

''கேளு மீரா.''

''நீங்களும் காதலிச்சீங்க. நானும் காதலிச்சேன். ரெண்டு பேருக்குமே காதல் கை கூடாமல் போனது. இழப்பும், வேதனையும் ரெண்டு பேருக்கும் பொதுவானது. இது வரையில் நாம் ஒரே தோணியில் பயணம் பண்ணினோம். ஆனா அதுக்கப்புறம், நடந்ததைக் கவனிச்சீங்களா? உங்களுக்கு பத்தாயிரம் ரூபாய் வரதட்சணையுடனும், மாசம் ரெண்டாயிரம் ரூபாய்ச் சம்பளத்துடனும் ஒரு பெண் கிடைப்பது மிக எளிதாக இருந்தது. என் தகுதியிலிருந்து இறங்கி, என் நிலைக்குக் கீழான புருஷனைத்தான் என்னால் தேடிக் கொள்ள முடிந்தது. கல்யாணத்திற்கு முன்னால் ஆண் கற்பழிப்புச் செய்தவனாக இருந்தால் கூட அவனைப் பெண் ஏற்றுக் கொள்வாள். கல்யாணத்திற்கு முன்னால் ஆணின் காதல் தோல்வி பெரிய விஷயமில்லை. ஆனால் பெண்ணின் காதல் தோல்வி விபசாரத்திற்கு நிகராகக் கருதப்படுகிறது. பொருளாதாரம் மட்டும் பெண் விடுதலை இல்லை ஜனா. கற்பு நிலையும்தான். சரியா?'' என்றாள்.

மீரா கேட்டது ஜனார்த்தனனை உறுத்தியது.

அவன் பாண்ட் பாக்கெட்டிலிருந்து ஆயிரம் ரூபாயை எடுத்து, ''தப்பா எடுத்துக்கலைன்னா இதைச் செலவுக்கு வெச்சுக்க....'' என்றதும் ஓர் அசைவில் கூட மறுப்புச் சொல்லாமல் அவனிடம் பணம் பெற்றுக் கொண்டு, ''ரெண்டு மாசம் வீட்டு வாடகை பாக்கி. நல்ல சமயத்தில் கொடுத்தீங்க...'' என்ற போது ஜனார்த்தனன் கலங்கிப் போனான்.



''பொதுக் கூட்ட மேடையிலே கரைவேட்டி தலைவர் பேசும் போது, மேடையை நோக்கி யாரோ சிலர் கல்லெறிஞ்சாங்களே, ஏன்?''

''அவர்கள்தான் லாரி மூலமா கூட்டத்துக்கு ஆட்களைக் கொண்டு வந்தவங்க. காண்ட்ராக்ட் நேரம் முடிஞ்சு போச்சுங்கறதை உணர்த்தத்தான் கல்லெறிஞ்சாங்க!''

- ரா. நாச்சிமுத்து

பம்பாய்க் கடிதம் :

பரவி வரும் டிஸ்கோ ஜுரம்!

பெருமைப்படச் செய்த தமிழர்!

பம்பாய்க்கே ஒரு தனி அழகையும், கம்பீரத்தையும் கொடுப்பது பம்பாய் சர்வகலாசாலைக் கட்டடத்தில் 114 ஆண்டுகட்கு முன் அமைக்கப்பட்ட கடிகாரம்! இது இரண்டாம் உலக யுத்த சமயத்திலிருந்தே பல ஆண்டுகளாக ஓடாமல் இருந்தது. இதன் 'பெண்டுலம்' மட்டும் 175 கிலோ எடை! இதன் முட்கள் ஆறு அடி நீளம். 600 கிலோ எடையுள்ள வார்ப்பு இரும்புக் குண்டுகளால் 'பாலன்ஸ்' செய்யப்பட்டு வரும் இதன் பாகங்களுக்கு 150 சதுர அடி இடம் வேண்டும். லண்டனிலுள்ள பிக்பென் (Big Ben) கடிகாரத்தை ஒத்த இதை நிறுவிய கம்பெனியாரான ஓந்த் அண்டு ப்ளாக்லீயைச் சேர்ந்தவர்களே இதைப் பரிசோதித்து விட்டு, இதை உலகில் யாராலும் சரிசெய்ய முடியாது என்று கூறி விட்டனர். இதை ஒரு சவாலாக ஏற்றார் மாதுங்காவைச் சேர்ந்த தமிழர் நாராயணசாமி. இவரும் இவரது மூன்று மகன்களும் ஓர் ஆண்டு காலம் உழைக்க வேண்டியிருந்தது. இதில் கிடந்த குப்பைகளையும், இறந்த புறாக்களையும் வெளியேற்றவே சில மாதங்களாயின. இன்று பதினைந்து நிமிடத்திற்கு ஒருதரம் நல்ல வெண்கல ஒலியோடு அடிக்கும் இக் கடிகாரம் நாராயணசாமியை மட்டுமன்றி பம்பாயையே பெருமைப்படச் செய்திருக்கிறது.

பம்பாயின் டிஸ்கோக்கள்

பம்பாயின் ஒவ்வொரு காலனியிலும் டிஸ்கோ ஜுரம் பரவி வருகிறது. மாதம் ஒவ்வொன்றாக ஆங்காங்கே புதுப்புது டிஸ்கோ கிளப்கள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. சில கிளப்களில் உறுப்பினராக அனுமதி கேட்டு விண்ணப்பிப்போர் எல்லோருமே மெம்பர் ஆக முடியாது! ஓர் ஆண்டுக்கு ரூ. 12,500 முதல் ரூ 15,000 வரை அங்கத்தினர் கட்டணமாக வசூல் செய்யும் இந்த கிளப்கள், மொத்தம் 150 அல்லது இருநூறு பேரைத்தான் தேர்ந்தெடுத்து அங்கத்தினர்களாக அனுமதிக்கின்றன. இவர்கள் பெரும்பாலும் தொழிலதிபர்கள் அல்லது பிறவிப் பணக்காரர்கள். இவையன்றி எல்லா வகையினருக்குமென வேறு சில கிளப்கள் தோன்றியிருக்கின்றன. இவற்றின் சுவர்களில் சினிமாத் திரை போன்று பெரும் வீடியோ திரைகள் பொருத்தப்பட்டு, ஒளி அலங்காரமும் சிறப்பாகச் செய்யப்பட்டு, நடக்கும் நிகழ்ச்சிகள் அனைத்தும் குளோஸ்ட் சர்க்யூட் டீவியில் பெரிதாகக் காட்டப்படுகின்றன. பண்டிகை நாட்களுக்கு ஏற்ப இந்தியக் கலாசாரம் கலந்த கோலாட்டம், ஹோலி டான்ஸ் போன்ற நிகழ்ச்சிகளும் உண்டு. இன்று பம்பாய் இளைஞர்களை டிஸ்கோ நாகரிகம் பெரிதும் ஆட்டிப் படைக்கிறது!

மீனவர்கள் முறையீடு!

பம்பாய் மாநகரிலிருந்து வெளிப்படும் கழிவு நீர் நேராகக் கடலில் கலக்க அனுமதிக்கப்பட்டிருப்பதால் மக்கள்



விரும்பி வாங்கி வந்த சில மீன் வகைகள் அழிந்து வருகின்றன. இப்போதெல்லாம் கர்மை, மஞ்சேளா, பாங்க்டா போன்ற மீன் வகைகள் கிடைக்காததால் பம்பாய் செம்படவர்களின் வாழ்க்கைத் தரம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அவர்களது சங்கத் தலைவர் பாய் பந்தார்கர், ''அனேக தொழிற்சாலைகளின் கழிவுநீரைக் கடலில் கலக்க மாநில அரசு அனுமதி கொடுத்திருப்பதால்தான், பலவித நச்சுப் பொருள்கள் கடலில் கலப்பது அதிகமாகி விட்டது. நாங்கள் சாதாரணமாகப் பிடித்து வந்த மீன் வகைகள் இப்போது கிடைக்காததனால் அவற்றின் விலைகள் அபரிமிதமாக ஏற, மத்திய வர்க்கத்தினரின் உணவு முறையையே பாதித்திருக்கிறது. அதே சமயம், எங்கள் பிழைப்பிலும் மண் விழுந்து விட்டது'' என்று முறையிட்டிருக்கிறார்.

பரபரப்பான டீ. வி. நிகழ்ச்சி!

தினமும் செவ்வாய் இரவு ஒன்பது மணிக்கு ஒலிபரப்பாகும் பெண்களைப் பற்றிய ஹம்ராஹி என்ற இந்தி நிகழ்ச்சி, இங்கே பெரிய வரவேற்பைப் பெற்றிருப்பதோடு, பரபரப்பையும் ஏற்படுத்தி இருக்கிறது. நிகழ்ச்சியின் கடைசியில் அது குறித்து வர்ணனை கொடுக்கும் முன்னாள் இந்தி நடிகை தானுஜாவிற்கு ஒரு நாளைக்கு ஆயிரம் கடிதங்கள் வருகின்றன. ''உங்கள் நிகழ்ச்சி என் வாழ்க்கையை அப்படியே சித்திரிப்பது போல் உள்ளது. அதில் வரும் பைரவ் பிரசாத் போல்தான் என் அப்பா; ஈவிரக்கமற்றவர். அவருக்குப் பெண் என்றால் இளப்பம். பிள்ளைகளையெல்லாம் நன்கு படிக்க வைத்தார். பெண்களுக்குப் படிப்பறிவே கொடுக்காமல் சீக்கிரம் கல்யாணம் செய்து வைத்துவிட்டார். இன்றும் நம் நாட்டில் மகன்கள் - மகள்கள் விஷயத்தில் ஒரு கண்ணில் வெண்ணெய்; மற்றதில் சுண்ணாம்புதான்'' என்று எழுதுகிறார் ஒரு பெண். கொடுமைக்காரக் கணவனிடமிருந்து விவாகரத்துப் பெற்று விட்ட மற்றொரு பெண், தாம் பட்ட அவலங்களை விவரித்து, 'இதையே ஒரு டீவி நிகழ்ச்சியாக உருவாக்கிக் காட்டுங்கள்' என்று கேட்டிருக்கிறார். நாட்டின் எல்லா பாகங்களிலிருந்தும் எழுதும் பெண்கள் தங்கள் துன்பங்களை விவரித்துத் தங்களுக்கு விடிவு காலம் எப்போது என்று தானுஜாவையே கேட்கின்றனர்!

- ராஜீவி நரசிம்மன்


New
Nestlé
Cerelac
instant milk cereal
weaning food
Wheat
Contains all the Goodness of milk!
அறிமுகப்படுத்துகிறோம்
புதிய ஸெரிலாக்!
எப்போதையும் விட
இப்போது சிறந்தது!!
இப்போது புதிய Z-லைன் முறைப்படி ஸெரிலாக் தயாரிக்கப்படுவதால், முன்பைவிட எளிதில் ஜீரணமாகிறது!
New IMPROVED
Nestlé®
Cerelac®
உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் ஸெரிலாக்.
முக்கிய அறிவிப்பு உங்கள் குழந்தைக்கு தாய்ப் பால்தான் மிகவும் சிறந்தது. உங்கள் குழந்தைக்கு 4 மாதங்கள் ஆனதில் இருந்து தாய்ப்பாலுடன் குழந்தைத் தானிய உணவும் கொடுங்கள்

சுகப்பிரசவம் இருக்க சிசேரியன் எதற்கு?

சேகர் தன் மனைவி உஷாவை நர்சிங் ஹோமில் சேர்த்துவிட்டு, வெளி வெராந்தாவில் மாமனார், நண்பர்கள், பெற்றோர் இவர்களுடன் காத்துக் கொண்டிருந்தான்.

''அநேகமாக சிசேரியன்தான்!'' என்றார் மாமனார். ''டாக்டர் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டேன். இது சிசேரியன் கேஸ்தான் என்பது போலத்தான் சொல்லிக்கொண்டிருந்தார் உதவியாளர்களிடம்!''

''போன மாசம்... என் மருமாளுக்கும் அப்படித்தான் ஆச்சு. சிசேரியன்தான்!'' என்றார் நண்பர் ஒருவர்.

அங்கிருந்த பதினோரு பேரில் ஒன்பது பேர், சமீபத்தில் தங்கள் குடும்பங்களில் புதிதாகப் பிரவேசம் செய்த குழந்தைகள், சிசேரியன் கேஸ்கள்தான் என்ற போது, ''ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறதே!'' என்றார் சேகரின் மாமனார்.

சேகரின் கவலை எல்லாம் மனைவி சுகமாகப் பிரசவித்துவிட்டால் போதும் என்றுதான் இருந்தது. 'இளம் வயது. முதல் பிரசவம். பாவம், அவள் கஷ்டப்படக் கூடாது....'

பிற்பகல் வரை வலி எடுக்கவில்லை.

சேகரின் இன்னொரு நண்பர் தமது டாக்டர் மனைவியுடன் பார்க்க வந்திருந்தார்.

பிரசவ மருத்துவ நிபுணரின் உதவியாளரிடம் குடும்ப நண்பரான அந்த டாக்டர் சகஜமாக விசாரித்தார். ''வலி உண்டாக்கத் தரப்படும் மருந்தைச் செலுத்திவிட்டீர்களா?''

உதவியாளர், ''இல்லை. சாதாரண டிரிப்ஸ்தான் கொடுத்திருக்கிறோம்!'' என்றார்.

சாதாரணமாக, வலி உண்டாக 'சின்டோசான்' மருந்தையும் டிரிப்ஸ் வழியாகவே செலுத்துவதுண்டு. செர்விக்ஸ் விரிவடைந்து, சிக்கலின்றி வெளிவரவும் மருந்து கொடுப்பதுண்டு.

இதை, பிரசவ மருத்துவ நிபுணர் வந்த போது, வெகு இயல்பாகத்தான் கேட்டார், மேற்படி நண்பரின் டாக்டர் மனைவி.

பிரசவ மருத்துவ நிபுணருக்குக் கோபமும் எரிச்சலும் ஏற்பட்டதை அவரது முக பாவமே காட்டியது.

''பத்து நிமிஷத்தில் சிசேரியன் செய்து குழந்தையை எடுப்பதை விட்டுவிட்டு, இப்படி டயத்தை வேஸ்ட் செய்வது எனக்குச் சம்மதமே இல்லை!'' என்றார் நிபுணர் காட்டமாக.

அவரிடம் அதிகம் முறைத்துக் கொள்ளவும் முடியாது. குழந்தை நல்லபடியாகப் பிறக்க வேண்டும். இயற்கையாகப் பிறக்கட்டும் என்று விட்டு விட்டால், குழந்தைக்கோ, தாயாருக்கோ கடைசியில் ஆபத்து உண்டாகிற நிலைமையில், அப்புறம் அவரைக் குறை சொல்ல முடியாது. 'நீங்கள்தான் சிசேரியன் கூடாது என்றீர்களே?' என்று நம் மீது சுமையைத் தூக்கிப் போட்டு விடுவார்....

''பிற்பகல்வரை பொறுத்துப் பார்க்கலாம் டாக்டர். நேச்சுரல் டெலிவரி ஆகிவிட்டால் நல்லது....'' என்று மாமனார் சொல்லிப் பார்த்தார். சேகருக்குப் பயம். எங்கே மருத்துவ நிபுணர் கோபித்துக் கொண்டு, பாதியில் விட்டுவிட்டுப் போய்விடுவாரோ என்று.

நல்ல வேளை!

மாலை நேரத்தில் இயற்கையான சுகப் பிரசவத்தில், சேகருக்கு ஓர் அழகான பெண் குழந்தை பிறந்தது.

ஆனால் அதற்கு எடுத்துக் கொண்ட 45 நிமிட நேரத்தில், பிரசவ மருத்துவ நிபுணரின் முகம் கடுகடு வென்றிருந்தது என்னவோ உண்மை.



''என் நேரத்தை வீணாக்கி விட்டீர்கள். அதற்காக, சிசேரியனுக்கு என்ன ஃபீஸ் தர வேண்டுமோ அதைத் தந்தால்தான் ஆயிற்று!'' என்றார்.

''ஆகா, அதற்கென்ன!'' என்று சுகப் பிரசவமாகிவிட்ட சந்தோஷத்தில் சேகரும், அவன் மாமனாரும் ஒப்புக் கொண்டனர்.

இது ஏதோ கதை என்று நினைத்துப் படித்துக் கொண்டு வந்திருந்தால் -

மன்னிக்கவும். இது உண்மை நிகழ்ச்சி.

பெயர்கள் மட்டுமே மாற்றப்பட்டிருக்கின்றன.

இயற்கையான முறையில் பிரசவம் நடந்து, குழந்தையும் தாயும் சௌக்கியமாக இருப்பதைத்தான் பெரும்பாலானோர் விரும்புகிறார்கள்.

குறிப்பிட்ட நல்ல நாளில், குறிப்பிட்ட நல்ல நேரத்தில்தான் குழந்தை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று விடாப் பிடியாகத் தீர்மானம் செய்து கொண்டிருக்கும் பெற்றோர்கள் விஷயத்தில் சிசேரியன் செய்து பிரசவம் பார்ப்பது வேறு விஷயம். அது அவர்கள் விருப்பம்.

ஆனால், இயற்கையாகப் பிரசவம் ஆவதற்கு அவகாசம் கொடுக்காமல், வியாபார நோக்கில், பத்தே நிமிடத்தில் ஒரு சிசேரியன் செய்து, பணத்தை வாங்கிப் போட்டுக் கொண்டு, அடுத்த பிரசவ கேசுக்கு அவசர அவசரமாகப் பறக்கும் டாக்டர்களை என்னவென்று சொல்வது.

முதலில் சிசேரியன் என்றால், அடுத்ததும் சிசேரியன்தான்! மேலும், சிசேரியன் ஆன தாய் குறைந்தது சில மாதங்களாவது பளு தூக்காமல், கடின வேலைகள் எதுவும் செய்யாமல் இருப்பது நல்லது என்று கூறப்படுகிறது. போதாக்குறைக்கு அறுவைச் சிகிச்சையின் வடு வேறு!



சிசேரியனில் பிறந்த குழந்தைக்கு உடம்புக்குத் திடீரென்று வந்து விட்டால், சிசேரியன் காயத்துடன் இருக்கும் தாயாரால் உடனிருந்து கவனிக்க முடியாது; பாலூட்ட முடியாது. பாலூட்ட முடியாத நிலை இரண்டு நாட்களுக்கு மேல் நீடிக்கும்போது, தாயின் நிலை இன்னும் கொடுமை; குழந்தையின் நிலைமையோ, பரிதாபம்!

'சிசேரியன்தான் வழி' என்று முடிவு செய்த இன்னொரு கேஸில், பெண்ணின் கணவரிடம் ஆபரேஷனுக்குச் சம்மதிக்கும் டிக்ளரேஷனில் கையெழுத்து வாங்கக் காத்திருந்தார்கள். ஆபிசிலிருந்து அவர் கையெழுத்துப் போடப் புறப்பட்டு வருவதற்குள்ளாகவே, இயற்கையான சுகப்பிரசவம் நிகழ்ந்து விட்டது! சிசேரியன் செய்து விட நினைத்த குழந்தைப் பேறு நிபுணரின் முகம் தொங்கிப் போய்விட்டது!

மருத்துவமனைகள் சிலவற்றில் நாசுக்காக, சிசேரியன் எத்தனை, இயற்கைப் பிரசவம் எத்தனை என்று விசாரித்ததில், புள்ளி விவரங்கள் தரத் தயங்கினார்கள். ஆனால் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் பார்த்தால், சிசேரியன் எழுபது சதவிகிதத்துக்கு மேல் இருக்கும் என்று தோன்றுகிறது.

தேவையில்லாத போது சிசேரியன் செய்வதில் பணச் செலவும் உடல் வேதனையும் ஒரு புறமிருக்க, ஒரு தாய்க்கு பிரசவ வலி கண்டு குழந்தை பிறப்பதில் ஓர் ஆத்மார்த்த திருப்தி கிடைக்கிறது. அந்த அனுபவம் இல்லாமல் போவது ஈடுகட்ட முடியாத பேரிழப்பாகும். பிரசவ வலியைப் பொறுத்துக் கொண்டு பெறப்பட்ட குழந்தையிடம் பாரம் இறங்கியவுடன் தாய்க்கு ஏற்படும் அளப்பரிய பாசத்தை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை.

''சிசேரியன் விஷயத்தில் பெண்களையோ, பெற்றோர்களையோ குற்றம் சொல்லிப் பயனில்லை. அவர்கள் மருத்துவ நிபுணர்களின் ஆலோசனையை மீறிப் போக முடியாது. ஆனால், சிசேரியன் செய்து பிரசவத்தை முடித்த கையோடு, அடுத்த நர்சிங் ஹோமில், அடுத்த சிசேரியனைக் கவனிக்கப் போகும் குழந்தைப் பேறு சிகிச்சை நிபுணர்கள் மனம் திருந்தினால் நல்லது. இவர்களிடம் விழிப்புணர்ச்சி வந்தால்தான் இது புனிதமான தொழில் என்று நம்மால் தைரியமாகச் சொல்ல முடியும்'' என்கிறார் ஒரு டாக்டர்.

இந்த நிலையில் டாக்டர்கள் கன்ஸ்யூமர் கோர்ட்டுகளுக்கு அப்பாற்பட்டவர்கள் என்று எப்படி வாதாட முடியும்?

– சாருகேசி

சிவகாமியின் சபதம்

எட்டாம் அத்தியாயம்
வானமா தேவி

அன்றைய இரவைக் காஞ்சி வாசிகள் பகலாகவே மாற்றிக் கொண்டிருந்தார்கள். காஞ்சி நகரில் வாழ்ந்த ஐந்து லட்சம் ஜனங்களில் கைக் குழந்தைகளைத் தவிர யாரும் அவ்விரவு உறங்கவில்லை.

நகரமெங்கும் வீதி விளக்குகள் ஜகஜ்ஜோதியாய் பிரகாசித்துக் கொண்டிருந்தன. யானைப் படைகளும், குதிரைப் படைகளும், காலாட் படைகளும், வெண் புரவிகள் பூட்டிய ரதங்களும் வரிசை வரிசையாக நின்றன. பொழுது புலரும் சமயத்தில் அரண்மனை வாசலில் வந்து சேருவதற்கு ஆயத்தமாக அவை அணிவகுக்கப்பட்டு வந்தன.

மறுநாள் காலையில் சக்கரவர்த்தி போருக்குப் புறப்படும் வைபவத்தை முன்னிட்டு நகர மாந்தர்கள் இரவெல்லாம் கண் விழித்து வீதிகளையும், வீட்டு வாசல்களையும் அலங்காரம் செய்தார்கள். முற்றிய தார்களையுடைய வாழை மரங்களையும், செவ்விளநீர்க் குலைகளையும், தோரணங்களையும், திரைச் சீலைகளையும், தென்னங் குருத்துக் கூந்தல்களையும், எங்கெங்கும் தொங்க விட்டார்கள். ஒவ்வொரு வீட்டின் உச்சியிலும் ரிஷபக் கொடியைப் பறக்க விட்டார்கள்.

பெண்மணிகள் வீட்டுத் திண்ணைச் சுவர்களுக்கு வர்ணப் பட்டைகள் அடித்தார்கள். தெருவாசல்களில் சித்திர விசித்திரமான கோலங்களைப் போட்டார்கள். பெரும்பாலும் போர்க்களக் காட்சிகளே அந்தக் கோலங்களில் அதிகமாகக் காணப்பட்டன.

யானை வீரர்களும், குதிரை வீரர்களும், வாள்களும் வேல்களும் தரித்த காலாள் வீரர்களும் அக்கோலங்களில் காட்சியளித்தனர். ஒரு கோலத்தில் ஐந்து ரதங்களிலே பஞ்ச பாண்டவர்கள் தத்தம் கைகளில் வளைந்த வில்லும், பூட்டிய அம்புமாகக் காட்சி தந்தார்கள். இன்னொரு கோலத்தில் இராம லக்ஷ்மணர்கள் தசகண்ட ராவணனுடன் கோர யுத்தம் செய்யும் காட்சி தென்பட்டது.

மற்றொரு கோலத்தில் மகாரதர்கள் பலருக்கு மத்தியில் அபிமன்யு தன்னந்தனியாக நின்று போராடும் காட்சி தோன்றியது.

ஆஹா! காஞ்சி நகரத்துப் பெண்மணிகள் பாரத நாட்டு வீரர் கதைகளை நன்கு அறிந்திருந்ததோடு சித்திரக் கலையிலும் மிக வல்லவர்கள் என்பதிலே சந்தேகமில்லை.

சக்கரவர்த்தியின் அரண்மனையிலும் அன்றிரவெல்லாம் ஒரே கலகலப்பாயிருந்தது. அரண்மனை வாசலிலும் நிலா முற்றத்திலும் அலங்காரங்கள் செய்யப்பட்டன. வாழை மரங்களும் தோரணங்களும் கட்டினார்கள். செக்கச் சிவந்த மலர்க் கொத்துக்களோடு கூடிய தொண்டைக் கொடிகளைக் கட்டுக் கட்டாய்க் கொண்டு வந்து நெடுகிலும் கட்டித் தொங்கவிட்டார்கள்.

நிலா முற்றத்தில் வாள்களையும் வேல்களையும் நெய் தடவித் தேய்த்துத் தீட்டிக் கண்கள் கூசும்படி மின்னச் செய்தார்கள். யானைகளுக்கும் குதிரைகளுக்கும் பூட்ட வேண்டிய ஆபரணங்களுக்கு மெருகு கொடுத்துப் பளபளக்கச் செய்தார்கள்.

வீதிகளிலும் அரண்மனை வாசலிலும் இப்படியெல்லாம் அல்லோலகல்லோலமாயிருக்க, அரண்மனையின் அந்தப்புரத்துக்குள்ளே மட்டும் அமைதி குடிகொண்டு நிசப்தமாயிருந்தது.

அங்குமிங்கும் முக்கிய காரியமாகச் சென்ற தாதிகள் அடிமேல் அடிவைத்து மெல்ல நடந்தார்கள். ஒருவருக்கொருவர் பேசும் போது காதோடு வாய் வைத்து மிகவும் மெதுவாகப் பேசினார்கள்.

இதன் காரணம் அச்சமயம் சக்கரவர்த்தி அந்தப்புரத்துக்கு வந்து தமது பட்டமகிஷியிடம் விடைபெற்றுக் கொண்டிருக்கிறார் என்று அவர்களுக்கெல்லாம் தெரிந்திருந்ததுதான்.

இதுவரையில் நாம் பிரவேசித்தறியாத பல்லவ சக்கரவர்த்தியின் படுக்கை அறைக்குள்ளே, சந்தர்ப்பத்தின் முக்கியத்தைக் கருதி நாமும் இப்போது போய்ப் பார்ப்போம்.

நீலப் பட்டு விதானத்தாலும் முத்துச் சரங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்த தந்தனைக் கட்டிலில் பஞ்சணைமெத்தை மீது சக்கரவர்த்தி அமர்ந்திருக்கிறார். அவருக்கெதிரில் பல்லவ சாம்ராஜ்யத்தின் பட்டமகிஷி பாண்டியராஜன் குமாரி, வானமா தேவி மிக்க மரியாதையுடன் நின்று கொண்டிருக்கிறாள். சற்றுத் தூரத்தில் திறந்திருந்த வாசற்படியின் வழியாகப் பார்த்தால், அடுத்த அறையிலே தங்கக் கட்டில்களில் விரித்த பட்டு மெத்தைகளிலே பல்லவ குமாரன் மகேந்திரனும், அவன் தங்கை குந்தவியும் நிம்மதியாகத் தூங்குவது தெரிகிறது.

ஒன்பது வருஷத்துக்கு முன்னால் மாமல்லரை மணந்து, பல்லவ சிம்மாசனத்துக் குரியவளான பாண்டிய குமாரி வானமா தேவியை முதல் முதல் இப்போதுதான் நாம் நெருங்கி நின்று பார்க்கிறோம். அப்படிப் பார்க்கும்போது, பாண்டிய நாட்டுப் பெண்ணின் அழகைப் பற்றிக் கவிகளிலும் காவியங்களிலும் நாம் படித்திருப்பதெல்லாம் நினைவிற்கு வருகிறது. அந்த அழகெல்லாம் திரண்டு ஓர் உருவம் பெற்று நம் முன்னால் நிற்கிறதோ எனத் தோன்றுகிறது.

அவளுடைய திருமேனியின் நிறம் செந்தாமரை மலரின் கண்ணுக்கினிய செந்நிறத்தை ஒத்திருக்கிறது. அவளுடைய திருமுகத்திலுள்ள கருவிழிகளோ, அன்றலர்ந்த தாமரை மலரில் மொய்க்கும் அழகிய கருவண்டுகளை ஒத்திருக்கின்றன....

இதென்ன அறியாமை? வானமா தேவியின் சௌந்தரியத்தையாவது, நாம் வர்ணிக்கவாவது?

தபஸிகளுக்குள்ளே மிகக் கடுந் தபஸியான சிவபெருமானுடைய தவம் கலைவதற்கு எந்தத் திவ்ய சுந்தராங்கி காரணமாயிருந்தாளோ எவளுடைய மோகன வடிவத்தைக் கண்டு அந்த ருத்ர மூர்த்தியின் கோபாக்னி தணிந்து உள்ளம் குளிர்ந்ததோ அத்தகைய உமாதேவி பூமியில் அவதரிக்கத் திருவுளங்கொண்ட போது, மதுரைப் பாண்டிய ராஜனுடைய குலத்தையல்லவா தேர்ந்தெடுத்தாள்? சுடுகாட்டில் பூத கணங்களுக்கு மத்தியில் சாம்பலைப் பூசிக்கொண்டு பீபத்ஸ நடனம் புரிந்த எம்பெருமான் மண்டை ஓடு முதலிய தன்னுடைய கோர ஆபரணங்களையெல்லாம் அகற்றிவிட்டுச் சுந்தரேசுவரராக உருக்கொண்டு சுந்தர சகல புவன சுந்தராங்கியைத் தேடி வந்து மணம் புரிந்தாரோ, அந்தப் பார்வதி தேவி பிறந்த குலமல்லவா பாண்டிய குலம்? அப்பேர்ப்பட்ட குலத்தில் உதித்த வானமா தேவியின் சௌந்தரியத்தை நம்போன்றவர்களால் வர்ணிக்க முடியுமா?

"தேவி! புறப்பட வேண்டிய தருணம் வந்துவிட்டது. நாளைச் சூரியன் உதயமாகும்போது, நானும் போருக்குப் பிரயாணமாவேன்!" என்றார் சக்கரவர்த்தி.

வானமாதேவி மறுமொழி ஒன்றும் சொல்லவில்லை. அவளுடைய கண்களின் ஓரத்திலே இரு கண்ணீர்த் துளிகள் ததும்பி நின்று தீபச் சுடரின் ஒளியில் முத்துக்களைப் போல் பிரகாசித்தன.

"திரும்பி வர எத்தனை காலம் ஆகுமோ தெரியாது. ஒருவேளை திரும்பி வருகிறேனோ, என்னவோ! அதுவும் சொல்வதற்கில்லை. தேவி! உனக்குப் பெரும் பொறுப்பைக் கொடுத்து விட்டுப் போகிறேன். மகேந்திரனையும் குந்தவியையும் நீ கண்ணும் கருத்துமாய் வளர்த்து வர வேண்டும். இந்தப் பல்லவ ராஜ்யத்தைப் பாதுகாத்து, மகேந்திரனுக்கு வயது வந்ததும் அவனிடம் ஒப்புவிக்க வேண்டும்!" என்று மாமல்லர் கூறியபோது, அதுவரை தலைகுனிந்து நின்று கொண்டிருந்த வானமா தேவி சக்கரவர்த்தியின் காலடியில் அமர்ந்து, அவருடைய பாதங்களைக் கண்ணீரால் நனைத்தாள்.

"தேவி! இது என்ன? வீரபாண்டியன் குலத்தில் உதித்தவள் கணவனைப் போர்க்களத்துக்கு அனுப்பத் தயங்குகிறாயா?" என்று சக்கரவர்த்தி சிறிது பரபரப்புடன் கேட்டார்.

அமரர் கல்கி

வானமா தேவி நிமிர்ந்து நோக்கிக் கூறினாள் : "பிரபு! அத்தகைய தயக்கம் எனக்குச் சிறிதும் இல்லை. இந்த இராஜ்யத்தைப் பாதுகாத்து மகேந்திரனிடம் ஒப்படைக்கும் பொறுப்பும் எனக்கு நிச்சயமாய் ஏற்படாது. நான் பிறந்த மதுரைமா நகரில் ஜோசியக் கலையில் தேர்ந்த நிபுணர்கள் பலர் உண்டு. அவர்கள் என்னுடைய மாங்கல்ய பலத்தைப் பற்றி ரொம்பவும் சொல்லியிருக்கிறார்கள். தாங்கள் சளுக்கரை வென்று, வாதாபியை அழித்துவிட்டு வெற்றி வீரராகத் திரும்பி வருவீர்கள், சந்தேகம் இல்லை!"

"பின் எதற்காக உன்னுடைய கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் சிந்தின? உனக்கு என்ன துயர் யாரால் ஏற்பட்டது? மனத்தைத் திறந்து சொல்ல வேண்டும்" என்றார் மாமல்லர்.

"சுவாமி என்னுடைய மாங்கல்யத்தின் பலத்தைப் பற்றிச் சொன்ன அரண்மனை ஜோசியர்கள் இன்னொரு விஷயமும் சொல்லியிருக்கிறார்கள். என் கழுத்திலே மாங்கல்யத்தோடு என் நெற்றியிலே குங்குமத்தோடு, மீனாக்ஷியம்மனின் பாதமலரை நான் அடைவேன் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒருவேளை தாங்கள் திரும்பி வருவதற்குள் அவ்விதம் நேர்ந்துவிடுமோ என்று எண்ணிவேன். அதனாலேதான் கண்ணீர் வந்தது. தாங்கள் வெற்றி மாலை சூடி இந்த மாநகருக்குத் திரும்பி வருவதைக் கண்ணாற் பாராமல் வானுலகத்துக்குப் போகக் கூட எனக்கு இஷ்டமில்லை!" என்று வானமாதேவி கூறியபோது, மீண்டும் அவளுடைய விசாலமான நயனங்களிலிருந்து கலகலவென்று கண்ணீர்த் துளிகள் சிந்தின. அப்போது மாமல்லர் அந்தப் பாண்டியர் குலவிளக்கைத் தமது இரு கரங்களினாலும் தூக்கிக் கட்டிலில் தம் அருகில் உட்கார வைத்துக் கொண்டார். தமது வஸ்திரத்தின் தலைப்பினால் அவளுடைய கண்களில் பெருகிய கண்ணீரைத் துடைத்தார்.

"தேவி! நானும் ஒரு ஜோசியம் சொல்லுகிறேன், கேள்! புலிகேசியைக் கொன்று, வாதாபியையும் அழித்துவிட்டு நான் வெற்றி மாலை சூடித் திரும்பி வருவேன். திக்விஜயம் செய்து விட்டுத் திரும்பி வரும் சக்கரவர்த்தியைக் காஞ்சிநகர் வாசிகள் கண்டு களிக்கும் பொருட்டு, வெண் புரவிகள் பூட்டிய தங்க ரதத்திலே நான் ஏறி நகர்வலம் வருவேன். அப்போது என் அருகில் நீ வீற்றிருப்பாய். உன்னுடைய மடியில் மகேந்திரனும் என்னுடைய மடியில் குந்தவியும் அமர்ந்திருப்பார்கள்....."

"பிரபு! அத்தகைய ஆசை எல்லாம் எனக்கில்லை. தாங்கள் திக்விஜயத்திலிருந்து திரும்பி வருவதைக் கண்ணால் பார்க்கும் பேறு பெற்றேனானால் அதுவே போதும். தாங்கள் திரும்பி வந்த பிறகும் நான் இந்தப் பூமியில் இருக்க நேர்ந்தால், நான் இத்தனை நாளும் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் ஸ்தானத்தை, தங்கள் அருகில் வீற்றிருக்கும் பாக்கியத்தை, அதற்கு நியாயமாக உரியவளிடம் உடனே ஒப்புவித்துவிட்டு அகன்று விடுவேன். இந்த அரண்மனையில் தாங்கள் மனம் உவந்து ஒரு சிறு இடம் கொடுத்தால் இங்கேயே இருப்பேன். தங்கள் சித்தம் வேறு விதமாயிருந்தால் என் பிறந்தகத்துக்குப் போய்விடுவேன்!" என்று வானமா தேவி கூறிய மொழிகள் மாமல்லரைத் தூக்கி வாரிப் போட்டன.

"தேவி! இது என்ன? இந்த ஒன்பது வருஷமாக ஒருநாளும் சொல்லாத வார்த்தைகளைக் கூறுகிறாய்? உன்னிடம் யார் என்ன சொன்னார்கள்? எதை எண்ணி இவ்வாறெல்லாம் பேசுகிறாய்?" என்று மாமல்லர் மனக் கிளர்ச்சியோடு வினவினார்.

"சுவாமி! இந்த அரண்மனையிலும் இந்த மாநகரிலும் இந்தப் பல்லவ ராஜ்யத்தில் எல்லாருக்கும் தெரிந்த விஷயம் எனக்கு மட்டும் தெரியாமலிருக்கும் என்றா நினைத்தீர்கள்!"

"நீ எதைப்பற்றிச் சொல்லுகிறாய் என்பது இன்னமும் எனக்குத் தெரியவில்லை. அரண்மனையிலும் ராஜ்யத்திலும் எல்லாருக்கும் தெரிந்த அந்த மர்மமான விஷயந்தான் என்ன?" என்று சக்கர்வர்த்தி ஆர்வத்துடன் கேட்டார்.

"மர்மம் ஒன்றுமில்லை பிரபு! தாங்கள் வாதாபிக்கு எதற்காகப் படையெடுத்துச் செல்கிறீர்கள் என்பதைப் பற்றித்தான்."

"எதற்காகப் படையெடுத்துப் போகிறேன்? அதைப்பற்றி நீ என்ன கேள்விப் பட்டாய்?" என்று மாமல்லர் கேட்டார்.

"என் வாயினால் சொல்லத்தான் வேண்டுமா? ஆயனச் சிற்பியின் மகளைச் சிறை மீட்டுக் கொண்டு வருவதற்காகப் போகிறீர்கள்....."

"ஆஹா! உனக்கும் அது தெரியுமா? எத்தனை காலமாகத் தெரியும்? எப்படித் தெரியும்?"


"எத்தனையோ காலமாகத் தெரியும். ஒன்பது வருஷத்துக்கு முன்னால் நான் இந்த அரண்மனையில் பிரவேசித்த புதிதில் தாய்மார்களும் தாதிகளும் என்னை அடிக்கடி பரிதாபமாகப் பார்த்தார்கள். என்னைப் பற்றி ஒருவருக்கொருவர் அநுதாபத்துடன் பெருமூச்சு விட்டுக் கொண்டு பேசினார்கள். சிறிது சிறிதாக அவர்களுடைய பேச்சுக்களிலிருந்து நான் ஊகித்துத் தெரிந்து கொண்டேன். சுவாமி! நான் தங்களுடைய பட்டமகிஷியாகி ஒரு வருஷத்துக்குள்ளேயே தங்களுடைய இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் பட்டமகிஷி வேறொருத்தி உண்டு என்று அறிந்து கொண்டேன்...."

''அப்படித் தெரிந்திருந்தும், நீ என்னை ஒரு முறையாவது அந்த விஷயமாகக் கேட்கவில்லை. ஒன்பது வருஷத்தில் ஒரு முறையாவது என்மீது குற்றங்கூறி நிந்திக்கவில்லை. தேவி! கதைகளிலும் காவியங்களிலும் எத்தனையோ கற்பரசிகளைப் பற்றி நான் கேட்டிருக்கிறேன், அவர்களில் யாரும் உனக்கு இணையாக மாட்டார்கள்'' என்று மாமல்லர் பெருமிதத்துடன் கூறினார்.

''பிரபு! தங்களுடைய வார்த்தைகள் எனக்குப் புளகாங்கிதத்தை அளிக்கின்றன. ஆனால், அந்தப் புகழுரைகளுக்கு நான் அருகதையுடையவள் அல்ல!'' என்றாள் பாண்டிய குமாரி.

''நீ அருகதையுடையவள் அல்ல என்றால் வேறு யார்? உன்னை அக்கினி சாட்சியாக மணந்த புருஷன் இன்னொரு பெண்ணுக்குத் தன் உள்ளத்தைப் பறி கொடுத்தவன் என்று தெரிந்திருந்தும் நீ ஒரு தடவையாவது அதைப்பற்றி என்னைக் கேட்கவில்லை. என்பேரில் குற்றம் சொல்லவும் இல்லை. பெண் குலத்திலே இதைக் காட்டிலும் உயர்ந்த குணநலத்தை யார் கண்டிருக்கிறார்கள்?''

''சுவாமி! தங்கள் பேரில் எதற்காகக் குற்றம் சொல்லவேண்டும்? குற்றம் ஏதாவது இருந்தால் அது என் தந்தையையும் தமையனையுமே சாரும். அவர்கள்தானே



என்னைத் தாங்கள் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்று பிடிவாதம் பிடித்தார்கள்? தாங்கள் அதை மறுத்ததற்காக என் தமையன் ஜயந்தவர்மன் கோபங்கொண்டு இந்தப் பல்லவ ராஜ்யத்தின் மேல் படையெடுத்துக்கூட வந்தானல்லவா? அவனைத் தாங்கள் கொள்ளிடக் கரையில் நடந்த போரில் வென்று புறங்காட்டி ஓடச் செய்யவில்லையா? என் தமையன் திரும்பிவந்து தங்களை ஜயித்துவிட்டதாகச் சொன்ன போது மதுரை அரண்மனையிலே நாங்கள் யாரும் அதை நம்பவில்லை. தற்பெருமை மிகுந்த என் தமையனுக்குத் தங்களால் நேர்ந்த கர்வ பங்கத்தைப் பற்றிப் பேசிப் பேசி மகிழ்ந்தோம். அப்படியும் என் அண்ணன் தங்களை விடவில்லை. தன்னுடைய வார்த்தையை நிலை நாட்டுவதற்காக எப்படியாவது என்னைத் தங்கள் கழுத்தில் கட்டிவிடப் பிரயத்தனம் செய்தான்....''

''தேவி! ஜயந்தவர்மனுடைய கட்டாயத்துக்காகவே நான் உன்னை மணந்ததாக இன்னமும் நீ நம்புகிறாயா?'' என்று நரசிம்ம வர்மர் கேட்டபோது அவருடைய முகத்தில் புன்னகை தோன்றியது.


''இல்லை, பிரபு! ஜயந்தவர்மனுடைய கட்டாயத்துக்காக என்னைத் தாங்கள் மணக்கவில்லை. பல்லவ ராஜ்யத்தின் நன்மைக்காக என்னை மணந்தீர்கள். வடக்கேயுள்ள ராட்சதப் பகைவனோடு சண்டை போடுவதற்காகத் தெற்கேயுள்ள மன்னர்களுடன் சிநேகமாயிருக்க வேண்டுமென்று என்னை மணந்தீர்கள். என் தமையனுடைய கட்டாயத்துக்காக என்னைத் தாங்கள் மணக்கவில்லை. தங்கள் தந்தையின் உபதேசத்தைக் கேட்டு மணந்தீர்கள். இந்த அரண்மனைக்கு வந்த சில நாளைக்குள்ளேயே இதெல்லாம் நான் தெரிந்து கொண்டேன்....''

''ஆயினும் ஒரு தடவையாவது இதையெல்லாம் பற்றி என்னிடம் நீ கேட்கவில்லை. ஆகா! பெண்களின் இருதயம் வெகு ஆழமானது என்று சொல்வது எவ்வளவு உண்மை?'' என்று மனத்திற்குள் எண்ணிய வண்ணம் மாமல்லர் தன் பட்டமகிஷியின் முகத்தை உற்றுப் பார்த்தார். அந்தச் செந்தாமரை முகத்தில் கபடத்தின் அறிகுறியை அணுவளவும் அவர் காணவில்லை; எல்லையில்லாத நம்பிக்கையும் அளவு காணாத அன்பும் சாந்தமும் உறுதியும் காணப்பட்டன!

வானமாதேவி கூறினாள் : ''சுவாமி, தாங்கள் எதற்காக என்னை மணந்து கொண்டீர்கள் என்பது பற்றி நான் என்றைக்கும் கவலைப்படவில்லை. ஏனெனில், நான் எதற்காகத் தங்களை மணந்தேன் என்பது என் உள்ளத்தில் நன்கு பதிந்திருந்தது. ஜயந்தவர்மன் கொள்ளிடக் கரையில் தங்களால் முறியடிக்கப்பட்டுத் திரும்பி வந்த செய்தியைக் கேட்டபோது, என் உள்ளம் தங்களைத் தேடி வந்து அடைந்தது. அடுத்த நிமிஷத்தில், மணந்தால் தங்களையே மணப்பது, இல்லாவிடில் கன்னிகையாயிருந்து காலம் கழிப்பது என்ற உறுதி கொண்டேன். என் விருப்பம் நிறைவேறியது. தங்களை மணக்கும் பாக்கியத்தை அடைந்தேன். தங்கள் அரண்மனையில் ஒன்பது வருஷ காலம் எவ்வளவோ ஆனந்தமாக வாழ்ந்து வந்தேன். பிரபு! இந்த ஆனந்தம் என்றென்றைக்கும் நீடித்திருக்க வேண்டுமென்று நான் ஆசைப்படவில்லை. சில காலமாவது மற்றவர்களும் சந்தோஷமாயிருக்க வேண்டுமல்லவா, ஆயனர் மகளைச் சிறை மீட்டு அழைத்துக் கொண்டு தாங்கள் என்றைக்கு இந்த மாநகருக்குத் திரும்பி வருகிறீர்களோ, அன்றைக்கே நான் இந்தப் புராதன பல்லவ சாம்ராஜ்யத்தின் தங்கச் சிம்மாசனத்திலிருந்தும், இந்தப் பூர்வீக அரண்மனையின் தந்தக் கட்டிலிலிருந்தும் கீழே இறங்கச் சித்தமாயிருப்பேன்'' என்று தழுதழுத்த குரலில் கூறி வானமாதேவி கண்ணீர் ததும்பிய கரிய கண்களினால் மாமல்லரைப் பார்த்தாள்.

உணர்ச்சி ததும்பிய அந்த வார்த்தை ஒவ்வொன்றும் கள்ளம் இல்லாத உண்மை உள்ளத்திலேயிருந்து வந்தனவென்பதை மாமல்லர் தெளிந்து உவகை கொண்டார்.

(தொடரும்)



''ஞாபகமறதி ரொம்ப ஓவராயிடுச்சு டாக்டர்!''

''எப்படிச் சொல்றீங்க?''

''காப்பியடிச்சு எழுதியனுப்பின கதையையே மறுபடியும் காப்பியடிச்சு எழுதி அனுப்பிட்டேன்!''

- எஸ். முகம்மது யூசுப்

''எது எதுக்குப் பந்தயம் வைக்கறதுன்னு விவஸ்தையே இல்லாமப் போச்சு சார்!''

''ஏன் அப்படிச் சொல்றீங்க?''

''பின்னே என்ன சார், அங்கே பாருங்க அமைச்சர் படத்தை வச்சு 'இவர் எத்தனை நாள் பதவியில் இருப்பார்'னு பந்தயம் கட்டறாங்க!''

- டி. எஸ். டி. ராயன்



●● ''மு. வ. - கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைகள்'' என்ற தலைப்பில் மதுரை காமராசர் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள நூல் தேவைப்படுகிறது. விலைக்குக் கொடுத்து உதவுங்கள்.

- மு. ஞானசேகரன்,
ஆசிரியர்,
பெரியார் நகர்,
நிலக்கோட்டை - 624 208.

●● இறால் வளர்ப்புக்கு ஏற்ற 3 முதல் 5 ஹெக்டேர் வரை கடற்கரையையொட்டிய நிலங்கள் தேவை. கன்னியாகுமரி, சிதம்பரனார், புதுக்கோட்டை, நாகப்பட்டினம் மாவட்டங்களில் நில உடைமையாளர்கள் அல்லது தரகர்கள் தொடர்பு கொள்ளவும்.

- எல். ராமலக்ஷ்மி,
20, 7வது கிராஸ், 7வது மெயின்,
ஸ்ரீனிவாச நகர், புத்தூர்,
திருச்சி - 600 017.

●● புகைப் படக் கலையை அரசியல், சினிமா, மற்றும் குடும்ப நிகழ்ச்சிகளுக்குப் பயன்படுத்தி வரும் நான், ஆர்வமுள்ளவர்களுக்கு இக் கலையை இலவசமாகக் கற்பிக்க விரும்புகிறேன். கையில் சொந்தமாகக் காமிரா இருப்பது நலம்.

- எம். ஜோதி,
52, கந்தசாமி
கோவில் தெரு,
கொசப்பேட்டை,
சென்னை - 12.



பாலம்

●● பொழுது போக்காக எலெக்டிரானிக்ஸ் பற்றித் தெரிந்து கொள்ள முயற்சி செய்கிறேன். இத்துறையில் என் சந்தேகங்களைப் போக்கி, புதுவிதமான சிறிய சர்க்யூட்களை செய்முறைப் பயிற்சிக்கு அளிக்கக்கூடிய பேனா நண்பர்களை நாடுகிறேன்.

- ஜி. அசோகன்,
மே/பா வி. கோபால்,
செல்லப்பள்ளி, பேர்ணாம்பட்டு,
வ. ஆ. அ. மா.வ. - 635 810.

●● வயதான தம்பதியருக்குப் பணிவிடை செய்ய அநாதையான/திக்கற்ற பெண் (25-40 வயது) தேவை. உணவு, உடை, இருப்பிடம் இலவசம். சுயமாகப் பகுதி நேர கைத் தொழில் கற்க உதவி செய்யப்படும்.

- எஸ். குருமூர்த்தி,
13 B, ஸ்ரீ ரமண குடில்,
20-3 செங்கம் ரோடு என் - 3,
திருவண்ணாமலை - 606 603.

●● ''நானும் வருகிறேன்'' என்ற கவிதைத் தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளேன். விற்பனையில் மிஞ்சியுள்ள மேற்படி நூலைத் தற்போது 40% விலையில் தள்ளுபடி செய்து ரூ 3க்குத் தரத் தயாராய் இருக்கிறேன். வாசகர்களோ, புத்தக விற்பனையாளர்களோ தொடர்பு கொள்ளவும்.

- கே. இளங்கோவன்,
கலை இல்லம், நல்லமாங்குடி,
நன்னிலம் - 610 105.

●● 1946 முதல் 1948 பிப்ரவரி வரை காந்திஜியால் வெளியிடப்பட்ட தமிழ் ஹரிஜன் இதழ்கள் உள்ளன. தேவைப்படுவோர் எழுதவும்.

- அரு. மெய்யப்பன்,
37A, நந்தவனம் வீதி,
விஸ்வநாதபுரம்,
ராமச்சந்திராபுரம் (போஸ்ட்),
புதுக்கோட்டை (மாவ) 622 505.

●● லாமினேஷன் செய்வது எப்படி என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன். விவரம் தெரிவித்து, பயிற்சியும் அளிக்கக் கூடியவர்களுக்கு நன்றி.

- ஏ. அரிஷேக் மன்சூர்,
மே/பா அப்துல் குத்தூஸ்,
4/37 சோழமாதேவி 642 113
உடுமலை (வட்டம்).

●● 1948 முதல் 53 வரை தண்டலை கிராமத்தில் மிகவும் நெருங்கிப் பழகிய நண்பர் எஸ். துரையப்பனுடன் மீண்டும் தொடர்பு கொள்ள இறைவன் அருளை வேண்டுகிறேன்.

- டி. எஸ். வேங்கடராமன்,
22, சந்தான கோபாலபுரம்,
கிழக்கு அக்ரஹாரம்,
விழுப்புரம் - 605 602.

●● எம். ஜி. ஆர். மாவட்டம் திருப்போரூர் அருள்மிகு கந்தசாமி திருக்கோயில் சம்பந்தமான தலபுராணம், ஸ்ரீமத் சிதம்பர சுவாமிகளின் திருவுருவப் படம், சந்நிதி முறை முதலியவற்றை எனக்கு அளித்து உதவக் கேட்டுக் கொள்கிறேன்.

- சி. சுரேஷ்குமார்,
15, சுப்பராயன் சாலை,
(Out House Flat),
மயிலாப்பூர், சென்னை - 600 004.

மொழி விளையாடுகிறது



நான் கிருபாகரனின் நண்பன். அப்படித்தான் சொல்லிக் கொள்ள வேண்டும். கிருபாகரன் என் நண்பன் என்று பெருமையுடன் நான் சொல்லிக் கொள்ள முடியாது. நான்கு பேர் காதுகளில் விழுந்தால் வெட்கப்படக்கூடிய சமாசாரம்.

தனக்குத் தேவையான போது அவன் என்னைத் தேடி வருவான். யோசனை கேட்பான். பணம் கேட்பான். சமயத்தில் என் நேரத்தையும் கேட்பான். அதாவது அவனுடன் அவன் விருப்பப்பட்ட இடங்களுக்கெல்லாம் நான் செல்ல வேண்டும். மறுத்தால் 'இதுதான் நண்பனுக்கு அழகா?' என்று கேட்கக் கூடியவன். 'உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு' என்பதாகக் கையைக் குடுகுடுப்பாண்டி உடுக்கை ஆட்டுவதைப் போலக் காட்டி, அபிநயித்து என்னைத் தன் வழிக்கு இழுப்பவன்.

அடுத்தாற்போல, ஏதேனும் உதவிக்கு அல்லது பார்த்து நாட்கள் ஆகிவிட்டதே என்று சென்றால், ஒன்று வீட்டில் இருக்க மாட்டான். அப்படி இருந்தாலும் அவசர ஜோலியாகப் புறப்பட்டுக் கொண்டிருப்பதாக இங்கிதம் இல்லாமல் சொல்வான். அல்லது வீட்டில் இருந்து கொண்டே இல்லை என்று சொல்லச் சொல்வதும் உண்டு.

கருள் கருளான முடியும், இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு ஃப்ரேம் போட்ட பளபளப்பான மூக்குக் கண்ணாடியும், சிவந்த நிறமும் கொண்ட இவனை நண்பனாகப் பெற என்ன தவம் செய்தேனோ என்று இருக்கும் எனக்கு.

''பார்த்தாயா விளம்பரத்தை!'' என்று கேட்டபடி பத்திரிகையை அகல இறக்கைகளாக விரித்தபடி வந்து எதிரே சோஃபாவில் கழுகாக அமர்ந்தான் கிருபாகரன் ஒரு சமயம்.

பத்திரிகையை வாங்கிப் பார்த்தேன். கால் பக்க விளம்பரம் அது.

திருவாழத்தான்

'எங்கும் தமிழ்!
எதிலும் தமிழ்!
நாளை ஏட்டில்
எதிர்பாருங்கள்!'

நாற்பத்திரண்டு பாயின்ட்டில் கொட்டை எழுத்துக்கள்.

''என்ன இது?'' கேட்டேன்.

''விளம்பரம்.''

''தெரியறது. எதுக்காக இந்த விளம்பரம்?''

''தொழில் தொடங்கப் போகிறேன்.''

''என்ன தொழில்?''

''அவ்வளவு எளிதாக உன்னிடம் சொல்லி விடுவேனா? நாளை இதழில் இதே பகுதியைப் பார்.''

சற்று அவனைக் கூர்ந்து நோக்கினேன். ஏதோ ரகசியத்தை மனதுள் ஒளித்து வைத்துக் கொண்டு, குழந்தையாக முகத்தில் சிரிப்பைக் காட்டினான்.

பத்திரிகையை மடித்து அவன் கையில் தந்தேன்.

''எனக்கு நீ ஒரு சின்ன உதவி செய்ய வேண்டும்.''

''உதவியா?''

''ஆமாம்.''

''செய்ய மாட்டேன்.''

''செய்ய மாட்டாயா?'' இறக்குமதி செய்யப்பட்ட ஃப்ரேம் கொண்ட மூக்குக் கண்ணாடி அவிழ்ந்திருந்தாலும், அவனுடைய முகம் பரிதாபமாக இருந்தது.

''மாட்டேன்.''

''ஏன்?''

''எதுக்காக உனக்கு உதவி செய்யணும்?''

கையால் உடுக்கை அடித்துக் காண்பித்தான்.

''அப்படி என்னை ஒரு நண்பனாக நீ நினைக்கிறதாகத் தெரியலியே!''

''எதனால் அப்படிச் சொல்கிறாய்?''

எரிச்சலாக இருந்தது அவனுடைய பேச்சு. ''நான் உன் நண்பன்னா, நமக்குள்ளே எதுக்கு ரகசியம்?''

நிதானித்தான் கிருபாகரன். ''ஓ, அதைச் சொல்கிறாயா?''

''அதையேதான் சொல்றேன்.''

''ஒரு 'சஸ்பென்ஸ்' ஆக இருக்கட்டுமே என்றுதான் சொல்லவில்லை.''

''சஸ்பென்ஸுக்குத் தமிழில் என்ன சொல் என்கிறது உனக்குத் தெரியாதா?''

''இன்னும் எவ்வளவோ எனக்குத் தெரியாது. உதவத்தான் நீ இருக்கிறாயே! எனக்கு என்ன கவலை? சரி, விவரத்துக்கு வருவோம். நல்ல தமிழ் பண்டிட் எவரை யாவது உனக்குத் தெரியுமா?''

''தமிழ் பண்டிட்டா?''

''தமிழ் வித்வான்.''

''அதுவும் சரியில்லை.''

''தமிழ் ஆசிரியர்.''

''ஊஹூம்.''

''தமிழ் அறிஞர்.''

''சரியான சொல்.''



''தமிழ் அறிஞர் எவரையாவது தெரியுமா?''

''தெரியும், தெரியாது.''

''விளையாடுகிறாயா?''

''விளையாடவில்லை, என் அருமை நண்பனே! சே! எனக்கும் உன் நோய் தொற்றிக் கொள்கிறது. உனக்குத் தேவையான அறிஞரை எனக்குத் தெரியும். என்னை அவருக்குத் தெரியாது என்று சொல்ல வந்தேன்.''

''சரி. யார் அவர்?''

''தமிழ்க்குடி மகன்.''

''பழைய அவைத் தலைவரா?''

''அவையின் பழைய தலைவர்.''

''வேண்டாம். நான் செயலாற்ற வேண்டும். தற்போதைய அரசாங்

கத்துடன் மோதிக் கொள்ள நான் விரும்பவில்லை.''

''அப்படியானால் மந்திரி நெடுஞ்செழியனைப் பாரு.''

''அமைச்சர் நெடுஞ்செழியனா?''

''ஆமா.''

''எனக்காக நீ சென்று பார்த்து வாயேன்.''

''ஐயோ!''

''சரி, சரி. நானே சென்று சந்திக்கிறேன்'' கிருபாகரன் எழுந்தான்.

மறுநாள் வந்த பத்திரிகையைப் புரட்டிப் பார்த்தேன். அதே நாற்பத்திரெண்டு பாயிண்ட் எழுத்துக்களில் இன்னொரு விளம்பரம் வந்திருந்தது.

'கல்வியில் மட்டுமே தமிழா?
அலுவலகங்களில் மட்டுமே
தமிழ் போதுமா?
கோவில் அர்ச்சனையில்
மட்டுமே தமிழ்
இருந்தால் மனம் நிறைந்து விடுமா?
விளையாட்டில் தமிழ் வேண்டாமா?
புரட்டுங்கள் இவ்வேட்டை நாளை!'

புரட்டினேன். அவ்வேட்டை அடுத்த நாள்.

'கிரிக்கெட்'டுக்குத் தமிழ் என்ன?
- தெரியாது!
'பாட்'டுக்குத் தமிழ் என்ன?
- மட்டை.
'பால்'லுக்குத் தமிழ் என்ன? - பந்து.
'பாஸ்கெட் பால்'லுக்கு
- கூடைப்பந்து.
'ஃபுட் பால்'லுக்கு - கால்பந்து.
அப்படி இருக்க, 'இந்த' சின்ன விளையாட்டில் தமிழ் புகாதிருப்பதன் பொருள் என்ன?
விவரங்கள் நாளை!'

பப்ளிசிடியில் வல்லவன் கிருபாகரன். நிச்சயம் தொழிலில் தேறி விடுவான்.

அவனைத் தேடிச் சென்றேன். இல்லை என்றாள், அவனுடைய மனைவி. தொழிலதிபரின் மனைவி. மிடுக்குத் தெரிந்தது.

''எங்கே போயிருக்கிறான்?''

''தொழிற்சாலைக்கு'' என்று சொல்லி விட்டு, மேற்கொண்டு கேள்விகளுக்கு இடம்கொடுக்க விரும்பாமல் வீட்டினுள் சென்றாள்.

''தொழிற்சாலையா?'' கிருபாகரனின் மகனான ஆறு வயது வாண்டுவிடம் கேட்டேன்.

''ஆமாம். தொழிற்சாலை. தொழிற்சாலை என்றால் உங்களுக்குத் தெரியாதா? தொழில்கள் செய்வார்களே, அந்த இடம்.''

''எங்கே இருக்கு உன் அப்பாவின் தொழிற்சாலை?''

''எங்கே இருக்கிறது என்று கேளுங்கள். தமிழ் நாட்டில் தமிழனாக வளைய வந்து கொண்டு நன்கு தமிழ் பேசத் தெரியாத உங்களையெல்லாம் ஆந்திராவுக்கு நாடு கடத்த வேண்டும்.''

''சொல்லடா என் செல்வமே! எங்கே இருக்கிறது உன் தந்தையின் தொழிற்சாலை?''

''குப்பைமேட்டில்.''

''குப்பைமேட்டிலா?'' சிறுவன் விளையாடுகிறான்.

''குப்பைமேட்டில்தான். உங்களுக்கு எதையுமே இருமுறை சொன்னால்தான் புரியுமோ?''

''எந்தக் குப்பைமேட்டில்? இங்கே தான் வீட்டுக்கு ஒரு குப்பைமேடு இருக்கிறதே, கண்ணா!''

''இதெல்லாம் குப்பைமேடா? இவை குப்பைமேடு என்றால் என் தந்தை தொழிற்சாலை தொடங்கி இருக்கும் இடம் குப்பைக் குன்று அல்லது குப்பை மலை என்று சொல்ல வேண்டும்.''

''ஓ. அந்த இடமா? லாரி லாரியாகக் குப்பைகளை அள்ளி வந்து மண் எடுத்த பள்ளத்தில் போட்டு நிரப்பிய காயாங் குளத்தைச் சொல்கிறாயா?''

''ஆமாம். லாரிக்குத் தமிழில் என்ன என்பது தெரியாதா?''

''தெரியாது.''

''எனக்கும் தெரியாது'' என்றான் அந்த வாண்டு.

காயாங்குளம் குப்பை மேட்டை நோக்கி நடந்தேன். சில காலமாக அங்கே பள்ளத்தை நகராட்சி லாரிகளில் அள்ளி வரும் குப்பைகளைக் கொண்டு நிரப்பி வந்தார்கள். காயாங்குளம் ஒரு காலத்தில் காயாத, வற்றாத குளமாக நீர் நிரம்பி இருந்தது. மழை அற்றுக் குளம் வறண்ட ஆண்டுகளில் பக்கத்து வயல்களில் போர் பம்ப்புகள் வைக்கப் போய், குளம் நிரந்தரமாக வற்றி விட்டது.

அந்த இடத்தைத் தொழிற்சாலை துவக்குவதற்காகக் கிருபாகரன் வாங்கியிருக்கிறான் என்பதைப் புரிந்து கொண்டேன்.

''கிருபாகரா, என்னடா இது!'' வியப்புடன் கேட்டேன்.

''தொழிற்சாலை.''

''என்ன தொழிற்சாலை?''

''பாரேன். பார்த்து நீயே தெரிந்து கொள்.''

பார்த்தேன். அச்சடிக்கும் யந்திரங்கள் காணப்பட்டன. காகிதங்கள், அட்டைகள், வெட்டும் யந்திரம் இருந்தன. பாக்கிங் செய்யும் யந்திரம். பசை கொண்டு ஒட்டும்

அருள்வாக்கு

உள்ளத்தில் எவ்வளவுக்கெவ்வளவு அமைதி நிலவுகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு இன்பம் மேலிடுகிறதென்பது பிரத்தியட்ச அனுபவம். மன அமைதியின் உயர் நிலையே மேலான புருஷார்த்தமாகும். அமைதி குறையக் குறையத் துன்பமும் வளரும். மனிதர்கள் தங்கள் துன்பங்கள் நீங்குவதற்கு முயற்சி செய்யும் பொழுது, பிறரைத் துன்புறுத்தவும் நேருகிறது. இவ்விதம் ஒவ்வொருவரும் சந்தர்ப்பங்களை ஒட்டி மற்றவர்களைத் துன்புறுத்த முயலும் பொழுது சமுதாயத்தில் குழப்பம் ஏற்படுகிறது. அவ்விதம் குழப்பம் நேரும் போதெல்லாம் அதை அடக்கி, அமைதியையும் சமாதானத்தையும் நிலை நிறுத்த அரசாங்க அதிகாரிகள் சட்டத்தின் மூலம் நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். ஆயினும் உண்மையான பரிகாரம் யாதெனில், மக்கள் எல்லோரும் புலன்களைப் பறிக்கும் வெளி விஷயங்களிலிருந்து தங்கள் மனதைத் திருப்பி, அதைத் தங்கள் வசமாக்கி, அமைதியாக இருக்க எப்பொழுது முற்படுகிறார்களோ, அப்பொழுதுதான் துன்பம் அவர்களை அணுகாமல் இருக்கும். அதோடு, அவர்களால் பிறருக்குத் துன்பம் விளையாமலும் இருக்கும். நல்ல கல்வியைப் பயிலும் பயனாகத்தான் இத்தகைய வெளி அமைதியும் உள் அமைதியும் நம் நாட்டிலே தொன்று தொட்டு சிந்தித்து வந்திருக்கின்றனர்.



நம் பாரத நாட்டின் முற்காலக் கல்வியின் முதல் நோக்கம், மன அமைதி நிலை அடைவதேயாகும். புதிது புதிதாகத் தோன்றும் பௌதிக விஞ்ஞான ஆராய்ச்சித் துறைகளில் மேன்மேலும் கல்வியைப் பெருக்குவதில் தவறில்லை. ஆனால் அதன் பயனைத் தர்ம மார்க்கத்தில் மட்டுமே உதவுமாறு செய்தால்தான் நாடும் மக்களும் உயர்வான அமைதி நிலையை அடைய முடியும். இவ்வாறில்லாமல், புலன்கள் போன வழியே அவைகளைப் பிரயோஜனப் படுத்திக் கொண்டிருந்தால், எத்தனை படிப்பும் விஞ்ஞான அறிவும் இருந்தாலும் கெட்ட எண்ணங்களும் துராசைகளுந்தான் வளரும். இன்னல்களும் துன்பங்களும் பெருகும்.

– ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

யந்திரம் கட்டுக் கட்டாக அட்டைகளோ, காகிதமோ அடுக்கப்பட்டிருந்தன. ஒரு பக்கம் அச்சிடும் மை டின்கள். பிளாக்குக் குவியல்கள்.

''பத்திரிகை தொடங்கப் போகிறாயா?''

''நான் முட்டாளா?''

''பின்னே என்ன அச்சடிக்கப் போறே?''

''சஸ்பென்ஸ்.''

''இன்னும் சஸ்பென்ஸ்ஸுக்குத் தமிழ் தெரியலியா?''

''இல்லை. உன் யோசனைப்படி நெடுஞ்செழியனைச் சந்தித்தேன்.''

''தொழிற்சாலையைத் திறப்பதற்கா?''

''இல்லை. ஓர் ஆங்கிலச் சொல்லுக்கு தமிழில் சரியான சொல் என்ன என்பதை அறிவதற்காக.''

''அடப் பாவி! இந்தச் சாதாரண விஷயத்துக்கு ஒரு அமைச்சரைத் தொந்தரவு செய்தாயா?''

''இலக்கணப் பிழை. ஓர் அமைச்சரை என்று சொல். நீதானே அவர் நல்ல தமிழ் அறிஞர் என்று சொன்னாய்! சந்தித்தேன்.''

''என்ன சொன்னார்?''

விவரித்தான் கிருபாகரன்.

''ஐயா நல்ல தமிழ் அறிஞர் என்று சொன்னார்கள். திருக்குறளுக்குப் பரிமேலழகரை விட அழகான உரை எழுதி இருப்பதாகச் சொன்னார்கள். அதனால் வந்தேன்.''

''அப்படியா சொன்னாங்க. சந்தோஷம். உங்க சந்தேகம் என்ன?''

''என் ஐயம் என்னவென்றால், ஜாக்கி என்பதற்கு தமிழ்ச் சொல் என்ன?''

''ஜாக்கியா?''

''ஆமாம், ஜாக்கி.''

''கார், பஸ், லாரியோட டயரை மாத்தறத்துக்கு வண்டியை உயர்த்தப் பயன் படுத்துவாங்களே, அந்த ஜாக்கியா?''

''இல்லை.''

''ரேஸ் குதிரையை விரட்டி ஓட்டும் ஜாக்கியா?''

''அதுவும் இல்லை.''

''சீட்டுக் கட்டு ஜாக்கியா?''

''அதேதான்.''

''சீட்டுக் கட்டு ஜாக்கிக்கு தமிழ்ச் சொல் எதுக்கு?''

''நான் ஒரு தொழிற்சாலை தொடங்கி, அங்கு சீட்டுக் கட்டுகள் தயாரிக்கப் போகிறேன். நான் தயார் செய்பவை தமிழ்ச் சீட்டுக்



''நேர்முகத் தேர்வில் கேள்வி கேட்காமல் என்னைத் தேர்வு செய்துட்டாங்க!''

''அப்படியா?''

''ஆமாம்... தேர்வாளர்கள் முன் உட்கார்ந்து, விரலைச் சொடுக்கி, அட்டகாசமாக் கொட்டாவி விட்டேன்... அவ்வளவுதான்!''

- பி. நாச்சிமுத்து

கட்டுகள். அச் சீட்டுகளில் ஜாக்கியை எப்படித் தமிழில் அழைப்பது என்பதாக என் ஐயம்.''

''ஜாக்கி. ஜாக்கி என்றால் சீட்டுக் கட்டைப் பொறுத்தமட்டில் 'நேவ்' என்பதற்கு மறுபெயர். அதாவது போக்கிரி'' என்றார் நெடுஞ்செழியன்.

இந்த விவரங்களை கிருபாகரன் சொல்ல, கேட்டுக் கொண்டேன்.

''நான் தமிழில் சீட்டுக் கட்டுகளை அச்சடிக்கப் போகிறேன். எத்தனை காலம் தான் தமிழகத்தில் ஆங்கில எழுத்துக்களால் ஆன சீட்டுக் கட்டுகளை வைத்துக் கொண்டு நமது குழந்தைகளும், இளைஞர்களும், முதியோர்களும், பெண்மணிகளும் விளையாடுவது? நமக்கு மொழிப்பற்று மிக அவசியம். என் மொழிப்பற்று காரணமாக, நான் சீட்டுக் கட்டுகளைத் தமிழில் கொண்டு வர இருக்கிறேன்.''

வாயைத் திறந்தபடி அவனைப் பார்த்துக் கொண்டு நின்றேன்.

''பிரிட்ஜ் ஆடுபவர்களும், ரம்மி விளையாடுபவர்களும், மூன்று சீட்டுச் சூதாடிகளும், சாலை ஓர, 'வை ராஜா வை, ஒரு ரூபாய் வைத்தால் இரண்டு ரூபாய், பத்து ரூபாய் வைத்தால், இருபது ரூபாய்' என்று சொல்லி ஜாலமாக சீட்டு மாற்றி ஏமாற்றுபவர்களும் இனி என் தமிழ்ச் சீட்டுக் கட்டைப் பயன்படுத்துவார்கள். வீட்டுக்கு வீடு - அல்ல, மேஜைக்கு மேஜை இனி தமிழ் முழங்கும்.''

திறந்த வாயை என்னால் மூட முடியவில்லை.

''தமிழை வளப்படுத்தியதற்காக எனக்குத் தமிழக அரசின் தமிழ்ப் பண்பாட்டு இயக்ககம் பரிசும் பாராட்டும் முதல்வர் கரத்தால் வழங்கும்!''

''நீ தமிழை வளர்க்கவில்லை. தமிழின் பெயரால் தொழில் செய்து, ஆதாயம் பெறப் பார்க்கிறாய்.''

''நீ அப்படி நினைக்கிறாய். உனக்கு என் மீது பொறாமை.''

''இல்லவே இல்லை! உன் தொழில் வாழ்க; நீயும் வளமுடன் வாழ்க!''

''நன்றி. ஆல்ஃபாக்கு 'ஏ' அல்லவா முதல் எழுத்து?''

''ஆமா.''

''நான் 'க'வைப் பயன்படுத்தப் போகிறேன்.''

'' 'க' என்றால் என்ன அர்த்தம்?''

''கழுதை என்பது பொருள். 'ஏ' ஃபார் ஆஸ், 'க' ஃபார் கழுதை!''

''அசடே! 'ஏ' என்றால் சீட்டுக் கட்டைப் பொறுத்தமட்டில் 'ஏஸ்' என்பதன் சுருக்கம். அதுதான் பேச்சு வழக்கில் 'ஆஸ்' ஆகி விட்டது. 'ஏஸ்' என்றால் முதன்மையான அல்லது முதலாவதான என்று பொருள். சீட்டுக் கட்டில் நெ.1 கிடையாது. அதற்குப் பதில் 'ஏ'.''

''ஓ, புரிகிறது!''

'' 'உடுக்கை' என்றால் உடுக்கை அடித்துக் காட்டுகிற உனக்குப் புரிகிறதா! ஆச்சர்யம்.''

''நெடுஞ்செழியன் 'ஏஸ்' பற்றிச் சொல்லவே இல்லையே!''

''நீ கேட்கவும் இல்லையே.''

''உண்மைதான். கிங் என்றால், மன்னன்தானே? அல்லது அதற்கும் வேறு அர்த்தமா?''

''இல்லை.''

''ராஜாவுக்கு 'ம' என்னும் எழுத்தைப் பயன்படுத்தப் போகிறேன். குயின் 'க்யூ' வுக்குப் 'ப' எழுத்து. பட்டத்து ராணி என்பது பொருள். ஜாக்கிக்கு 'போ'. அப் புறம் சாதாரண ஆங்கிலச் சீட்டுகளில் இருப் பது போல, இரண்டு, மூன்று, நான்கு... என்று எண்கள்.''

''ஜோக்கருக்கு என்ன செய்யப் போகிறாய்?''

''ஜோக்கர் என்றால் தமிழில் என்ன சொல்வது?''

''நகைச்சுவையாகப் பேசுபவன், சிரிக்கச் செய்பவன், கோமாளி என்பது பொருள்.''

''கோமாளி என்று எடுத்துக் கொண்டு, 'கோ' என்னும் எழுத்தைப் பயன்படுத்தலாமா?''

''அதைவிட 'கி' பொருத்தமாயிருக்கும்.''

''எப்படி?''

''உன் பெயர் கிருபாகரன் அல்லவா?''

கிருபாகரன் உடுக்கை அடித்துக் காட்டவில்லை. உலக்கை போல் ஓர் அச்சுக உருளையை உயர்த்தினான்.

எடுத்தேன் ஓட்டம்.

அழைக்கப்படாத அத்தை

"நீதான் கிடந்து அங்கலாய்க்கிறே.... ஆனா உன் அண்ணா பையன் மெட்ராஸி லிருந்து சேலம் வரைக்கும் வந்து தூரத்துச் சொந்தக்காரங்களுக்கெல்லாம் நேராகப் பத்திரிகை கொடுத்து, கல்யாணத்திற்குக் கூப்பிட்டுவிட்டுப் போயிருக்கான்... இதோ ஒரு எட்டு அம்மாப்பாளையம் வந்து சொந்த அத்தை உன்னைக் கூப்பிடத் தோணலை போலிருக்கு. எல்லாம் பணம் பண்ற வேலை... ஒட்டாண்டி ஏழை அத்தை உனக்கும் எனக்கும் அவ்வளவுதான் மரியாதை.... நீ என்னடான்னா நானூறு ஐநூறு கடன் வாங்கிட்டுக் கல்யாணத்துக்குப் போகணும்னு துடிக்கறே..." என்று இருஷ்ணமூர்த்தி சொன்னபோது சாரதாம்பாளுக்கு அது வாஸ்தவமாகத்தான் பட்டது.

இந்த ராம்ஜிக்கென்ன அவ்வளவு அலட்சியம் என்று நினைத்துக் கொண்டாள். இத்தனைக்கும் அவன் மேல் அலாதி பிரியம் அவளுக்கு.... குழந்தையாயிருந்ததிலிருந்து தூக்கி வளர்த்தவள். தூரத்துப் பணக்காரச் சொந்தங்களையெல்லாம் அழைத்துவிட்டுப் போனவனுக்கு இந்த ஏழை அத்தை கேவலமாகப் போய் விட்டாள் போலும்.

பல்லைக் கடித்துக் கொண்டு கல்யாணத்திற்குப் போகாமலிருந்து விட்டாள்.

அடுத்த வாரம், கல்யாணம் முடிந்த மறுநாள், சாரதாம்பாள் வீட்டு வாசலில் ஒரு கார் வந்து நின்றது. யார் என்று ஆவலோடு பார்க்க வந்த அத்தைக்கு ஆச்சர்யமாக இருந்தது.. ராம்ஜியும் அவன் புதுப் பெண்டாட்டியும்!

உற்சாகமாக உள்ளே சென்று ஆரத்தி கரைத்து எடுத்துக் கொண்டு வந்த அத்தை ஆனந்தத்தால் திக்குமுக்காடினாள். தம்பதி இருவரும், ஒரு தாம்பாளத்தில் வெற்றிலை, பாக்கு, பழத்தோடு புடவை வேஷ்டியை வைத்து அத்தையிடமும், இருஷ்ணமூர்த்தியிடமும் ஆசிர்வாதம் வாங்கினார்கள்.

"அத்தை... உன்னை நேரிலே வந்து அழைக்கலையேன்னு உனக்கு வருத்தமா இருக்கும்... வேணும்னு தான் நான் அப்படிச் செஞ்சேன். வந்து கூப்பிட்டிருந்தா நீயும் அத்திம்பேரும் கட்டாயம் கல்யாணத்திற்கு வந்திருப்பீங்க... ஆனா அதை நான் விரும்பலே. இப்போ இருக்கிற ரயில் சார்ஜுக்கு ஒரு நாள் கூத்துக்கெல்லாம் வசதியில்லாதவங்களை அலைக்கழிக்கிறது எனக்குப் பிடிக்கலே.... அப்படி பணத்தை உனக்குக் கொடுக்கலாம்னு நான் நினைச்சாலும் நீ வாங்க மாட்டே, கௌரவம் பார்ப்பே.. அதனாலதான் நீ வராம இருந்தாப் பரவாயில்லேன்னு அப்படி பண்ணினேன்... கல்யாணமான மறுநாளே உங்கிட்டே ஆசிர்வாதம் வாங்கணும்னு வந்துட்டேன்... எங்களை ஆசிர்வாதம் பண்ணுங்க."

கண்களில் நீர் ததும்ப சாரதாம்பாள் இருஷ்ணமூர்த்தியை நோக்கினாள்.

- அகிலா கார்த்திகேயன்



இன்லண்ட் லெட்டர் சிறுகதை

நிலா மயக்கும்

சுபா

10

“என்ன நந்தினி? நான் என்ன பேயா, பிசாசா? என்னைப் பாத்துப் பயந்துட்டே! காப்பி தம்ளரை வேற கீழே போட்டே?” என்று தேவராஜ் வெகு இயல்பாகத்தான் கேட்டான். உதடுகளில் ஒரு புன்னகை கூட.

யதார்த்தமாகத்தான் கேட்கிறானா, இல்லை ஆழம் பார்க்கிறானா என்று நந்தினிக்குப் புரியவில்லை.

“காப்பி கலக்கறதுக்கு நேரமாய்டிச்சே. நீங்க எங்க கோவிச்சிக்கப் போறீங்களோன்னு நெனைச்சிட்டிருந்தேன். எதிர்லேயே வந்துட்டீங்களா? கையும் ஓடலை. காலும் ஓடலை. அதான்..”

“எல்லாருமாச் சேந்து என்னை விஸ்வாமித்திரனாவே ஆக்கிடுங்க. எனக்கு எதுக்குக் கோவம் வருதுன்னு நெனைக்கறே? நான் என் வரைக்கும் சரின்னு நெனைக்கற ஒண்ணு, நான் நெனைக்கற மாதிரி நடக்கலேன்னா கோவம் வருது. எங்க காப்பி? மிச்சம் இருக்கறதையாவது கொடேன்.”

நந்தினி நீட்டிய தம்ளரை வாங்கிக் குடித்துக் கொண்டே, கிரைண்டரில் மாவு தள்ளிய புவனாவைப் பார்த்தான் தேவராஜ். எக்ஸிபிஷனில் அவளையும், ஷ்யாம் சுந்தரையும் பார்த்ததில் இருந்து அவளோடு பேசவில்லை. அவளைப் பற்றிய விசாரிப்பு எல்லாம் கூட நந்தினியிடமும், அம்மாவிடமும்தான்.

காப்பியைக் குடித்து விட்டு அவன் சமையலறையில் இருந்து வெளியேறிய பின்னரும் கூட நந்தினியால் நம்ப முடியவில்லை. தேவராஜ் காப்பிக்காகத்தான் வந்திருக்கிறான். குடித்து விட்டுப் போயிருக்கிறான். அவனுடைய இருபத்து நான்கு மணி நேர இறுக்கமான முகம், இந்தச் சந்தர்ப்பத்தில் நந்தினியை அனாவசியத்திற்கு ஒரு கலக்குக் கலக்கி விட்டது என்று உணர்ந்த பின்பும் கூட அவளுடைய மனத்தின் ஒரு மூலை ‘நிஜமாகவே அப்படித்தானா?’ என்று கேள்வி கேட்டுக் கொண்டிருந்தது.

கடிகாரம் டங்டங் என்று இரண்டு முறை ஒலித்தது இரவுக் காற்றில் அதிர்ந்தது.

ஒரு வீட்டைப் பூட்டிக் கொண்டு வேற்று ஊருக்குப் புறப்படுவதென்றால், சாமான்யமில்லை என்று நந்தினிக்குப் புரிந்தது. மேஜைகள் கழற்றப்பட்டு, பீரோக்கள் காலி செய்யப்பட்டு, பாத்திரங்கள் கோணியில் அடைக்கப்பட்டு, வீட்டில் குருப் குருப் பாய் சேர்ந்திருந்தன. இரவு ஒரு மணி வரை பேக்கிங் செய்ததில் அத்தனை பேரும் அசந்து போயிருந்தார்கள். தேவராஜின் குறட்டை மின் விசிறி வரை எழும்பியது.

நந்தினி மெல்ல எழுந்தாள். இருட்டில் வழி தேடி புவனா படுத்திருந்த இடத்திற்கு வந்தாள். அவளுடைய மெட்டிச் சத்தமே போதுமாயிருந்தது. புவனா திரும்பிப் பார்த்தாள்.

“தூங்கலையா புவனா?” கிசுகிசுப்பான குரலில் கேட்டாள்.

“எப்படிண்ணி தூக்கம் வரும்?”

“எல்லாம் எடுத்து வச்சுக்கிட்டியா புவனா?”

“பயமாருக்கண்ணி.. அண்ணன் கண்டு பிடிச்சிட்டா என்னையும் உன்னையும் வெட்டிப் புதைக்கட்டுத்தான் மறு வேலை...”

“ஷ்... சத்தமாப் பேசாத... எல்லாம் நல்லபடியா நடக்கும். ஒம் பெட்டியை இன்னும் பூட்டலையே? இத பத்திரமா வச்சுக்க...”

“என்னண்ணி இது?”

“நகைங்க. உன் கல்யாணத்துக்காகப் பண்ணி வச்சது. எல்லாத்தையும் போட்டுக்கிட்டு மாலை மாத்திக்க.. கல்யாணத்தை போட்டோ எடுத்து வச்சிக்க. நேர்ல வர முடியாட்டியும் என் மனசு பூரா அங்கதான் இருக்கும்...”

புவனா, நந்தினியின் மடியில் முகம் புதைத்துக் கொண்டாள். அவள் முதுகை வருடிக் கொடுத்த போது, நந்தினிக்கு நெஞ்செல்லாம் நிறைந்திருந்தது.

பால் கணக்கை செட்டில் பண்ணியாகி விட்டது. பேப்பர் பில் தொகையை செட்டில் பண்ணியாகி விட்டது. வீட்டுக்காரரிடம் வாடகைக் கணக்கு முடிந்து விட்டது. மிச்சமிருந்த சிறு சிறு சாமான்களும் பேக் செய்யப்பட்டு விட்டன.

ராத்திரி ரயிலில் அவர்களுக்குப் படுக்கைகள் பதிவாகியிருந்தன. தேவராஜ் கட்டி முடித்த சாமான்களை எல்லாம் லாரியில் புக் செய்ய, கடைசி நிமிடத்தில் நந்தினியையும் அழைத்துக் கொண்டு புக்கிங் ஆபீஸ் வரை போயிருந்தான்.

அம்மா அக்கம்பக்க வீடுகளில் சொல்லிக் கொள்ள இப்போதே போயிருந்தாள். வீட்டுக்கும் புவனாவிற்கும் பாட்டி காவல். பாலுக்கு வைக்கப்பட்ட பூனைக் காவல்.

புவனாவிற்கு இதயம் பட்டாம்பூச்சி சிறகாய்ப் படபடவெனத் துடித்துக் கொண்டிருந்தது.

ஷ்யாம்சுந்தர் புவனாவிற்காகத் தெரு முனையில் காத்திருப்பான். அவனோடு ஆட்டோவும் காத்திருக்கும். புவனா அவளுடைய கல்லூரி நோட்டிலிருந்து ஒரு பேப்பரை சரக்கென்று கிழித்தாள்.

'என் வாழ்வைத் தேடி நான் போகிறேன். என்னை யாரும் தேட வேண்டாம். புவனா' என்று சுருக்கமாக எழுதி தேவராஜின் கண்படும் இடத்தில் வைத்தாள். பெட்டியை எடுத்துக் கொண்டாள்.

வாசல் அறைக்கு வந்து எட்டிப் பார்த்தாள். தாத்தா வழக்கம் போல் சுவர் பார்த்து உட்கார்ந்து சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தார். பாக்கு உரலை இடித்துக் கொண்டிருந்த பாட்டி நிமிர்ந்து புவனாவைப் பார்த்து விட்டாள். புவனா பெட்டியைத் தூக்கிக் காண்பித்தாள்.

பாட்டி எழுந்து வந்தாள். தாத்தா அவள் நழுவி வந்ததே தெரியாமல் இன்னும் 'சிகரெட்'டிலேயே ஆழ்ந்திருக்க, பாட்டி அவளை அணைத்துக் கொண்டாள்.



''போய்ட்டு வா கண்ணு நல்லபடியா இரு. இதுவரைக்கும் விளையாட்டுப் பொண்ணா இருந்திருப்பே. இனிமே அப்படி இருக்காதே. என்ன இருந்தாலும் பொண்ணுதான் புருஷனுக்கு அனுசரிக்கப் போவணும். பொறப்படு. உங்கம்மா வந்துடப் போறா...''

புவனா பாட்டியின் காலைத் தொட்டு வணங்கி விட்டுப் பெட்டியை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினாள்.

இரவு ஏழு மணிக்கு வீட்டில் வெடி குண்டு வெடித்தது.

தேவராஜு"ம், நந்தினியும் வீட்டுக்குத் திரும்பி வந்த போது, நந்தினி தேவராஜின் தோளுக்குப் பின்னால் நடந்து கொண்டே பார்வையைச் சுழல விட்டாள். பாட்டியின் சைகை புவனா போய் விட்டதைத்

தெரிவித்தது. அப்பாடா என்றிருந்தது அவளுக்கு.

வீட்டு ஹாலில் அமர்ந்திருந்த அம்மா தேவராஜின் செருப்புச் சப்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள்.

''புவனா எங்கேம்மா?''

''ஒரே பித்தம். தலைவலின்னு ரூம்ல படுத்துக்கறேன்னு சொன்னாப்பா. அங்கதான் படுத்திருப்பா. கதவு மூடியிருக்குதே. நான் அப்பளம் மாமி, வேணு வீடுன்னு ரெண்டு மூணு வீட்டுக்குப் போய்ப் புறப்படற விஷயத்தைச் சொல்லிட்டு இப்பத்தான் வந்து ஒடம்பைச் சாய்ச்சேன்.''

தேவராஜ் கதவு திறந்தான். புவனா இல்லை. கடிதம் இருந்தது.

மெயில் சுருதி மாறாமல் சீரான வேகத்தில் சென்று கொண்டிருந்தது. அந்தப் பெட்டியில் பயணம் செய்து கொண்டிருந்த அத்தனை பேரும் தூங்கிப் போயிருந்தனர்.

தேவராஜ் குடும்பம் மட்டும்தான் விழித்துக் கொண்டிருந்தது. தேவராஜ் கோபத்தையும், ஆத்திரத்தையும், இயலாமையையும் அடக்கும் வழி அறியாமல், வெடித்துப் பொங்கிய எரிமலை, மிச்சம் மீதி இருக்கும் லாவாவை வழிய விடுகிற மாதிரி அடக்கமாகச் சீறிக் கொண்டிருந் தான்.

''போவட்டும். எப்ப எம் பேச்சை மதிக்காம எவன் பின்னாலயோ போனாளோ அப்படியே போவட்டும். ரயிலுக்குக் கௌம்பற அவசரத்தில இருப்போம், தேடிட்டு வர மாட்டோம்னுதானே புத்தி போயிருக்குது? தேடப் போறதில்ல.''

அம்மாவுக்கு ஒரு திட்டு. பாட்டிக்கு ஒரு அம்பு. நந்தினிக்கு ஒரு ஊசிக் குத்தல் என்று அவனது சூடான வார்த்தைகள் தெறிக் கொண்டிருந்தன.

''கூட்டிட்டு வந்து மனையில உக்கார வச்சிக் கல்யாணம் பண்ணப் போறதில்ல. நல்லவேளை. ஊரை விட்டு ஊர் ஓடறோம். இல்லாட்டி மெட்ராஸ்ல என்னால தலையை வெளிய காட்டியிருக்க முடியாது. கெழட்டுப் பொணமே சாப்ட்டு சாப்ட்டு சும்மாதானே இருக்கே. வயசுக்கு வந்த ஒரு பொண்ணு வெளிய போனது தெரியலேங்கறியே. கண்ல பொறையா விழுந்துரிச்சி?''

பாட்டி உலக்கையை இடித்துக் கொண்டே நந்தினியைப் பார்த்தாள். ஒரு நமுட்டுச் சிரிப்புச் சிரித்தாள்.

ஐயோ பாட்டி. எங்கப்பன் குதிரில் இல்லை என்று நீயே சொல்லி விடுவாய் போலிருக்கிறதே. நந்தினி பாட்டியின் மேலிருந்த பார்வையை விலக்கி ரயிலுக்கு வெளியே தெரிந்த இருட்டை வெறித்தாள்.

இந் நேரம் புவனா கல்யாணி வீட்டில் தூங்கிக் கொண்டிருப்பாள். நாளை இந் நேரம் அநேகமாய்க் கல்யாணியே அவர்களுக்குச் சாந்தி முகூர்த்த ஏற்பாடுகளைச் செய்து விடுவாள். சந்தோஷமாக இருக்கட்டும். அவர்களாவது மனசு விருப்பப்பட்ட வாழ்க்கை வாழட்டும்.

ரயில் பாமென்று அலறிக் கொண்டே ஓர் ஆற்றுப் பாலத்தின் இரும்புக் கூண்டில் நுழைந்தது.

பெங்களூரில் ஜெயநகரில் தேவராஜின் கம்பெனி அவனுக்கென அளித்திருந்த க்வார்ட்டர்ஸ் இருந்தது. தனி வீடுதான். அந்தப் பிரதேசத்தில் தனி வீடுகள் கொஞ்சம் ஆச்சரியமான விஷயமாக இருந்தது. இந்த வீடு கொஞ்சம் பழமை கலந்தது. ஆனாலும் சீராகப் பராமரிக்கப்பட்ட வீடு என்பதால் எந்தச் சிரமமும் தெரியவில்லை.

பாட்டிக்கும் தாத்தாவுக்கும் வீட்டிற்குச் சம்பந்தப்படாமல் இங்கேயும் ஒரு முன்னறை இருந்தது. சின்னத் தோட்டம். குரோட்டன்கள் அதிகம் இருந்தன. காலைக் காற்றில் குளிர் கலந்து இருந்தது. வீட்டுக்குச் சற்று தூரத்திலேயே ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்.

பால், தயிர் ஏற்பாடுகள் எல்லாம் செய்து முடித்துக் கொண்டு, வேலையில் சேர்ந்த மூன்றாவது நாளே தேவராஜ் ஆபீஸ் விஷயமாய் மெட்ராஸ் போவதாகச் சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

என்னதான் வீட்டில் பிடறிச் சிங்கமாகச் சிலிர்த்துச் சீறினாலும், அம்மா ஐந்து நாட்களாய்ச் சரியாய்ச் சாப்பிடாததும், தூங்காததும், இரவு நேரத்தில் மகளை நினைத்துப் புலம்பிக் கொண்டே தலையணையை நனைத்ததும் அவனைக் கொஞ்சம் கரைத்திருந்தன.

புவனாவை நினைத்தால் கோபமாகத்தான் இருந்தது. அவளிடம் கொஞ்சம் வாதாடி இருந்தால் அவனே அந்தப் பையனைப் போய்ச் சந்தித்துக் குலம் கோத்திரம் எல்லாம் விசாரித்து, சரிப்பட்டு வரும் போல் தோன்றினால் கல்யாணத்தை முடித்தும் வைத்திருப்பான் என்று இப்போது நொண்டி நியாயம் தோன்றியது.

எப்படியிருந்தாலும் இப்போது அம்மாவைக் கொஞ்சமாவது சமாதானப் படுத்தி ஆக வேண்டும்.

பையன் பெயர் ஷ்யாம் சுந்தர். மெட்ராஸ் பார்மஸூட்டிகல்ஸின் திருச்சி கிளை



''ஏன்டா ஏகப்பட்ட செலவு பண்ணிக் காலேஜிலே சேர்த்தேனே, ஒழுங்காப் படிக்கிறியா?''

''என்னப்பா இதெல்லாம் கேள்வி. ஏகப்பட்ட லஞ்சம் கொடுத்து உத்தியோகத்திலே சேர்த்தியே, ஒழுங்கா வேலை செய்யறியான்னு நான் கேட்டேனா?''

- எம். அசோக்ராஜா

சர்வம் சிவம் மயம்!

தத்தாத்ரேயர், அத்திரி ரிஷியின் புத்திரர். விஷ்ணு அம்சம். அத்திரி முனிவர் தவம் செய்ய, விஷ்ணு தரிசனம் தந்ததோடு தம்மையே தத்தம் செய்தார்! அதனால்தான் 'தத்தாத்ரேயர்' என்ற பெயர் வந்தது. தேவாசுரப் போரில் தேவர்களுக்கு வெற்றி தருவித்தவர் தத்தாத்ரேயர்.

தத்தாத்ரேயரிடம் மிகுந்த பக்தி கொண்டு இன்று இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் அவருக்கு இருபதுக்கு மேற்பட்ட கோயில்களைக் கட்டியிருப்பவர் கணபதி சச்சிதானந்த சுவாமிகள். தமது இறையுணர்வுடன் கூடிய இன்னிசை மூலம் பல நோய்களையும் குணப்படுத்த முடியும் என்று நம்பிச் செயல்படும் இவர், உலகை 31 தடவை சுற்றி வந்திருக்கிறார்.

''சர்வம் சிவம் மயம்'' என்ற கோஷத்தைக் கற்றுத் தரும் சுவாமிகள், ஆயுர்வேத மருத்துவமனையும் பள்ளிக் கூடங்களும் தமது மைசூர் ஆசிரமத்தின் பணிகளாக நடத்தி வருகிறார். அன்னதானத்துக்கென்று தனியே ஓர் அறக்கட்டளையும் உண்டு.



ஜூலை 13 - 14 தேதிகளில் சுவாமிஜியின் ஐம்பதாவது பிறந்த நாளை அவரது அணுக்கத் தொண்டர்கள் மைசூரில் அமர்க்களமாகக் கொண்டாடுகிறார்கள். பொன்விழா காணும் கணபதி சச்சிதானந்த சுவாமிகளின் தங்கமான சமுதாயப் பணிகளுக்கு நாமும் பல்லாண்டு கூறுவோம்.

யில் வேலை செய்பவன். அந்த இரண்டு விவரங்களை வைத்துக் கொண்டுதான் அவன் ஷ்யாம் சுந்தரையும், புவனாவையும் கண்டுபிடித்தாக வேண்டும்.

திருச்சியில் காலையிலேயே வெயில் வறுத்தெடுத்தது. மெட்ராஸ் பார்மசூட்டிகல்ஸின் திருச்சி கிளையைக் கண்டுபிடிக்கவே அவனுக்கு நடுப்பகல் ஆகிவிட்டது.

பாலக்கரை மார்க்கெட்டில் ஒரு பழைய கட்டடத்தின் முதல் மாடி. மாடிப் படிக்கவரில் யார் யாரோ துப்பி விட்டுப் போயிருந்த வெற்றிலை எச்சிலின் டிசைன்கள்.

மேலே இருந்த கதவைத் திறந்தான். பழைய மேஜைகள். மருந்துக் கம்பெனிதான் என்பதற்கு வாசனை மட்டும் சாட்சி. மேஜை மீது வெற்றிலை பாக்குப் பொட்டலத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்த ஒருவர், தேவராஜைப் பார்த்துத் தலையசைத்து வரவேற்றார்.

''வாங்க. எந்தக் கடை?''

''கடையா?''

''மருந்து வாங்கத்தானே வந்தீங்க?''

''இல்ல. நான் ஒரு பர்சனல் மேட்டரா வந்தேன்.''

''சொல்லுங்க.''

''மிஸ்டர் ஷ்யாம்சுந்தரைப் பார்க்கணும்...''

''ஷ்யாம் சுந்தரா. அப்படி யாரும் இங்கே இல்லியே!''

''இல்லையா?'' மனதில் முதல் நடுக்.

''ஷ்யாம்சுந்தர்ங்கற பேர்ல யாரும் இல்ல.''

''அடிக்கடி மெட்ராஸ் போவார் சார். ஆஸ்பிடலுக்கெல்லாம் போய் மருந்து சப்ளை செய்வார்.''

''சார். இது பார்மசூட்டிகல்ஸ். இங்க எல்லாருந்தான் மருந்து விக்க மெட்ராஸ் போவாங்க. நீங்க சொல்றவர் எப்படி இருப்பார். என்ன விஷயம். கொஞ்சம் நிதானமாப் பேசுங்க. படபடப்பாப் பேசாதீங்க.''

தேவராஜ் அவருக்கு முன்னால் இருந்த நாற்காலியில் அமர்ந்தான். அவனுடைய சட்டைப் பையில் ஷ்யாம் சுந்தரின் படம் இருந்தது. புவனாவின் புத்தகத்திலிருந்து உருவியது.

தேவராஜ் பையில் இருந்த அந்தப் புகைப்படத்தை எடுத்து அவரிடம் நீட்டினான்.

''இவனா... இவன் பெரிய ஃப்ராடாச்சே சார். என்ன ஏமாந்தீங்க? பணமா, நகையா? எவ்வளவு? போச்சா?'' என்று கேட்டார் வெற்றிலை பாக்குக்காரர்.

(தொடரும்)



அட, அப்படியா?

திருமணப் பரிசாக வெங்காயம்!

●● அணில்கள் பிற்கால உபயோகத்துக்கென பூமிக்கடியில் பழக் கொட்டைகளைப் புதைத்து வைத்துவிட்டு அவற்றைப் பற்றி அடியோடு மறந்துபோக, அந்தக் கொட்டைகளே மில்லியன் கணக் கான மரங்களாக வளர்ந்துள்ளன!

●● பண்டைக் காலத்தில் வெங்காயம் பெரிய பொக்கிஷமாகக் கருதப்பட்டது. ஐரோப்பாவில் அதைத் திருமணப் பரிசாக வழங்கினார்கள். ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட எகிப்தியக் கல்லறைகளில் வெங்காயத்தின் வரைபடங்கள் காணப்படுகின்றன.

●● உலகின் பாதி ஜனத்தொகைக்கு அரிசியே பிரதான உணவு. உலகில் 15,000 விதமான அரிசி வகைகள் உள்ளன.

●● உலகில் உள்ள பூச்சி வகைகளைக் (பூச்சிகளை அல்ல) கணக்கெடுத்தால் மனித ஜனத்தொகையைக் காட்டிலும் அதிகமாயிருக்கும். ஒவ்வோர் ஆண்டும் ஆயிரம் புதிய பூச்சி ரகங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன.

●● கறையான் ராணி, தன் ஆயுள் காலத்தில் 500 மில்லியன் 'குழந்தை'களை உற்பத்தி செய்யும்.

●● மனிதனுக்கு உள்ள தசைகள் : 656.
கம்பளிப் பூச்சியினுடைய தசைகள் : 2000.

●● தேனீக்கள் அல்ட்ரா வயலட் கதிர்களை எவ்வித பாதிப்புமின்றிக் காண முடிகிறது.


●● ஓர் எறும்பின் தலை அதன் உடலைக் காட்டிலும் பெரியது.

●● யூகலிப்டஸ் மரம் அழிந்து போனால் கோலா கரடி என்ற உயிரினமும் அழிந்துவிடும். ஏனெனில் அது யூகலிப்டஸ் இலைகளைத் தவிர வேறெதையும் உண்பதில்லை.

●● ஒரு பவுண்ட் எடையுள்ள தேன் அடையைத் தயாரிக்க, தேனீக்கள் இரண்டு மில்லியன் பூக்களிலிருந்து தேன் சேகரிக்க வேண்டும்.

●● முத்து உற்பத்தி செய்யும் சிப்பி ஓர் உயிரினமே என்பது தெரியும். ஆனால் அது ஆண்பாலிலிருந்து பெண் பாலாகவும் திரும்பவும் ஆண்பாலாகவும் மாற வல்லது என்பது தெரியுமோ?

தொகுப்பு : **உதய் லால்**



"உங்க பையன் இப்பவே அரசியல்லே ரொம்ப ஈடுபாடு காட்டறான்; நாளைக்கு பிரமாதமா வந்துடுவான்!"
"எப்படிச் சொல்றீங்க?"
"நரிமுகத்தின் முக்கிய உற்பத்தி எதுன்னு கேட்டதுக்கு 'கட்-அவுட்'னு பதில் சொன்னானே அதை வைச்சுத்தான்!"
- எஸ். முகம்மது யூசுப்

பொன் விழா போட்டிக் கவிதை

ஒட்டடை

ஊழல் என்றொரு முட்புதர் ஓங்கியே வளருஞ்
சூழல் எங்ஙனம் பயனுறு நல்வழி தோற்றும்
ஆழ ஓடிய புதரதன் வேர்களை அகற்றி
நீழல் இன்கனி உதவிடு மரம்நடல் நெறியே!

வன்மு றைச்செயல் மாநிலம் எங்கணும் வளர
நன்மு றைப்படி வளர்ச்சியை எய்துமோ நாடு!
கன்ம ழைப்புயல் தொடர்ச்சியாய் வீசிடக் கண்டாய்
பன்ம லர்ப்பொழில் எங்ஙனம் வளர்ச்சியைப் பார்க்கும்!

போர்த ரும்பல கட்சிகள் புரண்டிடும் புலமாய்த்
தேர்த லைப்பயன் படுத்துதல் நன்மையா செய்யும்
ஊர்த ரும்புழுத் தொகுதிகள் போற்பல குழுக்கள்
சீர்கெ டும்படி வளர்வதும் அரசியல் திறமா?

கும்ப லைப்பெரு வாரியாய்க் கூட்டிட வல்ல
கொம்ப ரேபெருந் தலைவராம் என்றிசை கொள்வீர்!
தும்பி ஆயிரஞ் சூழ்தரச் சுடருமின் விளக்கு
கும்பி டப்பெறுங் கோயிலின் குடவிளக் காமோ!

வேலை இன்மையால் கணக்கிலா இளைஞர்கள் வெதும்ப
ஆலை பற்பல அடைப்புகள் நடத்துதல் அறமா!
மேலை நாடுகள் நாடொறும் வளர்ச்சியில் முந்த
மூலை யிற்கிழம் போலநாம் முடங்குதல் முறையா?

சிக்கல் ஆயிரம் பெருக்கியே சீரழிந் திடவோ
மக்கள் ஆட்சியென் றரசியல் நெறிமுறை வகுத்தார்?
தொக்க வர்க்குளே பிறப்பினால் வேற்றுமை தொடர்ந்தால்
சுக்கல் ஆகியிந் நாடுதுண் டாவதே தொடரும்!

நேர்மை என்பது வாயள வல்லது நெஞ்சான்
தேர்வ தோர்கிலார் ஆளுகை நன்மையென் செய்யும்?
கார்மு கிற்குலம் வானில்வந் தழகினைக் காட்டிப்
பார்ம கிழ்ந்திடப் பொழிந்திடா தொழியுமேற் பயனென்?

ஈச லேயெனக் கூடிடும் மக்களை ஈர்த்துப்
பேச லேபெருந் தொண்டெனப் பேணுகின் றீரே!
வாசல் மட்டுமே வனப்புற வைத்துமற் றுள்ளே
ஊச லாடிடும் ஒட்டடை நிரப்புதல் உயர்வோ!

- செவ்வேள்




கவலையற்ற இல்லத்து அரசி
கை நிறைய சம்பாதிக்கும் அவர்...
வீட்டில் சகல வசதிகள்...
கொஞ்சி விளையாட இரு கண்மணிகள்...
வீட்டிற்கு Shopping செய்ய...
விதான் சூப்பர் மார்க்கெட்...
வேறு என்ன வேண்டும்...
எல்லா கிரிடிட் கார்டுகளும் ஏற்கப்படும்
இலவச இல்லத்தில் டெலிவரி
Vitan
(A/c வசதி கொண்டது)
172-A, லஸ் சர்ச் ரோடு
சென்னை 600 004. போன்: 76384/76838/71165
அண்ணா நகர் 600 040. போன்: 6211107
காலை 9 மணி முதல் மாலை 8 மணி வரை|திங்கள் விடுமுறை


The master tilting wetgrinder
SHARAVANA
One Year Guarantee
Branch Dadar, Bombay Ph : 4111490, 4114778
V.G.P. Sion, Bombay Ph : 4091092, 4073804
Tamilnadu Stores, Karol Bagh, New Delhi Ph : 5722320
Aarifi Shop, Main Road Vizag Ph : 54361, 54524
Gupta Distributors, Pithapur Road Cuttack Ph : 20749
M S Pande & Sons Variety Square Nagpur Ph : 524097

செய்கைகள்

"**சா**யங்காலம் அஞ்சு மணிக்கெல் லாம் ரெடியா இரு சியாமி. பார்ட்டிக்குப் போகலாம்..." என்றான் விசு ஈரக்கையைத் துடைத்தவாறே.

"அவசியம் நானும் வரணுமாங்க?"

"ஆமா. இது நாங்க எல்லோரும் சேர்ந்து எங்க சேர்மனுக்குக் கொடுக்கிற பார்ட்டி. வர்றவங்கள்ளாம் அவங்கவங்க 'வொய்ப்'போடதான் வருவாங்க."

சியாமளாவின் முகத்தில் தயக்கம் தெரிந்தது.

"என்ன தயங்கறே... இந்த மாதிரி வெளியே போய் வந்தாத்தான் உலகத்தைப் பத்திப் புரிஞ்சுக்க முடியும்."

அவள் 'சரி' என்பது போலத் தலையசைத்து விட்டு, "மதியம் லஞ்சுக்கு என்ன செஞ்சி அனுப்பட்டும்?" என்றாள்.

"உன்னோட சாய்ஸ். நீ என்ன செய்தாலும் ருசியாத்தான் சியாமி இருக்கும்" என்று புன்னகை செய்தான். அவள் முகத்தில் வெட்கம் கலந்த பெருமை. இருவருக்கும் திருமணமாகி இன்னும் ஒரு வருடம் கூட பூர்த்தியாகவில்லை.

விசு தலைவாரிச் சட்டையை எடுத்து அணிய, 'காலிங்பெல்' ஒலித்தது. சியாமளா சென்று கதவைத் திறந்தாள்.

காவியேறிப் போன வேட்டியும், நிறமே தெரியாத சட்டையுமாக ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

தாராளமாய் எண்ணெய் வைத்துப் படிய வாரியிருந்தான். நெற்றியில் விபூதிக் கீற்று. இருபது வயதுக்கு மேலிருக்கும்.

"சார் இல்லீங்களாம்மா?"

"இருக்கார்.. ஏன்?'

அதற்குள் விசுவே வெளியே வந்தான். விசுவைப் பார்த்ததும் அவன் கைகூப்பினான்.

"வணக்கம் சார்... என்னோட வேலை விஷயமாக் கேட்டுட்டுப் போலாம்னு வந்தேன் சார்!" என்றான் மிகவும் பணிவான குரலில்.

விசு சற்று குழப்பமுற்றவனாய் நோக்கினான்.

"சார்... பேக்டரி விபத்துல நாலு மாசத்துக்கு முன்னால சுப்ரமணின்னு ஒருத்தர் செத்துப் போனாரே... அவரோட பையன் நான். பேர் குமரேசன். உங்களை நாலஞ்சு தடவை ஆபீஸ்ல வந்து பாத்தேன் சார். எங்கப்பாவோட வேலையை எனக்குப் போட்டுத் தர்றதாச் சொன்னீங்க சார்..."

"இதெல்லாம் ஆபீஸ்லேயே வந்து பாரு... இங்கயெல்லாம் வராத..."

"எங்க குடும்பம் பெரிசு சார். எங்கப்பா செத்ததும் இப்ப சாப்பாட்டுக்கே வழியில்லாம கஷ்டப்படறோம். நீங்கதான் சார் மனசு வைச்சி எனக்கு எப்படியாவது..." சொல்லியவாறே அவன் விசுவின் கால்களில் விழுந்து அழ ஆரம்பித்தான்.

"ஏய்... இங்க பாரு. எழுந்திரி" விசு அதட்ட, அவன் அழுத கண்களுடன் எழுந்தான்.

"சாவு வீடு மாதிரி ஏன் அழறே. அப்புறமா ஆபீஸுக்கு வா பார்க்கலாம்."

அவன் அப்படியே நின்றான்.

"சொல்லிட்டேனில்ல. இ ட த் தை த் காலி பண்ணு. எனக்கு நேரமாச்சி..."

குமரேசன் மறுபடியும் கையெடுத்துக் கும்பிட்டு விட்டுப் போனான்.

"பாவங்க!" என்றாள் சியாமளா.

"பாவம் எல்லாம் பார்க்கக் கூடாது சியாமி. தினம் நூறு பேர் இந்த மாதிரி வந்து நிப்பாங்க. எல்லோருக்கும் வேலை தர முடியுமா?"

"நீங்க நினைச்சா இவருக்கு வேலை தரலாமா?"

"ம். நான்தானே பர்ஸோனல் மானேஜர். நான் ரெகமண்ட் பண்ணினா 'சேர்மன்' மறுக்க மாட்டார்."

"இந்த குமரேசனுக்கு ரெகமண்ட் பண்ணுவீங்களா?"

"ச்சு... பார்க்கலாம். அப்பா செத்துப் போன அந்த வேலையைப் பையனுக்குத் தரணும்னு கட்டாயம் ஒன்னும் கிடையாது" என்றான் விசு அலட்சியமாக.

"காலிலே கூட விழுந்தாரே!"

"தேவைன்னா எல்லாம் செய்வாங்க. கொஞ்சங்கூடத் தன்மானமில்லாத வெட்கங்கெட்ட ஜென்மங்கள்!"

மஞ்சள் வெயில் இறங்கத் தொடங்கியிருந்தது.

விசு அம்பாஸிடரை எஸ்பதில் செலுத்திக் கொண்டிருந்தான்.

உதாதிபன்

''ஆறு மணிக்கெல்லாம் சேர்மன் ஹோட்டலுக்கு வந்துடுவார். நான்தான் அவரை 'ரிஸீவ்' பண்ணணும். அதுக்குள்ள போயாகணும்'' என்றான். க்ரே நிற சூட்டும், நீலநிற 'டை'யும் அணிந்திருந்தான்.


''அஞ்சரைதாங்க ஆகுது. போயிடலாம்'' என்றாள் சியாமளா. பட்டுப் புடைவையும், சற்று உபரியான நகைகளும், காதோரம் ஒற்றை ரோஜாவும் அணிந்திருந்தாள். இதுபோன்று பார்ட்டிக்குச் செல்வது முதல் அனுபவம் அவளுக்கு.

''சேர்மனுக்கு இப்படி ஒரு 'பார்ட்டி' கொடுக்கலாம்னு ஐடியா சொல்லி, எல்லா ஏற்பாடும் பண்ணினதே நான்தான் சியாமி. இன்னிக்கு அவரை 'ப்ளீஸ்' பண்ணிடணும்.''

ஐந்து ஐம்பதிற்கு ஹோட்டல் செவனாவை அடைந்தார்கள். விக காரை 'பார்க்கிங்' செய்துவிட்டு வந்தான். அவனோடு பணிபுரிபவர்களை சியாமளாவுக்கு அறிமுகம் செய்து வைத்தான்.

நமஸ்கரித்து, கை குலுக்கி, புன்னகை செய்து, சம்பிரதாயமாகப் பேசி...

சரியாய் ஆறு மணிக்கு சேர்மன் கரேந்திரநாத்தின் கார் வந்து நின்றது. விக ஓடிச் சென்று கதவைத் திறந்தான். அவர் இறங்கியதும் வரவேற்புக்கு ஓர் அடையாளமாக 'பொக்கே' யொன்றைக் கொடுத்தான். அனைவரும் மென்மையாகக் கைதட்டினார்கள்.




உள்ளே நுழைந்து விஸ்தாரமான டைனிங் ஹாலை அடைந்தார்கள்.

விக வந்து, ''நான் சேர்மனோடவே இருக்கணும். அதனால நீ என்னை எதிர்பார்க்க வேண்டாம். மத்தவங்களோட அப்படியே கலந்து... யு மேக் யுவர்செல்ப் கம்பர்ட்டபிள்'' என்றான்.

அவள் தலையசைத்தாள்.

மிக மங்கலாக விளக்குகள் எரிந்துகொண்டிருக்க, காதுகளை உறுத்தாத நிறுசில் மாயாஜாலமாய் சங்கீதம் வழிந்துகொண்டிருந்தது.

சிறிது நேரத்தில் ட்ரேயில் வைத்துக் கண்ணாடிக் கோப்பையில் பொன்னிற திரவம் வர ஒவ்வொருவராய் எடுத்துக் கைகளில் இருத்திக் கொண்டார்கள். விக ஒரு கோப்பையை எடுத்துப் போய் சேர்மனிடம் வழங்கினான். அங்கேயே அமர்ந்து குடித்து முடித்து விட்டு, அவர் தந்த கண்ணாடிக் கோப்பையைக் கோவில் பிரசாதம் போல வாங்கிக் கொண்டான்.



❑ மற்றவர்களின் உழைப்புக் காரணமாகத் தான் நாம் நல்லபடி உயிர் வாழ்கிறோம் என்பதை ஒரு நாளைக்கு நூறு தடவை நான் ஞாபகப் படுத்திக் கொள்கிறேன்.

- ஐன்ஸ்டைன்

❑ நாக்கு மூன்று அங்குல நீளம்தான். ஆனால் அது ஆறடி உயரமுள்ள மனிதனையும் கொன்று விடும் ஆற்றல் கொண்டது.

- ஜப்பான் பழமொழி

தொகுப்பு : மேல்பட்டி எம். மாறன்

'பஃபே' முறையில் சாப்பாடு. அப்பொழுதும் விக சேர்மன் நிழலாகவே இருந்தான். அவர் சொன்ன வறட்டு ஜோக்குக்குச் சிரித்தான். தேவையான வற்றைத் தட்டில் போட்டுத் தந்து, சாப் பிட்டதும் வாங்கி வைத்தான்.

சியாமளா விகவையே பார்த்துக் கொண்டிருந்தாள். சேர்மன் வாந்தியெடுத்தால் கூட அதையும் பாக்கியமாய்க் கருதித் துடைத்து, குளிப்பாட்டி விடத்தயாராயிருப்பான் போலத் தோன்றியது.

ஒன்பதரை மணிக்கு எல்லாம் முடிந்தது.

வீட்டுக்குத் திரும்பும் பொழுது, ''இன்னிக்கு நான் கவனிச்சதில சேர்மன் ரொம்ப மகிழ்ச்சியாக என்னைப் பாராட்டினார். அடுத்த மாசம் என்னோட ப்ரமோஷனுக்காக ஒரு இண்டர்வ்யூ இருக்கு. அதனால தான் தனிப்பட்ட முறையில அவரைக் கவனிச்சிக்கிட்டேன். கட்டாயம் எனக்கு 'ப்ரமோஷன்' கிடைச்சிடும்!'' என்றான் விக பெருமையாக.

சியாமளாவுக்குச் 'சட்'டென்று காலையில் வந்து போன குமரேசனின் நினைவு வந்தது.

''தேவைன்னா எல்லாம் செய்வாங்க. கொஞ்சங்கூடத் தன்மானமில்லாத வெட்கங்கெட்ட ஜென்மங்கள்!''

வயிற்றுச் சோற்றுக்காக வேலை வேண்டிக் காலில் விழுந்த அந்தக் குமரேசனின் செய்கைக்கும், பதவி உயர்வுக்காக வாலையாட்டும் தனது கணவனின் செய்கைக்கும் என்ன வித்தியாசமிருக்கிறது என யோசித்துப் பார்த்தாள். அப்படியேதும் இருப்பதாகத் தெரியவில்லை அவளுக்கு.



போக்கிரித் தம்பி

ஆனந்தராஜ் - கல்வி பெறாதவர். ஆனால் கடுமையான உழைப்பாளி. நேர்மைப் பாதையிலிருந்து விலகாதவர், ஆனால் சாயங்காலம் ஆனதும் சாராயக் கடையைத் தேடிப் போய் விடுகிறவர்.

இத்தகைய குணங்களைப் பெற்றிருக்கும் அவரை அடுக்கடுக்காய்ப் பிரச்னைகள் எதிர்கொள்ள என்ன செய்கிறார்?

தம் மனத்துக்கு, எது சரியென்று படுகிறதோ அதுதான் அவர் காணும் தீர்வு. அதனால் ஏற்படும் சிக்கல்கள் கதை விரிக்கப் பயன்படும் ஊன்றுகோல்கள்.

இத்தகைய ஒரு கதாநாயகனைப் படைத்து, அவரைச் சுற்றிக் கதையைப் பின்னியிருப்பவர் எஸ். கஜேந்திரகுமார். வசனமும் அவரே.

பண்ணையார் விஜயகுமார் கௌரவப் போர்வை போர்த்திக் கொண்டு, உள்ளுக்குள் ரகசியமாகப் பெண்ணாசையை வளர்த்துக் கொண்டு செய்யும் இருட்டுக் காரியங்கள், சஸ்பென்ஸ் கருதி, ரகசியமாக வைக்கப்பட, கடைசி வரை தெளிவில்லாமல் போய், சஸ்பென்ஸ் உடைபடும் போது புஸ்வாணமாகி விடுகின்றன.

எந்த மாட்டு வண்டியினது கடையாணியைக் கழற்றிவிட்டு, அதில் பயணப்படுவோரைக் குடைசாய்த்துப் பெண்களைக் கடத்திச் சென்று நிமுவாக அயோக்கியத்தனம் செய்கிறாரோ, அதே மாட்டு வண்டியின் கடையாணியைக் கழற்றி விட்டுத் தாமே ஓட்டிச் சென்று முடிவு தேடிக் .கொள்வது பொருத்தமான தண்டனை.

நகைச்சுவை என்பதற்குப் பொருள், இன்றைய சினிமா அகராதியில் விரசம் என்றாகி விட்ட பிறகு, அதில் அரைகுறை என்ன? இலைமறை காய்மறை என்ன? இதில் கிட்டத்தட்ட எல்லையை நெருங்கிக் குமட்ட வைக்கிறார்கள்.

எண்ணி ஐந்து பாடல்கள். அதில் ஒன்று மட்டும் சுமார் ரகம். மற்றவை படுசுகம்.

திரைக்கதையில் இயக்குனர் கையாளும் உத்திகள் அங்கங்கே பளிச். ஒருசில இடங்களில் தொபுக்கடீர்.

முதலிலிருந்து முடிவு வரை ஆனந்தராஜ். மற்றவர்கள் தொட்டுக் கொள்ளும் ஊறுகாய்.

- சி. ஆர். கே.

நீங்கள் கேட்டவை - தராசு



● லவ்லி பாலகிருஷ்ணன், மதுரை - 9.

? *நாட்டில் மாமியாரைக் கொடுமைப்படுத்தும் மருமகள்கள் அதிகமா அல்லது மருமகளைக் கொடுமைப்படுத்தும் மாமியார்கள் அதிகமா?*

! இரண்டினாலும் பாதிக்கப்படும் ஆண் மகன்கள் அனுபவிக்கும் கொடுமை அதிகம்!

● எம். பிரபு, குமராட்சி.

? *உங்களை வியக்க வைத்த வி.ஐ.பி. யார்?*

! 'வி. பி. எஸ். ஈ. பரீட்சையில் மாணவர்களுக்கு மதிப்பெண்களைக் கூடுதலாகப் போட்டு கோல்மால் பண்ணியிருக்கிறார்கள்' என்று கூறத் துணிந்த கல்வி அமைச்சர் அரங்கநாயகம்தான்! அரசுப் பள்ளிகளில் கல்வி போதனை எந்தத் தரத்தில் இருக்கிறது என்பது ஊரறிந்த ரகசியமாய் இருக்க, தமது கூற்றை மக்கள் நம்புவார்கள் என்று அவர் எண்ணியது பெரு வியப்பே!

● ஆர். கிருஷ்ணமூர்த்தி, பணப்பாக்கம்.

? *இப்போது கருணாநிதி என்ன செய்து கொண்டிருக்கிறார்?*

! மீண்டும் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதில் சந்தோஷித்துக் கொண்டிருக்கிறார்!

● சித்ரா கிருஷ்ணமூர்த்தி, கும்பகோணம்.

? *ஜெயலலிதா பிரதமரானால்?*

! டில்லி பத்திரிகையாளருக்கு நாடாளுமன்றத்தில் கூண்டு தயாராகும்.

● ப. கணேசன், சென்னை.

? *'வேண்டுமானால் ஜெயலலிதா நாவலரை நீக்கி விட்டு வாழப்பாடியைத் தம் பக்கத்தில் கூஜா தூக்கத் தமிழ்நாட்டு நிதி மந்திரியாக்கலாம்' என்கிறாரே கே. பி. ராமலிங்கம்?*

! இலவசமாகவே கிடைக்கும் சேவைகளுக்கு யாரும் கூலி தர மாட்டார்கள்.

● மூ. ரவிச்சந்திரன், சேலம்.

? *ஆந்திரா முதல்வர் தெலுங்கு தேச எம். பி. யின் கன்னத்தில் அடித்தாராமே?*

! தாமரைக்கனியின் 'தட்டிக் கொடுத்தேன்' சமாளிப்பு அங்கேயும் பயனானதுதான் வியப்பு!

● அ. முஸ்தபா, தக்கோலம்.

? *தமது இளைஞர்களிடம் நீங்கள் காணும் குறை?*

! வீரம் செயல்படும் அளவில் கூடவே, விவேகமும் செயல்படாமல் சில சமயங்களில் காலை வாரி விட்டு விடுவதுதான்.





ஜெயலலிதா பிரதமரானால்..?

● ஏ. எஸ். ஜானகிராமன், தஞ்சாவூர்.

? *ஓர் ஒப்பந்தத்துக்கு நாம் கொடுத்த விலை ஓர் உன்னதத் தலைவனின் உயிர். அவ்வாறிருக்க, எந்த முன்னுதாரணத்தை வைத்துக் கொண்டு நாம் மீண்டும் பேச்சு வார்த்தை உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும் என்று கல்கி தலையங்கத்தில் எதிர்பார்க்கிறது?*

! வட்டமேஜை முருகானந்தத்துக்கும் சேர்த்தே இந்தப் பதில் : தயவுசெய்து தலையங்கத்தைச் சரியாகப் பாருங்கள். நாம் ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை. உடன்படிக்கைக்கு வருமாறு புலிகளையும் இலங்கை அரசையும் வற்புறுத்த வேண்டும் என்றுதான் சொல்லியிருக்கிறது. பேச்சு வார்த்தைக்கு உதவ வேண்டும் என்கிறது. ராஜீவ் செய்த தவறே அதுதான். புலிகள் - இலங்கை அரசுக்கிடையே சமாதானம்

செய்து வைப்பதாக ஆரம்பித்துக் கடைசியில் புலிகளை ஒதுக்கி விட்டு, இலங்கை - இந்தியா ஒப்பந்தமாக அது முடிந்ததுதான் அனர்த்தமாயிற்று.

● சி. பழனிச்சாமி, கொங்கணாபுரம்.

? ஏழைப் பெண்களுக்கு அரசாங்கமே திருமணம் நடத்தினால் எப்படி இருக்கும்?

! மாப்பிள்ளை பிடிப்பதில் லஞ்ச ஊழல் கொடிகட்டிப் பறக்கும்!

● அ. பரமசிவம், மதுரை.

?' மீண்டும் எதிர்க்கட்சிகள் ஒன்றுபட வேண்டும்' என்ற ராமராவின் வேண்டுகோள் சாத்தியமானதுதானா?

! டீவியில் பாதாள பைரவி பார்க்கலை?' உள்ளதைச் சொல்லவா? உண்மையை இல்லையென்று சொல்லவா?' என்ற என்.டி.ஆரின் டயலாக்தான் பதில்.

● வீ. சோழன், செம்போடை.

? சமீபத்தில் தங்களைத் துயரமடைய வைத்த சோக சம்பவம்?

! காஸ் சிலிண்டர் விபத்தில் பலியான உயிர்கள் அளித்தது துயரம் எனில், பாதுகாப்பாக வாழத் தெரியாத அறியாமை சோகம்.

● பி. ஜெயப்பிரகாஷ், நவமணி.

? இந்த வருட விடுமுறை மலர் என்னாச்சு வளர்?

! பொன் விழா மலருக்கு இடம்கொடுத்து ஒதுங்கிக் கொண்டிருக்கிறது.

● ஈ. டி. விஜயகுமார், ஈரோடு.

? இலங்கை வானொலியில் இந்தியாவைக் கிண்டல் செய்யும் நாடகங்கள் ஒலிபரப்பு ஆவது குறித்து...?

! நமது அயல் விவகாரத் துறையின் ராஜதந்திரமின்மையை உணர்த்துகிறது.

● ரமணன், தூத்துக்குடி.❑

? முகஸ்துதி, மரியாதை இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?

! மரியாதைக்குரியவர்கள் முகஸ்துதியை எதிர்பார்க்க மாட்டார்கள்.

● ஆர். தமிழரசி, சிதம்பரம்.

? வாழப்பாடியாரால் காங்கிரஸ் வளர்கிறதா, காங்கிரஸால் வாழப்பாடியார் வளர்கிறாரா?

! இரண்டுமில்லாமல் அ.இ.அ.தி.மு.க. தனது வளர்ச்சிக்கு வாழப்பாடியையும் காங்கிரஸையும் பயன்படுத்திக் கொள்கிறது என்பதுதான் பரிதாபம்.

● லீலா ராம், தக்கலை.

? நாடு முழுவதும் வன்முறை தாண்டவமாடுகிறதே?


! டீவி நிலைய அதிகாரியின் தலை துண்டிக்கப்பட்டு தலை வேறு உடல் வேறாக எறியப்பட்ட கோரம் கண்டனத்துக்கும் தண்டனைக்கும் உரிய செயல். இதுபோன்ற பயங்கரவாதிகளின் வன்முறை விசனத்தை அளித்தாலும் கலிஸ்தானியர், அஸ்லாம் பயங்கரவாதிகள், ஈழப்புலிகள் இவர்களுடைய லட்சிய வெறி (தவறான போக்கு எனினும்) புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது. ஆனால் நீப்பொறி ஆறுமுகம்



☛ நட்புக் கொடுத்தார்!



☛ பெரு விளம்பர!



☛ வேண்டுமென்றே விடுத்தார்!

மீது நடக்கும் தாக்குதல், கோவையில் காங்கிரஸ் அலுவலகம் தாக்கப்படுவது போன்ற ஆளும் கட்சி வெறியர்களின் அட்டகாசம், புரிந்து கொள்ளக் கூட முடியாததாக விளங்கி அருவருப்பை அளிக்கிறது. அதை விட, இதையெல்லாம் கண்டிக்காமலும் கட்டுப்படுத்தாமலும் இருக்கும் தலைமை கசப்புணர்வைத் தருகிறது. ஜனநாயக வேஷம் என்ன வேண்டிக் கிடக்கிறது! 'சர்வாதிகாரம்' என்றே பகிரங்கமாகக் கூறி விடலாம்.

● எப்போதும் வென்றான், திண்டுக்கல்.

? சகிப்புத் தன்மைக்கு விளக்கம் தருக?

! இரவோடு இரவாகத் தந்திரமாகக் காந்தி சிலையை நீக்கிக் குப்பையோடு குவித்து விட்டு, அந்த இடத்தில் எம். ஜி. ஆர். சிலையை நிறுவிய அக்கிரமத்தைச் சகித்துக் கொண்டிருக்கிறோமே, அதை விடவா?

❑ ரூ. 25 பரிசு பெற்றவர் :
ஆர். ஹரி சுப்பிரமணியம்
(ரமணன்)
2, பெரைரா தெரு,
தூத்துக்குடி - 628 001

எனக்குப் பொறுமை போய் விட்டது. வீனஸ் கிருஷ்ணமூர்த்தியிடம், ''கதை டிஸ் கஷன் என்ற பெயரில் நான் இனியும் நேரத்தை வீணாக்க விரும்பவில்லை. நீங்களும் திலீப்குமாரும் கதை பற்றிப் பேசி முடிவெடுத்த பிறகு எனக்குச் சொல்லி அனுப்புங்கள். நீங்கள் எடுக்கப் போவது ''பாலும் பழமும்'' கதையாக இருந்தால் நான் வருகிறேன். இல்லையென்றால் வேறு யாரையாவது ஏற்பாடு செய்து கொள்ளுங்கள்'' என்று கூறி, விடைபெற்றுக் கொண்டு விட்டேன்! பார்த்தபடி, 'இப்படித் திரும்பு; அப்படி நடந்து வா' என்று நமக்குக் கட்டளையிட ஆரம்பித்தாரானால் நம்முடைய தன்மானத் துக்குச் சரிப்பட்டு வராதே என்றெல்லாம் யோசித்துக் கொண்டிருந்தேன்.

இதற்கிடையில் ஒருமுறை பெங்க ளூர் சென்ற போது, திலீப்குமாரின் நெருங் கிய நண்பர் ஒருவரைச் சந்திக்க நேர்ந்தது. எனக்கும் நண்பரான அவர், பிரபல இந்தி திரைப்பட விநியோகஸ்தர். அவர் பெயர் 'மாண்ட்ரே'. இன்றும் திரைப்பட விநியோ கஸ்தராக இருந்து வருகிறார். திலீப் என்

திலீப்குமார் : கவலை அளித்தார் மகிழ்ச்சியில் மூழ்த்தார்!

திலீப்குமாரைக் கதை டிஸ்கஷன் என்ப தற்காகத் தேடிச் சென்ற சில சமயங்களில் அவர் செட்டில் இருந்தார். அப்போ தெல்லாம் நான் ஒரு விஷயத்தைக் கவனித் திருந்தேன். ஒரு நடிகர் என்ற அளவோடு தம்மை நிறுத்திக் கொள்ளாமல், பல சந் தர்ப்பங்களில் ஒரு டைரக்டராகவும் அவர் செயல்பட்டுக் கொண்டிருந்தார்! என்ன செய்வார் தெரியுமா? திலீப்குமார் நடிக்க வேண்டிய காட்சியை டைரக்டர் விளக்கி யதும், டைரக்டரையே அவ்வாறு நடிக்கச் சொல்லி விட்டு, திலீப்குமார் காமிரா வழியே பார்ப்பார்! அந்தக் கோணம் தமக்குப் பிடித்திருந்தால் ''ஓ.கே.'' சொல் வார். அதன் பிறகுதான் படப்பிடிப்பு நடக் கும்! இவ்வாறு சாணக்கியா என்ற பெரிய டைரக்டரே திலீப்குமாரால் ஆட்டுவிக்கப் படுவதை நான் என் கண்ணால் பார்த்த போது, திடுக்கிட்டுப் போனேன். இன் னொரு சமயம் திலீப்குமார், கிரேன் மீது உட்கார்ந்து கொண்டு கீழே உள்ள உதவி டைரக்டர்களுக்கு ஏதேதோ கட்டளைகள் பிறப்பித்துக் கொண்டிருந்தார்!

இதையெல்லாம் பார்த்த எனக்கு மனசில் பெரிய கேள்விக்குறி எழுந்தது. ''பாலும் பழமும்'' கதையை திலீப்குமார் ஏற்றுக் கொண்டு நடிக்க ஒப்புதல் அளித் தாலும் அவரை எப்படி சமாளிப்பது? நம் முடைய டைரக்ஷனில் இன்னொருவர் தலையிடுவது நமக்குப் பிடிக்காத விஷயமா யிற்றே? இவர் பாட்டுக்குக் காமிரா வழியே டைரக்ஷனில் நடிக்கவிருப்பது பற்றித் தமது சந்தோஷத்தை அவர் வெளியிட, நானோ, என்னுடைய கவலையை அவரிடம் சொன்னேன். 'திலீப், தேவையில்லாமல் கூட டைரக்ஷனில் தலையிடுவதாக எனக் குப் படுகிறது' என்பதைக் கூறி, எங்க ளிடையே நட்புக்குப் பங்கம் வராமல் இருக்க வேண்டுமே என்ற கவலையைத் தெரியப்படுத்தினேன்.

நண்பர் மாண்ட்ரே இதை திலீப்குமா ரிடம் சொல்லியிருப்பார் போலும். அடுத்த தடவை நானும் கிருஷ்ணமூர்த்தியும் பம் பாய் சென்று ஒரு ஷூட்டிங்கின் இடையில் திலீப்பைச் சந்தித்த போது அவர், ''உங்க ளோடு தனியே சில வார்த்தைகள் பேச வேண்டுமே'' என்று என்னிடம் கேட்டுக் கொண்டார்.


''சரி'' என்று நான் அவருடன் தனிமை யில் ஒதுங்கினேன்.

திலீப் சொன்னார் : ''என் சம்பந்தப் பட்ட காட்சிகள் பிரமாதமாய் அமைய வேண்டுமே என்ற ஆர்வத்தில் நான் பல சமயங்களில் டைரக்டருடைய பணியில் தலையிடுவது உண்டுதான். ஆனால் இது விஷயத்தில் நீங்கள் கொண்டிருக்கும் கருத்தும் நியாயமானதே. ஒன்று மட்டும் சொல்கிறேன். உங்கள் டைரக்ஷனில் என் னுடைய தலையீடு ஏதும் இராது.''

இதைக் கேட்ட போது எனக்கு ஆறுத லாக மட்டுமல்ல; என் கருத்தை இவ்வளவு ஸ்போர்ட்டிவ்வாக எடுத்துக் கொண்

டிருக்கிறாரே திலீப்குமார் என்பதால், மகிழ்ச்சியும் ஏற்பட்டது.

இவ்வாறு பிரச்னை சுமுகமாக முடிந்தும் கூட, கடைசியில் திலீப்குமார் அந்தப் படத்தில் நடிக்கவில்லை! காரணத்தை நான் ஊகமாகத்தான் சொல்ல முடியும். திலீப்குமாருக்கு ஆரம்ப முதலே ''பாலும் பழமும்'' கதையில் ஈடுபாடு உண்டாகவில்லை. நானோ, ''பாலும் பழமும்'' கதையைத்தான் டைரக்ட் செய்வது என்பதில் உறுதியாக இருந்தேன். கதையில் தமது மனம் லயிக்காததால்தான் திலீப்குமார் விலகிக் கொண்டிருப்பார் என்பது என் கணிப்பு.



☛ ''பாலும் பழமும்''

திலீப்குமார் இல்லை என்றாகி விட்டது. வேறு யாரைப் போடுவது? கிருஷ்ணமூர்த்தி எடுத்த முடிவு ''ராஜேந்திரகுமாரைப் போடலாம்'' என்பதுதான். நடிகைகள் வைஜயந்தி மாலாவும் ஸிமியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்த இடத்தில் ஒரு விஷயத்தை நான் சொல்லியாக வேண்டும். தமிழில் ''பாலும் பழமும்'' பார்த்தவர்கள் சிவாஜியின் மனைவியாக வந்து, ரயில் விபத்தில் மரணமடைந்து விட்டதாகக் கருதப்பட்ட சரோஜா தேவியின் பாத்திரம் அடக்க ஒடுக்கமான ஒன்று என்பதை அறிவார்கள். சிவாஜி மறு மணம் செய்து கொள்ளும் சௌகார் ஜானகி சற்றே மாடர்ன். அவ்வளவுதான். ரொம்ப வித்தியாசம் கிடையாது. ஆனால் ஹிந்தி படத்துக்காக நான் டிரீட்மெண்ட் எழுதும் போது, இந்த வித்தியாசத்தைக் கூடுதலாக்கினேன். ஒரு கதையில் இரண்டு பெண் காரெக்டர்கள் என்றால், காண்ட்ராஸ்ட் இருக்க வேண்டும் என்பது என் எண்ணம். நேர் எதிரிடையாக அவர்கள் சுபாவம் அமைய வேண்டும். நடையுடை பாவனையும் இதற்கேற்ப இருக்க வேண்டும். ராமாயணத்தில் ஒரு சீதைக்குத்தானே இடம்!

ஆனால் கிருஷ்ணமூர்த்தி இந்த எதிர்மறையான குணசித்திரத்துக்கு முழுமையான ஒப்புதல் அளிக்கவில்லை. ''வேணும்னா கொஞ்சம் மாத்திக்குங்க; ஆனா ஸிமி கேரக்டரை ரொம்ப மாடர்ன் ஆக்கிடாதீங்க; ஜனங்க ஏற்றுக் கொள்ள மாட்டாங்க'' என்று சொல்லிக் கொண்டே இருந்தார். தமது வாதத்தை நியாயப்படுத்த, தமிழில் ''பாலும் பழமும்'' கதை அமைந்துள்ள விதத்தை எடுத்துக்காட்டி, அது பிரமாத பாக்ஸ் ஆஃபீஸ் ஹிட் ஆனதையும் ஞாபகப்படுத்திக் கொண்டேயிருந்தார். சரியென்று நானும் கிருஷ்ணமூர்த்தியின் கருத்துப்படியே செயல்பட்டேன்.

படம் சுமார் இரண்டாயிரம் அடி வரை வளர்ந்திருந்த தருணத்தில் திடும்மென்று ஒரு மாற்றம்! அதுவரை காமிராமேனாக இயங்கி வந்த ராமச்சந்திராவை என்ன காரணம் கருதியோ நீக்கி விட்டு, வேறு ஒருவரை நியமித்தார்கள் வீனஸ் நிறுவனத்தினர். அந்த வேறு ஒருவர் யார்? அப்போது தோன்றிய புதிய சிக்கல் என்ன? அடுத்த வாரம் சொல்கிறேன்!

படம் உதவி :

பிலிம் நியூஸ் ஆனந்தன்

டைரக்டர் ஸ்ரீதர்



சங்கர் வரவேற்புரை

வெற்றிகரமான தொழிலுக்கு வெள்ளி விழா

தமிழ்நாடு தொழில்துறையில் வேக மாக வளர்ச்சி பெற, என்னென்ன தேவை?

இந்தக் கேள்வியை யாரிடம் கேட்டா லும் பக்கம் பக்கமாகப் பட்டியலிட்டுப் பதில் சொல்லுவார்கள்.

'கெம்பிளாஸ்ட்' நிறுவன நிர்வாக இயக்குநர் என். சங்கர் பட்டுக் கத்தரித்த மாதிரி சொன்னார் :

''ஒன்று. மின்சாரம், சாலைகள், நீர் போன்ற அடிப்படைத் தேவைகள். அடுத் தது, தொழிற்சாலைகளில் சுமுகமான சூழ் நிலை. இவை இரண்டும் இருந்து விட்டால், மூலதனமும், முதலீடும் தானாக வந்து சேர்ந்துவிடும்!''

மூன்றாம் தலைமுறைத் தொழிலதிபர், இளைஞர், என்ற வகையில் பார்க்கும் போது, சங்கரின் கருத்துக்கள் எவரையும் சற்றே யோசிக்க வைக்கும்.

சுமார் 25 வருடங்களுக்கு முன், மூன்றரைக் கோடி ரூபாய்க்குத் திட்டமிடப் பட்ட 'கெம்பிளாஸ்ட்' தொழிற்சாலை, செயல்படத் துவங்கும்போது செலவு ஐந்து கோடி ரூபாயைத் தாண்டிவிட்டது. இது போதாது என்று, ரூபாய் நாணய மதிப்புக் குறைப்பு; கச்சாப் பொருள்கள் தட்டுப்பாடு; பவர் கட் என்று பல தடங்கல்களையும், சவால்களையும் சமாளிக்க வேண்டியிருந் தது. அப்போது, நிர்வாக இயலில் நிபு ணர்கள் தேவைப்பட்டதைவிட, நிறுவ னத்தை நேசிக்கும் நிர்வாகிகள்தாம் வேண்டியிருந்தனர். நிறுவனத்தின் வளர்ச்சி யில் ஆத்மார்த்தமான ஈடுபாடு கொண்டு, நேரம் - காலம் பார்க்காமல் உழைக்கும் நிர்வாகிகள் தேவைப்பட்டனர்.

1967 ஆம் ஆண்டில், ஆண்டுக்கு 6,000 டன் பி. வி. சி. பொருட்களைத் தயாரித்த இந்த நிறுவனம், இன்றைக்கு ஆண்டு

கெம்ப்ளாஸ்ட் தொழிலகம்



ஒன்றுக்கு 50,000 டன், உற்பத்தி செய்யும் சாதனையைச் செய்திருக்கிறது.

பாலிவினைல் குளோரைட் எனப்படும் பி. வி. சி.யை இவர்கள் தயாரிக்கும் முறை வித்தியாசமானது. மற்ற தயாரிப் பாளர்கள் எல்லாம் நாப்தா எனப்படும் பெட்ரோலிய மூலப் பொருளிலிருந்து தயாரிக்கையில், கரும்புக் கழிவு எனப்படும் 'மொலா சஸ்'ஸை ஆதாரமாகக் கொண்டு இவர்கள் தயாரித்தார்கள். இதில், அமெரிக்க நிறு வனமான குட்ரிச் கெமிகல் கம்பெனியின் தொழில்நுட்பத் திறன் இவர்களுக்குக் கிடைத்தது.

''பிளாஸ்டிக் மூலப் பொருளுக்கு எதிர்காலம் எப்படி இருக்கும்?''

சொன்னார் சங்கர்.

''நிச்சயம் பிரகாசமானதாகவே இருக் கும். ஏன் என்றால் அதன் தேவை மிக அதிக மானது. ஒரு மில்லியன் டன் அளவுக்கு இந்தியாவிலேயே தேவைப்படுகிறது. நாங்கள் தயாரிப்பது முற்றிலும் வேறுபட்ட, தனித் தரம் வாய்ந்தது. மூன்று லட்சம் மெட் ரிக் டன்களுக்கு உள்நாட்டுத் தேவையே இருக்கிறது.''

குழாய்கள், கேபிள்கள், காலணிகள், குப்பிகள், பாட்டில்களில் தடுப்புகள், அச்சி டும் மை, தோல் ஆடைகள் உற்பத்தி என்று பல வகைகளில் இன்று பி. வி. சி. பயன்படுத் தப்படுகிறது. கார் வெளிப்புற அமைப்புக் கும், விண்வெளி யில் செலுத்தப் படும் ராக்கெட்டு களுக்கும் கூட பி.வி.சி. தேவைப் படுகிறது. (ஒரு சமீபத்திய செய்தி : பி. வி. சி.யில் பிரிண்டிங் பிரஸ்ஸே உரு வாக்கப்பட்டிருக் கிறதாம்!)

இன்றைக்கு 'கெம்பி ளாஸ்ட்' நிறுவ னத்தின் தயாரிப் பில் கம்ப்யூட்டர் தொழிலுக்குத் தேவையான சிலிகான் கூட உருவாகிறது.

பி. வி. சி. தவிர, காஸ்டிக் சோடா, ரிஃப்ரிஜிரேஷன் காஸ், சால்வன்ட்ஸ் எனப்படும் கரைப்பான்கள் மேட்டூர் தொழிற்சாலையிலும் -

எதில் ஆல்கஹாலிலிருந்து எதிலீன் எடுக்க, கிருஷ்ணகிரி, பண்ருட்டி தொழிற் சாலைகளிலும் -

உப்பு எடுக்க வேதாரண்யத்திலும் -

உயர் ரசாயனப் பொருட்கள் சில தயா ரிக்கவும், மருந்துகள் தயாரிப்புத் துறைக்காக வும் ஹோசூரில் தொழிற்சாலைகள் -

எனவும் பல்கிப் பெருகி வளர்ந்து வரு கிறது 'கெம்பிளாஸ்ட்'.

இத்தனை தொழிற்சாலைகள் இயங்கும் போது, ரசாயனக் கழிவுப் பொருட்கள் காரணமாக, சுற்றுப்புறச் சூழல் கெட வாய்ப்பு இருக்கிறது என்பதால், சுமார் பன்னிரண்டு கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்து, இயந்திரங்கள் நிறுவி கழிவுநீரைக் குறிப்பிட்ட அளவு தூய்மைப்படுத்தி வெளி யேற்றுவதில் 'கெம்பிளாஸ்ட்' கவனம் செலுத்தி வருகிறது.

ஆரம்பத்தில் எதிர்ப்பட்ட துன்பங் களையும், தொல்லை களையும் துடைத் தெறிந்து, சோர்வுறாமல் வெற்றிப்படிகளில் கால் வைக்க மனோதிடம் நிச்சயம்

■ கே. எம். நாராயணன் : நினைவுப்பரிசு வழங்குகிறார்...



வேண்டும். ''அவற்றிலிருந்து எல்லாம் மீண்டுவர உறுதியோடு செயல்பட்டோம்!'' என்றார் சங்கர்.

யார் இந்தத் தொழில் உருவாக அடிக்கல் நாட்டினாரோ, அவரே அதன் வெள்ளி விழாக் கொண்டாட்டங்களுக்குத் தலைமை ஏற்பதும், அவற்றில் பெருமையோடு பங்கு கொள்ளுவதும் விசேஷமானதுதான். அன்றைக்குத் தமிழ்நாட்டின் தொழில் அமைச்சராக இருந்த ஆர். வி. அவர்கள், இன்றைக்குக் குடியரசுத் தலைவர் பொறுப்பில் இந்த நிறுவனத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சிகளில் முக்கிய விருந்தினராகப் பங்கேற்று மகிழ்ந்தார்.

''தொழில்கள் தொடங்க வெறும் அமைச்சக ஆணைகள் அல்லது ஜி. ஓ. மட்டும் போட்டுவிட்டால் போதாது. அவை காகிதத்தோடு நின்றுவிடும். தொழிலதிபர்களைச் சந்தித்து, அவர்களுக்குத் தேவையான வசதிகளையும், அயல்நாட்டுத் தொழில் கூட்டுறவுக்குத் தேவையான ஒப்பந்தங்களையும் உருவாக்கிக் கொடுக்க வேண்டும்!'' என்றார் குடியரசுத் தலைவர்.

சங்கரின் தகப்பனாரும், கெம்பிளாஸ்ட் நிறுவனத் தலைவருமான கே. எஸ். நாராயணன், ஆர்வி. அவர்களின் உற்சாகமான ஒத்துழைப்புக்கு விழா மேடையிலேயே ஒரு நினைவுப் பட்டயம் வழங்கி மகிழ்ந்தார்.

இருபத்தைந்து வருடங்களுக்கு முன் இருந்த தொழில்துறை வளர்ச்சியின் வேகம் இடையில் குன்றிப் போனதற்குப் பலரும், பல அரசியல், நிர்வாகக் காரணங்களைச் சொல்லக் கூடும். ஆனால் அவை வெறும் வாதப் பிரதிவாதங்களுக்கும், பழையதை நினைத்து அசைபோடவும் மட்டுமே உதவும்.

துவக்கத்தில் எதிர்ப்பட்ட தோல்விகளையும் தடைகளையும் கண்டு துவளாமல், தோளோடு தோள் கொடுத்து ஒத்துழைத்த ஊழியர்களின் நட்புக்கு நன்றி செலுத்தி, வருங்கால விரிவாக்கத் திட்டத்தை நம்பிக்கையோடு செயல்படுத்த இருப்பதை 'கெம்பிளாஸ்ட்' அதிபர் சங்கர் கூறிய போது, அரசின் உடனடியான உதவிகளும், அனுமதிகளும் கிடைத்தால் தமிழ் நாட்டில் தொழில்வளம் நிச்சயம் பெருகும் என்ற எதிர்பார்ப்பு உண்டாயிற்று.

– சாருகேசி

'பிட்' அடிப்பது எப்படி?

'பிட் அடிப்பது எப்படி?' 'சைகை மூலம் எவ்வாறு விடைகளை அறிவிப்பது?' என்பது முதல் 'தேர்வுகளில் வெற்றியடையக் குறுக்கு வழிகள்வரை பலவற்றையும் விளக்கி எழுதப்பட்ட நூல் அமெரிக்க மாணவர்களிடையே அமோக வரவேற்பைப் பெற்று வருகிறது.

அமெரிக்கா ரட்சர்ஸ் பல்கலைக் கழகத்தில் பத்திரிகை இயல் படிக்கும் மாணவன் மைக்கேல் மூர் எழுதிய புத்தகம் இது. நூலின் தலைப்பு : CHEATING – 101.

புத்தகத்தை வாங்குவது மாணவர்கள் மட்டுமல்ல. பேராசிரியர்களும் நிர்வாகிகளும் கூடத்தான்! 'எப்படி பிட் அடிக்கிறார்கள் என்று



தெரிந்து கொண்டால் தடுக்க வசதியாக இருக்குமே' என்றுதான் படிக்கிறார்கள்.

'பணத்துக்காகத்தான் இந்த நூலை எழுதினேன்' என்று ஒப்புக் கொள்ளும் மைக்கேல் மூர், 'கல்லூரிப் படிப்பில் உள்ள குறைபாடுகளை உணர்த்துவதும் நோக்கம்தான்' என்கிறான். 'உண்மையான கல்வி அறிவு வேண்டுமானால் 'பிட்' அடிக்காதீர்கள்' என்றும் மாணவர்களுக்கு அறிவுரை வழங்குகிறான்! அதே சமயம் பிட் அடிக்க வாய்ப்பில்லாத வகையில் கல்வித் திட்டத்தையும் பரீட்சை முறையையும் மாற்றி அமைக்கலாமே என்றும் யோசனை தெரிவிக்கிறான்!

- வாஷிங்டன் ஸ்ரீதரன்

சிகிச்சைக்கு முன்



BOWLEG

இந்திராணி


வயது 10

ஆபரேஷன் இல்லாமல்

சிகிச்சைக்கு பின்



சிகிச்சைக்கு முன்




CLUB FOOT

கலைமணி

வயது 4

ஆபரேஷன் இல்லாமல்

சிகிச்சைக்கு பின்



சிகிச்சைக்கு முன்



TALIPES EQVINUS

HEEL RAISED FROM THE GROUND

மதுசூதனன்

வயது 16

ஆபரேஷன் இல்லாமல்

சிகிச்சைக்கு பின்



வளைந்த இரும்புகளைக் காய்ச்சி நேர் செய்வது போல் கோவை தெலுங்குபாளையம் டாக்டர் அர்ஜுனன் மூலிகைத் தைலத்தால் வளைந்த கால் முதலிய உறுப்புகளை ஆபரேஷன் இல்லாமல் நேர் செய்கிறார். பிரதி மாதம் 21 ந் தேதி சென்னை எக்மோர், துர்கா பிரசாத் ஹோட்டலிற்கு விஜயம் செய்கிறார்.

— L .S. மணி



எல்.கே.ஜி.க்கு என்ன இண்டர்வ்யூ?

எல். கே. ஜி. அட்மிஷனுக்குக் கூட நேர்முகத் தேர்வு வைப்பதும் அதன் அடிப்படையில் ஒரு குழந்தையை நிராகரிப்பதும் எவ்வளவு தூரம் சரி? இந்தக் கேள்வியைச் சில பள்ளி முதல்வர்களிடம் எழுப்பியபோது...

திருமதி அலமேலு *(முதல்வர், வித்யா மந்திர், மைலாப்பூர்)* : நாங்கள் இது போன்ற நுழைவுத் தேர்வே வைப்ப தில்லை. காரணம், முதன் முதலாகப் பள் ளிக்கு வரும் ஒரு மூன்று வயதுக் குழந் தையிடம் 'ஏபிசிடி சொல்லு; அந்த ரைம் சொல்லு; இதைச் சொல்லு... அப்போது தான் பள்ளியில் இடம் கிடைக்கும்' என்கிற போட்டி மனப்பான்மையைப் பிஞ்சு மனத் திலேயே நாங்கள் ஏற்படுத்த விரும்புவ தில்லை. இதன் காரணமாகத்தான் மேல் நிலைப் பாடத் தேர்வுகளில் கூட நாங்கள் கிரேடு (Grade) தருகிறோமே தவிர, முதல், இரண்டாவது என்று 'ராங்க்' தருவதில்லை. இருப்பினும் இன்றைய கல்வித் திட்டத்தில் மேல் வகுப்புகளில் உள்ள கஷ்டமான பாடங்களை விளக்குவதற்கு உதவியாகப் பெற்றோர் இருப்பார்கள் என்பதால், அவர்கள் பட்டதாரிகளாக இருப்பது அவ சியமாகிறது. எங்கள் பள்ளியில், பள்ளிக்கு அருகாமையில் வசிக்கும் குழந்தைகளுக்கு முன்னுரிமை உண்டு!

கௌதம் *(முதல்வர், தி ஸ்கூல், அடை யாறு)* : எங்கள் பள்ளியில் நடக்கும் நேர் முகத் தேர்வில் முக்கியத்துவம் கொடுப்பது பெற்றோர்களுக்குத்தானே தவிர, குழந்தை களுக்கு அல்ல. 'எங்கள் குழந்தைகள் டாக்டராக வர வேண்டும்; என்ஜினியராக வர வேண்டும்' என்கிற பிடிவாத நோக் கத்தை விட்டு விட்டுச் சமூகத்திற்கு உதவுகிற

வகையில் ஒரு நல்ல மனிதனாக உருவாக வேண்டும் என்று கருதும் பெற்றோர்களின் குழந்தைகளுக்கே நாங்கள் இடம் கொடுக்கிறோம். ஏனெனில், எங்கள் கல்வி முறையின் இலக்கே சிறந்த மனிதப் பண்புகளை வளர்ப்பதுதானே த வி ர, பட்டதாரியாக ஏணிப் படி அமைத்துத் தருவது மட்டுமல்ல! இருப்பினும், குழந்தைகள் மனத்தளவிலும் உடலளவிலும் பள்ளிக்கு வரத் தயாராக இருக்கிறார்களா என்பதைக் கண்டறிவதற்காகக் குழந்தைகளிடமும் சில கேள்விகள் கேட்கிறோம். இங்கே படிக்கும் குழந்தைகளில் பெரும்பாலும் மத்தியதர, மேல் மட்டத்தைச் சேர்ந்தவர்களே என்றாலும், எங்கள் பள்ளியில் சேரக் குழந்தைகளின் பெற்றோர் பட்டதாரிகளாக இருத்தல் அவசியம் என்கிற நியதி ஏதும் கிடையாது.

திருமதி சரஸ்வதி *(முதல்வர், சரஸ்வதி மெட்ரிகுலேஷன் பள்ளி, கோடம்பாக்கம்)* : கேட்கும் கேள்விகளுக்குப் பளிச் சென்று பதிலளிக்கும் குழந்தைகளுக்கு முன்னுரிமை அளிக்கிறோம். தங்கள் குழந்தைகள் தரமான கல்வியைப் பெற வேண்டும் என்ற நோக்கில், அவர்களுக்கு அடிப்படைக் கல்வியை அறிமுகப்படுத்திப் பயிற்சியும் கொடுத்து அழைத்து வரும் பெற்றோர்கள்தான் அதிகம். இந்த நிலையில் அவர்களுடைய தயாரிப்பை நாங்கள் அங்கீகரிக்க வேண்டாமா? இதற்குத்தான் நேர்முகத் தேர்வு. இப்படிப்பட்ட குழந்தைகளுக்கு உடனடியாகப் பள்ளிப் பாடங்களைத் துவங்கவும் எங்களுக்கு வசதியாக இருக்குமல்லவா! பெரும்பாலான பள்ளிகளில் இப்படித்தான் செய்கிறார்கள். காரணம், காலப்போக்கில் குழந்தைகள் கற்க வேண்டிய விஷயங்கள் மிகவும் அதிகரித்து விட்டன என்பதால், ஆரம்பம் முதலே இந்தக் கடினமான படிப்புக்குக் குழந்தைகளைத் தயார் செய்ய வேண்டியுள்ளது. இந்த நிலையில், குழந்தைகள் நன்கு படிப்பதற்குரிய சூழ்நிலையை உருவாக்கித் தரும் பெற்றோர்கள் அவசியம். இதற்குப் பட்டதாரிகளாக இருக்க வேண்டும் என்பது அவசியமில்லை.

திருமதி பிரேம்துலாரி *(முதல்வர் இந்து மேல்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேணி)*: நாங்கள் குழந்தைகளுக்கு நுழைவுத் தேர்வு நடத்துகிறோம். மனநிலை, உடல்நிலை, பாதிக்கப்படாத குழந்தைகளைத்தான் பெற்றோர்கள் அழைத்து வருகிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ளவே நடத்துகிறோம். புதிய சூழ்நிலை காரணமாகச் சில குழந்தைகள் சரியாகப் பதிலளிக்காமல் போகும். அப்படிப்பட்ட குழந்தைகளுக்கு அட்மிஷன் கிடையாது என்று நாங்கள் மறுப்பதில்லை.

ஒரு பள்ளியில் எல். கே. ஜி. அட்மிஷனுக்காக வரும் எல்லாக் குழந்தைகளையுமே எடுத்துக் கொண்டு விட முடியாது. ஏதேனும் ஓர் அடிப்படையில் சிலர் இடமின்றித் திரும்பத்தான் வேண்டும். இதை உணர்ந்துதான் இன்றைய பெற்றோர்கள், இரண்டு வயதிலேயே குழந்தைகளை Pre-school -க்கு அனுப்பி, எல்.கே.ஜி. நுழைவுத் தேர்வுக்குத் தயார் செய்து விடுகிறார்கள். எப்படியேனும் கூடுதல் தகுதி பெற்று, அட்மிஷன் கிடைக்க வேண்டும் என்ற கவலைதான் இதற்குக் காரணம். செருப்புத் தைக்கும் தொழிலாளி ஒருவர், தமக்குப் படிப்பறிவு இல்லாதபோதிலும் தமது மூன்று வயதுக் குழந்தைக்கு டியூஷன் வைத்து ஏ, பி, சி, டி முதலியவற்றைக் கற்றுக் கொடுத்து நுழைவுத் தேர்வுக்கு அழைத்து வந்தார். இதுபோன்ற குழந்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருக்க முடியுமா! எனவே, பெற்றோர் தங்கள் குழந்தைகளின் கல்வியில் ஆர்வமுடையவர்களாக இருந்தாலே போதும்; பட்டதாரிகளாக இருக்க வேண்டியதில்லை.

நிராகரிப்புக்கான காரணங்கள் பள்ளிகளின் நோக்கில் நியாயமானவையாக இருக்கலாம். வகுப்பு நிரம்பி விட்டது; மேற்கொண்டு இடமில்லை என்றால் சரி; ஆனால் சோதனை நடத்தி நிராகரிக்கப்படும் அல்லது டொனேஷன் தர முடியவில்லை என்பதற்காக நிராகரிக்கப்படும் குழந்தைகளின் மென்மையான உள்ளம் அதன் காரணமாக எந்த அளவுக்குப் பாதிக்கப்படும் என்பதையும் சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும்.

பேட்டி : கீதா மோகன்



அடுத்த இதழில்...

●● பரபரப்பான ஒரு பதவிக் காலம்

- கவர் ஸ்டோரி

அட்டைப் படமே அசத்தி விட்டது!

வட்டமேஜை

◆ "கர்நாடகாவில் ஒரு குட்டி திபெத்" - அட்டைப் படமே அசத்தி விட்டது!
கும்பகோணம் - 1,
ஆமருவியப்பன்.

◆ கர்நாடகத்துக்கு வந்துள்ள திபெத்திய அகதிகளைக் கண்டால் அவர்களின் உழைப்புக்காக எழுந்து நின்று வணக்கம் சொல்ல வேண்டும் போல் உள்ளது. விரைவில் திரும்பட்டும் திபெத் சுதந்திரம் - வேண்டிக் கொள்வோம்.
பாண்டிச்சேரி - 3,
தா. செல்வராசன்.

◆ அப்பர் பெருமானைக் கல்லில் கட்டிக் கடலில்தான் தள்ளினார்கள் (குளத்துத் தண்ணீரில் அல்ல). 'நற்றுணையாவது நமசிவாயவே' என்று பாடி எழுந்தது கடலிலிருந்துதான். குளத்தில் அல்ல. அப்பர் பெருமான் கடலில் மிதந்து கரை ஏறிய இடம் 'கரை ஏற விட்ட குப்பம்' என்ற சிற்றூராக இன்றும் கடலூர் அருகில் இருக்கிறது.
திருவாரூர்,
கோ. திருஞானசம்பந்தம்.
(நீங்கள் குறிப்பிடுவதை மறுக்கவில்லை என்றாலும் கடலூரில் உள்ள மக்கள், குறிப்பிட்ட இடத்தை அப்பர் மிதந்த குளமாகவே கருதுகிறார்கள். - ஆ-ர்)

◆ விடுதலைப் புலிகளின் தடை விதிப்பின் சாதக, பாதக விளைவுகள் துல்லியமாக அலசப்பட்டுள்ளன (புலிகளுக்குத் தடை தலையங்கம்). தடை விதிப்புக் காற்று நிரப்பப்பட்டு, விண்ணில் உயரப் பறக்கும் அரசியல் பலூனைப் பேச்சு வார்த்தை என்ற ஊசி கொண்டு குத்திப் பார்க்கத் தலைவர்கள் முன்வருவார்களா என்பது ஐயமே!
ஈரோடு, கி. நாச்சிமுத்து

◆ 'புலிகள் தமிழகத்தில் அடக்கப்பட்டார்கள் என்பதை விட அடங்கியிருக்கிறார்கள் என்பதே சரியான கணிப்பாக இருக்கும்' என்று எழுதி, தமிழக போலீஸ் படையினரின் செயல்களையும், தமிழக அரசையும் மட்டம் தட்டியிருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன். தமிழக அரசின் கடும் நடவடிக்கைகளுக்குப் பிறகு புலிகள் நடமாட்டம் இருப்பின் அது சில சுயநலவாதிகளின் ஆதரவினால்தான். அவர்களுக்கு நாட்டுப் பற்று ஏற்பட இறைவனை வேண்டுகிறேன்.
திருமருகல், மருகல் மணியன்.

◆ புலிகளுக்கு இந்தியாவில் தடை விதித்தோடு நில்லாமல் இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் நடக்கும் யுத்தத்தை நிறுத்திச் சமாதான உடன்படிக்கை எடுக்க இந்திய அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றும் இதன் மூலம் பிரச்னைக்கு அரசியல் தீர்வு காண வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். முன்பு இப்படித் தலையிட்டுத் தானே இந்தியா ஒரு சிறந்த தலைவரை (ராஜீவ்) இழந்து நிற்கிறது.
தஞ்சாவூர், வெ. முருகானந்தம்.

◆ இவ்வளவு சொல்லுகிற பகுதி பெரியசாமிக்கு வேறு இடமே கிடைக்கவில்லையாமா? தனிமனிதராக வி.ஜி.பி. சாதித்திருக்கும் போது, N.R.I. + அரசு + பப்ளிக்' இந்தக் கூட்டணியோடு 'ப. ஹோ. கா.'வை வேறு இடத்தில் அமைத்துச் சாதனை செய்வது தானே? சின்ன சந்தேகம் : அமெரிக்காவில் வாழ்ந்திருந்தால் அவர்கள் என்ன சுற்றுப்புறச் சூழலுக்கு அத்தாரிட்டியா? வேறு யாரும் அதைப் பற்றி அவர்களிடம் சந்தேகம் எழுப்பக் கூடாதா?
சென்னை-84,
மா. சுப்பிரமணியன்.

◆ ஆர். எம். வீரப்பவின் நிலையைக் கார்ட்டூனில் விளக்கியது, 'குபீர்'ச் சிரிப்பை வரவழைத்தது!
மேட்டூர் அணை,
ஆர். கருணாகரன்.

◆ ஆளும் கட்சிக்கு 'ஜால்ரா' போடும் தமிழக காங்கிரஸ்காரர்கள் மத்தியில் 'தனித்து' விளங்கும் டெக்லான் குப்புசாமி பாராட்டுக்குரியவரே! இவருக்கு இருக்கும் தன்மானமும் கொள்கைப் பிடிப்பும் இனியாவது மற்ற காங்கிரஸாருக்கும் வருமேயானால், உண்மையில் தமிழக காங்கிரஸின் எதிர்காலம் பொற்காலமாகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை!
திண்டுக்கல் - 1,
எப்போதும் வென்றான்.

◆ 'சுப்ரஜா என்ன சொன்னாள்?' சிறுகதை படித்தேன். கல்யாணத்தை எதிர்நோக்கியிருக்கும் பெண்கள் சுப்ரஜாவை நிச்சயமாக முன்மாதிரியாகக் கொள்ளலாம்.
ஸ்ரீரங்கம்,
மாலினி சௌரிராஜன்.

◆ புஷ்பா தங்கதுரை எழுதிய 'பொறுப்பு' சிறுகதை ஒரு நல்ல கதையைப் படித்த திருப்தியைத் தந்தது!
குமராட்சி, எம். பிரபு.

◆ "கடலூர் சிறப்பிதழ் உண்மையிலேயே பக்கத்திற்குப் பக்கம் படு ஜோர். குறிப்பாக "இவர் ஒரு மக்கள் கலெக்டர்" பேட்டியைப் படித்ததும் இப்பேர்ப்பட்ட ஒரு கலெக்டர் எல்லா மாவட்டங்களுக்கும் வர வேண்டும் என்று என் மனம் பிரார்த்திக்கிறது.
தக்கோலம், அ. முஸ்தபா.

◆ மக்களுக்கு மனமாரச் சேவை செய்யும் சொக்கலிங்க ஆசாமி போல் ஒவ்வோர் ஊரிலும் ஒருவர் இருந்தால் ஊரே சிறந்து விளங்கும் என்பதில் ஐயமேயில்லை!
நக்கரை, சீமா இராம்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர்: வி. வைத்தியநாதன். ஆசிரியர் : கி. ராஜேந்திரன். இணை ஆசிரியர் : சீதா ரவி.
முகவரி : ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை - 600032. தொலைபேசி - ஆசிரியர் குழு அலுவலகம்: 2345624; சர்க்குலேஷன் மானேஜர் : 2345623; விளம்பரம் - சந்தா : 2345622; டைரக்டர் : 2345621.
ஆண்டுச் சந்தா - உள்நாடு : ரூ. 156/-; வெளிநாடு - கப்பல் தபால் : ரூ. 400/-; விமானத் தபால் ரூ. 1050/-.
ஆறு மாதச் சந்தா - உள்நாடு : ரூ. 78/-; வெளிநாடு - கப்பல் தபால் ரூ. 200/-; விமானத் தபால் ரூ. 525/-.



பறித்தெடுத்த பழங்களிலிருந்து ஜூஸ் கான்சென்ட்ரேட் இதற்கு முன்பு இவ்வாறு தயாரிக்கப்படவில்லை.

இயற்கையினால் உண்டாக்கப்பட்ட சுவை. உண்மையிலேயே தெவிட்டாத சுவை.

பறித்தெடுத்த பழங்களிலிருந்து தயாரிக்கப்பட்டது. அத்தனை கதுப்புப் பசையுள்ளது.



குழம்பானது மற்றும் உண்மையானது – மற்ற கான்சென்ட்ரேட் போல் அல்லாமல்.

Volfruit
ஜூஸ் கான்சென்ட்ரேட்

அபரிமிதமான பழச்சுவை அடங்கியுள்ளது பாட்டிலிலே.

தமிழ் நாட்டிலும், மகாராஷ்டிராவிலும் மட்டும் கிடைக்கும்.

SPEER 92 A TM


அழகொளிரும் மேனி. ஸின்தால் சான்டல் மேனி.
இப்போது நீங்கள் ஸின்தால் சான்டல் மூலம் பெற்றிடலாம் குறைபாடற்ற, மாசில்லா மேனியை. ஸின்தாலில் மட்டுமே உண்டு - மேனியில் மாசு மற்றும் துர்நாற்றத்தை உண்டாக்கும் பாக்டீரியாவை அழிப் பதற்கான TCC. மென்மையான, அழகொளிரும் மேனிக்கு தொன்றுதொட்டு பயன்படுத்தப்பட்டுவரும் சந்தனத்தின் தன்மைகள்.
இன்றைய நங்கையர்க்கான இன்றைய சான்டல் சோப்.
CINTHOL
Godrej
CINTHOL
Sandal